விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு	121
கௌடல்ய அர்த்த சாஸ்திரம ...	122
காளிதாஸ மஹா கவி	125
மின்சாரப் பிரவாகம்	127
ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம்	129
ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்காராசாரிய சுவாமிகள் அவர்கள்மீது தோத்திரப் பாடல்கள். ...	131
நமது சிறு கதை—(பீச்சாங்கத்தி)	132
தேசிங்கு ராஜன்	137
இரஞ்சிதம்—(நாவல்)	142
சிறுத்தொண்டர்—(நாடகம்)	148
வேடிக்கைத் துணுக்குகள்	153
சிறுவர்களுக்கான பக்கங்கள்— (4) நரஸிம்மாவதாரம் ...	154
ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	157
வர்த்தமானக் குறிப்புகள்	160

சித்திரப் படங்கள்
அயனைச் சிறையிட்டது.

OFFICE OF THE REGISTRAR ... 10 NOV 1926 ... MADRAS

JL
Y:M211, N08VB
N26.18.4.
218376

என் கொழுப்புள்ள ஆகாரம்?

சரீரம் அல்லது மூளையினால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்திலும் குறைகிற சக்தியை திரும்பவும் நாம் அடையவேண்டும். உடம்பில் நிரம்பவும் வியர்த்தால் வெளியில் போன ஜலத்திற்கு பதில் ஜலம் உள்ளே செலுத்தவேண்டும். அதுபோல நரம்புகளும் தசைகளும் தேய்ந்து போனால் அவைகளை சீர்படுத்த ஆகாரம் வேண்டும்.

உணவில் குணமேயன்றி அளவு முக்கியமல்ல

ஒரு கொதிப்பரை (பாய்லர் Boiler) தண்ணீர் காய்ச்ச உபயோகமற்ற கட்டைகளை ஏராளமாக எரித்தால் நெருப்பு திணியடைவதைத் தவிர, நீராவி நிரம்ப வருவது கிடையாது. அம்மாதிரிதான் உடம்பும். நிரம்ப உணவு சாப்பிடுவதால் உபயோகமற்ற சாமான்களை வெளியே தள்ள உடம்புக்குக் கஷ்டமுண்டாகி அதனுடைய சக்தியைக் குறைக்கிறது. பலத்தைக் கொடுக்கும் உணவைக் கொஞ்சம் உட்கொண்டாலும் உடம்புக்கு சிரமத்தைக் கொடுக்காததோடு விருத்தி செய்கிறது.

அதனால் தான் நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) உண்மையான பால் கஞ்சியாய் உடம்பினாலும், மூளையினாலும் வேலை செய்கிறவர்களுக்கு உபயோகப்படுகிறது. அதில் ஒருமித்திருக்கும் ஸத்து அவ்வளவும் சரீரத்தில் பரவி மனதிற்கும் விருத்தியடைய வேண்டியதற்கு இன்றியமையாத உத்ஸாகத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்திலிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில்
அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO S ISS
CONDENSED MILK CO.,
Post Box No. 396
CALCUTTA.

திருப்புகழ்
பாராயணத் திருமுறை

“திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை” என்னும் இந்நூல் இத்தமிழ் நாடெங்கும் திருப்புகழ் என்னும் தேனை மாரியாகப் பொழிபவரும், திருப்புகழடியார் திருவடிச் சென்னியார் என்னுங் காரணப் பெயர் வாய்ந்தவருமாகிய பிரம்மஸ்ரீ **வள்ளிமலை ஸ்வாமி சச்சிதாநந்தா** அவர்களால் தொகுக்கப்பட்ட தொன்றாகும். திருப்புகழ்த் தொகுப்புக்கள் பலவுளவே, இத்தொகும்பு ஏனோ எனின் திருப்புகழ் என்னும் அருட் பிரபந்தமானது ஸகல ஜீவர்களுக்கும் இம்மை மறுமை வீடுகளைத் தரும் கற்பக விருக்ஷமாகும். அதில் ஒவ்வொரு சந்தப்பாவும் ஒவ்வொரு மஹா மந்திரமாகும். ஆதலாற்றான் திருப்புகழ் படிப்பதை “பாராயணம்” என்று பெரியோர் வழங்குகிறார்கள். இப்பாராயணத்தினால் வீட்டின்ப மொன்றினையே நாடும் உத்தமாதிகாரிகளுக்கு இம்மைச் சுக முண்டாவதோடு, பல கோடி சமயப் பொதுக் கடவுளாகிய முருகப் பெருமானது அருளும், தரிசனமும், ஞானமும், அனுபவமும் உண்டாகும். இம்மை, மறுமைகளை நாடும் மத்திய அதிகாரிகளுக்கு இகத்தில் சகல செல்வ யோக மிக்க பெரு வாழ்வும், பரத்தில் வானவர் போற்றும் துறக்க வின்பமும் உண்டாகுமென்பது திண்ணம். இம்மைப் பயனொன்றையே நாடும் அதம அதிகாரிகளுக்குக் கல்விப் பெருக்கும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் இன்னவை பலவும் எற்படும். இதில் அணுவளவும் ஐயமின்று. 10-படங்களுடன், சாதா பைண்ட் ரூ. **1**; கலிகோ ரூ. **1-4-0**

பெண்களுக்கு! ஆபரணமே அழகு!

ஜர்மனி தேசத்து “டைமன் எக்ஸ்ட்ரா” என்னும் கமலம்.

சீமைக் கமலம் போன்றது. “**Diamond-extra**” மிக்கப் பிரகாசமுடையது.

லூஸ் தனி கமலம் விலை:—சன்னம் காரட்டு ரூபா.	7	8	0	
” ” ”	5	8	0	
ஷை உருசைஸ் காரட் விலை ரூபா.	4	0	0	
” ” ”	2	8	0	
கம்மல் or தோடு சிறு ஜதை விலை	ரூ. 18 முதல் ரூ. 22			
ஷை நடுத்தரம் சைஸ்	ரூ. 25 ... ரூ. 30			
ஷை பெரிய சைஸ்	ரூ. 32 ... ரூ. 40			

3-கல்வைத்த பேசரி விலை ரூ.	6	0	0	கிளாவர் ஜதை கடுக்கன்	ரூ. 12
8-கல்வைத்த பேசரி விலை ரூ.	9	8	0	ஒத்தக்கல் கடுக்கன்	ரூ. 16
கிளாவர் மூக்குத்தி விலை ரூ.	5	0	0	புலாக்கு	ரூ. 12
மூக்கு முத்து விலை ரூ.	4	0	0	மூக்குத் திருகு	ரூ. 4, 5

நகைகள் பவுன் தங்கத்தில் கட்டியவை.

கேட்லாக் தமிழில் கிடைக்கும் இதர நகைகளும் ஆர்டர்மேல் செய்துகொடுக்கப்படும். மாட்டல், பில்லை, முகப்பு, அட்டிகை முதலியவைகள் இதே ஜர்மன் கமலத்தில் கட்டித் தரப்படும். அசல் சீமைக் கமலம்போலவே யிருக்கும்.

கிரந்தி. சுப்ரமண்யஞ் செட்டி & சன்,
69-நாராயண முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

A. (No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு :—தேபிலேக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேபிலேக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினுல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, பூநீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை :

1	நெ. பெரிய செட் 1-க்கு	ரூ. 5 0 0
2	நெ. மத்திம செட் 1-க்கு	ரூ. 3 0 0
3	நெ. சிறிய செட் 1-க்கு	ரூ. 2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனும்.

Balajee & Co., Silk Merchants,
Benares City.

218376.

உ. வேலுமயிலுந் துணை

ஷண்முக விஜயம்

திருப்புகழ்
விருத்தியுரை

படங்களுடன்

விலை அணா 12

முதல் தொகுதி : : 6-படை வீடுகள்

டெமி அளவில், 64-பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பெதர்வெயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன.

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்புக்கு ரூ.	4	12	கிளேஸ் தனிச்சஞ்சிகை	அணா	7
பெதர்வெயிட் காகிதப்பதிப்பு ,,	6	0	பெதர்வெயிட் ஷை	,,	9

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.— * * நமக்குக் கிடைத்துள்ள விருத்தி உரை, முதனூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனால் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி.— * * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழின் பெருமையை நாம் சொல்லவல்லோ மல்லேம். அதனைத் தமிழ் மறை என்பார் அறிஞர். பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். * * முருகன் அடியார்களும் திருப்புகழ் விருப்புடையார்களுமான தமிழர்கள் இதனை ஆதரிக்கவேண்டு மென்பதை நாம் சொல்வது மிகையாம். * * இந்த நன்முயற்சியைத் தமிழர்கள் போற்றுவார்களாக.

ஸ்வராஜ்யா.— * * பெயர் மாத்திரையில் விருத்தியுரையாய் இராமல், உட்பொருளையும் பலரும் அறியக்கூறும் விருத்தியுரையாய் உளதென்பதைக் குறிப்பிடவேண்டும். பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் களிவரெனக் கருதுகிறோம்.

குமரன்.— * * அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் போன்ற நூல்களுக்கு நல்ல பதிப்புகள் வெளியிடப் பெறுவதும் ஓர் ஆனந்தமே யாகும். இத்தகைய ஆவல் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு ஏற்பட்டதைப்பற்றி நாம் மகிழ் வெய்துகிறோம். * * தமிழைப் புதிதாகக் கற்கும் மாணவருக்கும் திருப்புகழ் படிப்பதில் துணை செய்வதாகும். பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்:—* * உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி, கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. சிவபெருமானுக்குக் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படம் திருவருள் விலாஸத்தோடு கூடியனவாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்ட மாத்திரத்தே உருகச்செய்யும் பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஸமரஸ போதினி:—* * * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்குவிளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே இஃது புலவர் விருந்தாகத்தக்கதே என நாம் கூறுவோம்.

விலாஸம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

JL N08VB 26.18.4

கந்தபுராணச்சுருக்கம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்கம் அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. **3**

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் ...	0	12	0
குசலோபாக்கியானம் மூலமும் அரும்பதவிளக்கமும்...	0	12	0
உத்தியோகம் (நாடகம்)	0	6	0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை ! **ஒரு மாதம் வரை** பாதி விலை !!



அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக் கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப் படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

☞ ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம் மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அ௵. **5** பலம் **15** அ௵.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் **1**புட்டி அ௵ **4.**

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனாம்.

உடனே எழுதுங்கள்.

Address.—**Manager,** (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல

(இன்னும்)

வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பேரும் புகழும் பெற்றிருக்கின்றன!

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்

கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26-பிராட்வே, மதராஸ்.

இனும்! இனும்!! முற்றிலும் இனும்!!!

'C' ரிஜிஸ்டர் 'C' Regd.

டைம்பீஸ் டைம்பீஸ்



இனும் இனும்

எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனுமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனுமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும் அன்புநெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.

மாதிரிப் பிரதி இனும்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

டிரெயினிங் ஸ்கூல் ஆரம்ப கணிதம்

A Training School Arithmetic

(BY MR. P. SITARAMAN, B.A., L.T., SUBORDINATE EDUCATIONAL SERVICE.)

(Approved by the Text-Book Committee.)

Prepared in accordance with the Departmental Scheme of Work for Training Schools with notes on the teaching of topic at the beginning of each chapter with nearly thousand graduated examples with hints and solutions for difficult questions, copious mental exercises and with three appendices containing (A) Solutions to T. S. L. C. Examination Papers in Arithmetic (B) Notes of Lessons for important topics in Space and Number Work & (C) Scheme of Lessons in Space and Number Work for all the classes of Elementary Schools. 2nd Edition Revised & Enlarged. Price Re. **1—0—0**.

போதனுமுறைப் பாடசாலைகளில் பயின்றுவரும் எலிமெண்டரி கிரேட் மாணுக்கர்களின் உபயோகத்திற்காக, சென்னை, வித்யா இலாகா டைரக்டரவர்களால் பிரசுரிக்கப்பட்ட பாடக்கிரமத்தைச் (ஸிலபஸ்) யொட்டி கவர்ன்மெண்ட் போதனுமுறைப் பாடசாலைகளில் எல்லா வகுப்புகளுக்கும் அநேக வருஷங்களாக கணித ஆசிரியராயிருந்தவரால் எழுதப்பட்டது.

அநேக போதனுமுறைச்சாலைகளின் பிரதம ஆசிரியர்களாலும், கணித ஆசிரியர்களாலும் மற்றும் கல்வி இலாகாவிலுள்ள இதர உத்தியோகஸ்தர்களாலும் நன்குமதிக்கப்பட்டது.

பல வருஷங்களாக கவர்ன்மேண்ட் டிரெயினிங் ஸ்கூல் ஆசிரியராகவிருந்த

பி. சீதாராமன், பி.ஏ,, எல்.டி., அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலின் முக்கிய அம்சங்கள்: —

(1) சென்னை வித்யா இலாகா டைரக்டர் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட பாடக்கிரமம் அல்லது ஸிலபஸ் பிரகாரம் ஒவ்வொரு விஷயமும் வரிசைக் கிரமமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

(2) அந்நியர் உதவியின்றி மாணுக்கர்கள் தாமே சுலபமாய் கற்றுக்கொள்ளும்படியான எளியநடையில் எழுதப்பட்டிருப்பதுடன் விஷயங்கள் தெளிவாகும்பொருட்டு அநேகவிதமான மாதிரிக் கணக்குகள் வழியுடன் செய்து விளக்கப்படுகின்றன. தவிர அப்பியாசத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கும் கணக்குகளுள் கொஞ்சம் கடினமாயிருப்பவைகளுக்கு ஆங்காங்கே குறிப்புகள் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

(3) ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்தில் விளக்கப்பட்டிருக்கும் மாதிரிக் கணக்குகள் நன்றாய் மனதில் பதியும் வண்ணம் அநேக இலேசான மனக் கணக்குகளும் போடப்பட்டிருக்கின்றன.

(4) 1915-ம் வருஷ முதல், T. S. L. C. பரீக்ஷையின் கணக்கு கேள்விகள் வழியுடன் போடப்பட்ட ஒரு அநுபந்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(5) ஆரம்ப கணிதத்தில் முக்கியமான விஷயங்களுக்குப் பல பாடங்கள் ரூபமாக கிரமமான மாதிரி பாடக் குறிப்புகள் எழுதியிருக்கிறது. தவிர, படங்கள் மூலமாக அநேக விஷயங்கள் திருஷ்டாந்தப்பட்டிருக்கின்றன.

(6) எலிமெண்டரி பாடசாலைகளின் ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புகளுக்குக் கணிதபாடக் கிரமம் அல்லது ஸிலபஸ் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(7) க்ஷேத்திர கணித விஷயங்கள் வேண்டிய அளவு, படங்கள் மூலமாகவும், கட்டப்பட மூலமாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

(8) கூடியவரையில் பெருக்கல் வகுத்தல் செய்வதற்குச் சுருக்கமான வழிகளும், கணக்குகள் செய்ய சுலபமான முறைகளும், பின்னங்கள், தசாம்ச பின்னங்களை அறிந்துகொள்வதற்கு எளிய முறைகளும் ஏராளமாய்க் கையாளப்பட்டிருக்கின்றன.

(9) சிறிது ஊக்கமுள்ள மாணுக்கர்கள் தாங்களே முழுவதும் கற்றுக் கொள்ளும்படியான எளியநடையிலும் உற்சாகம் ஏற்படக்கூடிய விதமாயும் எழுதியிருப்பதுமல்லாமல், இதை முற்றும் ஒருதரம் படிப்பவர் பிரயாசையில்லாமல், கணிதபரீக்ஷையில் தேறலாம். பள்ளிக்கூடங்களில் படிப்பவர்களுக்கும், படித்துவிட்டவர்களுக்கும் இன்றியமையாதது. ஆகையால் ஒவ்வொரு மாணவரும் இப்புத்தகத்தின் உபயோகத்தை முற்றிலும் அடைவார்களென்று நம்பப்படுகின்றது. சீர்திருத்திய இரண்டாம் பதிப்பு—விலை ஒன்றே.

மானேஜர்:— விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹார் (ரேஜிஸ்டர்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினுல் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தாக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற சென்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு	(4-டிராம் அல்லது $\frac{1}{2}$-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு ,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம் ,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி ,,	($\frac{1}{2}$-டிராம்)	,,	0—8—0
மாதிரி ,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு		,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள் :—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸித், மார்க்கட், பம்பாய்.



அயனைச் சிறையிட்டது

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18	அக்ஷயஸு சித்திரைமீ :: 1926-ஸு ஏப்ரல் மீ	பகுதி 4

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

அதல விதலமுத லந்தத்த லங்களென
அவனி யெனஅமரர் அண்டத்த கண்டமென
அகில சலதியென எண்டிக்குள் விண்டுவென
அங்கிபாநு
அமுத கதிர்களென அந்தித்த மந்த்ரமென
அறையு மறையென அருந்தத்து வங்களென
அணுவி லணுவெனநி றைந்திட்டு நின்றதொரு
சம்ப்ரதாயம்
உதய மெழஇருள்வி டிந்தக்க ணந்தனிவி
ருதய கமலமுகி ழுங்கட்ட விழ்ந்துணர்வி
லுணரும நுபவம னம்பெற் றிடும்படியை
வந்துநீமுன்
உதவ இயலினியல் செஞ்சொற்ப்ர பந்தமென
மதுர கவிகளில்ம னம்பற்றி ருந்துபுகழ்
உரிய அடிமையுனை யன்றிப்ப்ர பஞ்சமதை
நமபுவேனோ?
தகத தததகத தந்தத்த தந்ததத
திதிதி திதிதிதிதி திந்தித்தி திந்திதிதி
தகுகு தகுதகுகு தந்தத்த தந்தகுகு
திந்திதோதி
சகக சகசெணக தந்தத்த குங்கெணக
டிடிடி டிடிடிடிடி டிண்டிட்டி டிண்டிடிடி
தகக தகதகக தந்தத்த தந்தகக என்றுதாளம்
பதலை திமிலைதுடி தம்பட்ட மும்பெருக
அகில நிசிசரர்ந டுங்கக்கொ டுங்கழுகு
பரிய குடர்பழுவெ லும்பைப் பிடுங்காண
துங்ககாளி
பவுரி யிடஅரிபு லம்பப்ப ருந்திறகு
கவரி யிடஇகலை வென்றுச்சி கண்டிதனில்
பழநி மலையின்மிசை வந்துற்ற இந்திரர்கள்
தம்பிரானே!

(வி - ரை.) உலகத்தில் தோன்றும் பொருள்களெல்லாம் ஜடபேதங்களே யென்றும், எங்கும் யாவற்றினும் மறைந்திருப்பது பரம்பொருள் ஒன்றே யென்றும் அறிந்துகொள்வதே ஞானோதயமென்று சொல்லலாம். அவ்வித அறிவு உதித்தவுடன், பூதபேதங்களினால் மருண்டு காமக்குரோதம் முதலியவைகளினால் நிரம்பியிருக்கும் மனமானது அவைகள் நீங்கப்பெறும்; புலன்களுக்குப் புலப்படும் பூதபேதங்கள் பொய்யென்பது விளங்கும். பிறகு இதயமானது, சூரிய கிரணங்கள் பட்டமாத்திரத்தில் தாமரை மலர்வதுபோல் விரிந்து, அன்பு நிறையப் பெறும். அம் மெய்யன்பானது, அடியார் மனத்திலுறையும் மெய்ப்பொருளான ஞானதேசிகனை - ஞானசொரூபியை - கருணைக்கடலை - முருகப்பெருமானை - தன்னகத்துள்ளேயே அறிவினால் அறியச் செய்யும். அதுவே உண்மையான அநுபவம் என்றும், பேரின்பம் என்றும் ஞானம் என்றும், பலவாறாகக் கூறப்படும். அவ்வாறு அறிவினால் அறிந்து முருகப்பெருமானை அநுபவித்தவர் மீண்டும் மாயத்தோற்றமான பிரபஞ்சத்தைச் சத்தியமென நம்பவேமாட்டார்கள். அவ்வித அநுபவத்தைச் சுவாமிகள் தாம் பெற்றதாக இப்பாடலில் தெளிவாகக் கூறுகிறார்.

பரிய - பாரிய=பருத்த. கீழுலகங்கள் ஏழு; அவையாவன:—அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம்.

சிவதத்துவங்கள் ஐந்து; அவையாவன:—சுத்தவித்தை(ஞானம் அதிகரித்துக் கிரியை குறைந்தது), ஈச்சுரம் (ஞானம் குறைந்து கிரியை அதிகரித்தது), சாதாக்கியம் (ஞானமும் கிரியையும் சமமாயிருப்பது), சத்தி (கிரியைநாடல்), சிவம் (ஞானம் ஒன்றல்). இயல்=இசை, தமிழ். அமுத கதிர்-சந்திரன். எட்டுக் குலபருவதங்களாவன:—இமயம், ஏமகூடம், கைலை, நிடதம், நீலம், மந்தரம், விந்தம், கந்தமாதநம்.

நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற் பத்தடுத்த கோடி யுறும்.

விவேக போதினி

தொ. 18] அக்ஷயஹூ சித்திரைமீ [ப. 4

கௌடல்ய அர்த்தசாஸ்திரம்

KAUTALYA'S ARTHASASTRA

முன் ஸஞ்சிகையில் வித்யையின் நான்கு பிரிவுகளுள் ஆன்வீக்ஷிகீ, த்ரயீ இவற்றின் விவரணம் கூறப்பட்டது வார்த்தா, **தண்டநீதி** இவை விவரிக்கப்படுகின்றன.

வார்த்தா :—இதில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

(1) **விவசாய சாஸ்திரம்** :—பலவித பூஸாரங்கள், விதைகள், விதைக்கும் விதம், எருக்கள் முதலியவற்றின் விபரங்கள் அடங்கியுள்ளது; இது சம்பந்தமான சாஸ்திரம் பராசரரால் கூறப்பட்டுள்ளது.

(2) பாசுபால்யம் :—பசுக்கள், குதிரைகள் முதலிய நாற்கால் பிராணிகளின் போஷணம், அபிவிருத்தி முதலான தகவல்களுள்ளது. கௌதமர், சாலிஹோத்திரர் முதலானவர்கள் இவ்விஷயமாய் நூல்கள் செய்துள்ளார்.

(3) வியாபாரம் :—சாமான்கள் வாங்குதல், விற்பனை செய்தல் இவை சம்பந்தமானமுறைகள், தந்திரங்கள் முதலியன விதேக ராஜனால் செய்யப்பட்டுள்ள சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

இவ்வித வித்யையின் சகாயத்தால், இராஜ்யத்தில் தானியங்கள், கால் நடைகள், தங்கம், வெள்ளி, மற்றைய உலோகங்கள், பலவித தனங்கள் இவற்றின் விருத்தி ஏற்படும். தனதான்ய ஸம்பத்தாலும், இதனால் உண்டாகக்கூடிய ஸேனா பலத்தாலும் அரசன் சத்துரு பக்ஷத்திலுள்ளோரை வசீகரம் செய்துகொள்ளவும், தனது பிரஜைகளின் பிரீதியை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும் கூடும்.

தண்டநீதி:—முற்கூறிய ஆன்வீக்ஷிகீ முதலிய மூன்று பிரிவுகளால் ஏற்படக்கூடிய யோக க்ஷேமங்களைச் சாதிக்கக்கூடியது தண்டநீதி என்பது. யோகக்ஷேமம் சாதனமாவது:—திரவியாதிகளைச் சம்பாதித்தல், சம்பாதித்ததை ஸம்ரக்ஷித்தல், ஸம்ரக்ஷித்ததை விருத்தி செய்தல், விருத்தி செய்ததை ஸத்பாத்திரங்களில் செலவிடல் இவை முதலிய ஜீவனோபாயங்கள். இவை சம்பந்தமான தகவல்களை எடுத்துக் கூறும் சாஸ்திரத்துக்குத் **தண்டநீதி** எனப் பெயர். அரசன் தண்டநீதியை அனுஸரித்து, இராஜ்யபரிபாலனம் செய்வது அவசியம்.

சத்துருவை ஜயிப்பதற்கு **ஸாமம், தானம், பேதம், தண்டம்** எனச் சொல்லப்பட்ட நால் வகை சாதனங்களுள், **தண்டமே** வெகு பயன்படக்கூடும் என்றும், ஆகையால், அரசன் எப்போதும் இதைக் கைக்கொண்டே நடக்கவேண்டுமென்றும் சில அர்த்த சாஸ்திரப் பூர்வாசிரியர்களின் அபிப்பிராயம். இது விஷயத்தில் கௌடல்யனது அபிப்பிராயம் வேறுபட்டுள்ளது. அரசன் சாமான்யமாய்த் **தண்டம்** என்பதைப் பிரயோகித்து ஐசுவரியம் பெறக் கருதுவது பயன்படாது. கடுந்தண்டனை விதிப்போனை பிரஜைகள் வெறுப்பார்கள்; மிகவும் இலேசான சிக்ஷைசெய்வோனை அவமதிப்பார்கள்; காலம், தேசம், குற்றம் இவைகட்கு ஏற்றவாறும், காமம், க்ரோதம் முதலிய இழிகுணங்களை ஒழித்தும், நிஷ்பக்ஷபாதமாய்த் தண்டனையளிக்கும் அரசனே எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டு, செழிப்புற்று விளங்குவான். இவ்வித செங்கோன் மன்னனால் ஆளப்பட்ட பிரஜைகள், தர்மம், அர்த்தம், காமம் என்கிற மூவித புருஷார்த்தங்களும் நிறைந்து சுகமாய் வாழ்வார்கள். 'நியாய ஒழுங்குகளுக்கு விரோதமாய், தன் மனம்போனபடி ஆக்கிரஹத்தாலோ, லோபாதி துர்க்குணங்களாலோ தண்டனைகள் விதித்து, சாதாரணப் பிரஜைகளையும், தவசிகள் முதலான பெரியோர்களையும் வருத்தும் மன்னன், மன அமைதியும் சாசுவத ஐசுவரியமும் அடையான். குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடுவதும் பிசகு: இவ்வாறு விட்டுவிடில், பெருமீன் சிறுமீனை இம்சித்து அழிப்பதுபோல் தேகவலிவு மிகுந்தோர் பலவீனர்களை உபத்திரவிப்பார்கள்; தேசத்தில் க்ஷேமக்குறைவு

ஒல்லும் கரும முடற்று பவர்கேண்மை சொல்லாடார் சோர விடல்.

ஏற்படும். ஆகையால் வர்ணாசிரம முறைகட்குக் கட்டுப்பட்டு நடந்தும், தத்தம் கடமைகளைச் சரிவர அனுஷ்டித்தும், தண்டநீதியை யனுஸரித்து அரசனால் காப்பாற்றப்பட்டும்வரும் ஜனஸமூகமானது, சொந்த கிருகத்தில் விசாரமற்றுச் சொஸ்தமா யிருப்பதுபோல், சுகமாய் வாழக் கூடும்''.

பிரகரணம் 2

வ்ருத்த ஸம்யோகம்

ஆன்வீக்ஷிகாதி வித்யைகள் மூன்றும் தண்டநீதியை ஆதாரமாயுள்ளவை. தண்டமும் விநயத்தைச் சார்ந்திருக்கிறது. சாஸ்திரஞானத்தினால் ஏற்படக்கூடிய விநயத்தோடு கூடிய தண்டஅனுஷ்டானமே பிரஜைகளின் யோக க்ஷேமத்தைச் சாதிக்கக்கூடியது.

விநயம் இருவிதம் பூர்வஜன்ம வாசனையால் ஸ்வாபாவிகமாயுள்ளது; மற்றொன்று வித்யாதி விசேஷக்கிரியைகளால் உண்டாகக்கூடியது. எவ்வாறு சில வஸ்துக்களே சாணைபிடிக்கப்பட்டுக் கூர்மையாகுந் தன்மையுள்ளனவாகுமோ, அவ்வாறே ஸ்வாபாவிகமாயுள்ள புத்தி குணங்களுள்ளவர்களிடமே வித்யோபதேசமானது விநய சாதனமாகப் பயன்படும். ஆகையால் எல்லாரும் வித்தியாப்பியாசத்திற்குத் தக்க அதிகாரிகள் ஆகார்களென்பதும், சிலர் விஷயத்தில்தான் வித்தியோபதேசம் நற்பயனை யளிக்குமென்பதும் கருத்து.

கல்விகற்கச் சாதனமாயுள்ள சுபாவ குணங்களாவன :—

(1) சுச்ரூஷா :—கேட்கத்தக்க விஷயங்களைக் கேட்கவேண்டுமென்கிற ஆவல்.

(2) ச்ரவணம் :—மேற்கூறிய ஆசை யிருக்கும்போது, தகவல்களைக் கேட்டல்.

(3) க்ரஹணம் :—கேட்டுள்ள விஷயங்களின் அர்த்தங்களை யறிதல்.

(4) தாரணம் :—கேட்டறிந்த பொருளை அடிக்கடி நினைந்து நினைந்து, மனதில் தரித்துக் கொள்ளல்.

(5) விஞ்ஞானம் :—இவ்வாறு ஸ்மரிக்கப்பட்ட விஷயங்களுள், என்னென்ன சாத்தியம், என்னென்ன அசாத்தியமானவை என்று விவேகித்தறிதல்.

(6) ஊஹம் :—சொல்லப்படாத வஸ்துக்களையும் குறிகளாலறிதல்.

(7) அபோஹம் :—யுக்தியற்ற விஷயங்களை நிராகரித்தல்.

(8) தத்வாபிநிவேசம் :—விஷயங்களின் நிஜஸ்வரூபத்தைப் பற்றி நிஷ்கிருஷ்டமான ஞானமடைதல்.

மேற்கூறிய குணங்கள் பொருந்திய சிஷ்யன் எந்தெந்த வித்யைகளில் எவரெவர் தேர்ச்சியுள்ள ஆசிரியர்களோ அவரவர்களிடமிருந்து, அந்தந்த வித்யைகளை அவரவர் கட்டளைப்படி கற்கவேண்டும்; அக்காலங்களில் குருபரிசரணம் முதலிய விரதங்களையும் அனுஷ்டித்து வரவேண்டும்.

மூன்றாவது அல்லது ஐந்தாவது வயதில் சௌளம் பண்ணிக்கொண்டு அக்ஷராப்பியாஸம் செய்யவேண்டும். பிறகு கணிதம் கற்கவேண்டும். பிறகு உபநயன ஸம்ஸ்காரமடைந்து, காயத்ரி உபதேசம் பெறவேண்டும். அப்பால், தேர்ச்சியுள்ள ஆசிரியர்களிடமிருந்து த்ரயீ, ஆன்வீக்ஷிகி வித்யைகளை அப்பியஸிக்க வேண்டும். தக்க உபதேசகர்களிடமிருந்து வார்த்தா எனும் வித்யையும், தண்டநீதி பிரவசனத்திலும், அனுஷ்டானத்திலும் ப்ரவீணர்களிட மிருந்து அவ்வித்யையும் கற்றறிய வேண்டும். பதினாறு வயது வரையில் பிரம்மசரிய விரதத்தை யனுஷ்டிக்க வேண்டும். பிறகு வ்ரதஸமாபனம் செய்து, விவாகம் பண்ணிக்கொண்டு, கிருஹஸ்தாசிரமத்தில் பிரவேசித்து, அது முதல் எக்காலத்திலும் கல்வியில் சிறந்த பெரியோருடன் கூடி விநயசாதனத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்.

அரசர்கள் விஷயத்தில் அப்பியாஸக்கிரமம் :— தினத்தின் முதற்பாகத்தில், யானை ஏற்றம், குதிரை யேற்றம், ரதப்பயிற்சி, தனுர் வித்யை கற்றல், ஆயுதப்பழக்கம் இவை செய்யப்படவேண்டும். மூன்றாவது பாகத்தில், ஸ்ரீராமாயண மஹாபாரதாதி கதைகள்; மீமாம்ஸா சாஸ்திரம், மனு முதலானோரின் தர்மசாஸ்திரங்கள், அர்த்த சாஸ்திரங்கள் இவைகளைக் கேட்டுப் புத்தி தெளிவடையவேண்டும். பகல் மத்திய பாகத்திலும், ராத்திரியில் நித்திரை, இதர காரியங்களைக் கவனித்தல் முதலியன போக மிகுதியிருக்கும் காலத்திலும், முன்னர் கேட்டறிந்துள்ள விஷயங்களைச் சிந்தனைசெய்து திடப்படுத்திக் கொள்வதுடன், அபூர்வ ஞானபாகங்களை சிரவணம் செய்யவேண்டும்.

அடிக்கடி சிரவணம் செய்வதால் முக்காலத்திலும் பயன்படக்கூடிய புத்தி உண்டாகிறது;

அதிலிருந்து போகம், அதாவது சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள விஷயங்களை அனுஷ்டானம் செய்வதில் சிரத்தை உதிக்கும்: இதனால் உயர்ந்த மனோபாவமும், ஸத்துவமும் ஏற்படும். ஆகையால்,

"வித்யாவிநீதோ ராஜா ஹி ப்ரஜானாம் விநயே ரத: |
அநன்யாம் ப்ருதிவீம் புங்க்தே ஸர்வபூத
ஹிதே ரத:||"

"வித்யைகளில் சிக்ஷை பெற்றுள்ள அரசன், எல்லாப் பிராணிகளின் இதத்தைக் கருதியவனாயும், பிரஜைகளின் சிக்ஷணத்தில் ஆஸ்தை யுள்ளவனாயு மிருந்து பூமியை ஏகசக்ராதிபதியாய் ஆண்டனுபவிப்பான்."

ப்ரகரணம் 3

இந்திரியஜயம்

காது முதலிய ஐம்புலன்களைச் சப்தம் முதலிய அவைஅவைகட்குரிய விஷயங்களில் சாஸ்திர விரோதமின்றிப் பிரவிருத்திக்கச் செய்தல் இந்திரிய ஜய மெனப்படும். காமம், க்ரோதம், லோபம் மானம் (தனக்கு நிகர் ஒருவருமில்லை யென்னும் துரெண்ணம்,) மதம் (தனம், வித்யை முதலியவற்றால் ஏற்படக்கூடிய கர்வம்) ஹர்ஷம் (இச்சிக்கப்பட்ட வஸ்துப் பிராப்தியால் உண்டாகும் சந்தோஷம்), இவ்வாறும் சத்துரு குணங்களாகச் சொல்லப்படுகின்றன. இவற்றை யடக்கி, நமது இந்திரியங்கள் தத்தமக்குரிய தர்மமார்க்கங்களில் செல்லுமாறு செய்யவேண்டும். இவ்வித இந்திரியஜயம் ஏற்படுவதற்குச் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள கடமைகளைச் சரிவர அனுஷ்டித்தலே முக்கிய காரணம்.

இந்திரியங்களை யடக்காமல், சாஸ்திர விரோதமான வழியில் செல்லும் மன்னன், பூமி முழுவதும் ஒருகுடைக்கீழ் ஆண்டுவரும் பெருமை வாய்ந்தவனா யிருப்பினும், சீக்கிரம் நாசமடைவான். மேற்கூறிய சத்துருவர்க்கத்தை ஜயிக்காத பூர்வீக வேந்தர்கள் பலர் கெட்டகதி யடைந்துள்ளார்:—போஜவம்ச மன்னனான தாண்டக்யன் என்பவன் காமத்தால் பிராமண கன்னிகையை அபகரித்து, சாபத்துக்குள்ளாகி, பந்து, மித்திர, ராஜ்யங்களுடன் அழிவுற்றான்; அவ்வாறே விதேகாதிபதியான காரளன் என்பவனும் காமவசத்தால் அழிந்துள்ளான். ஜனமேஜய மகாராஜனும் தான் செய்துவந்த அசுவமேத யாக சமயத்தில், கோபாவேசத்தால் விப்பிரர்களோடு விவாதம் செய்து, அவர்களது சாபத்தாலழிந்தான். தாலஜங்கனும் ப்ருகு வம்சத்தினரிடம் அபராதம் செய்து நசித்தான். ஏலவம்சத்தவனான புரூரவஸ் என்பவன் லோபத்தால் நான்கு வர்ணத்தார்களையும் வருத்தி, தனம் சம்பாதிக்கக் கருதி அவர்களுடைய கோபத்தால் நாசமடைந்தான். அவ்வாறே 'ஸௌவீரபதியான அஜபிந்துவின் கதியுமாயிற்று. மானத்தால், ராவணன் தான் கிரகித்த பரஸ்திரீயைத் திரும்பக் கொடுக்க இஷ்டப்படாமையாலும், துரியோதனன் பாண்டவர்களுக்குரிய ராஜ்ய பாகத்தைக் கொடுக்க மனம் ஒப்பாமையாலும் மாண்டழிந்தனர். டம்போத்பவன் என்பவன் மதத்தைக் கைக்கொண்டு ஸர்வப் பிரஜைகளைத் திரஸ்கரித்து, இறுதியில் நர நாராயணர்களோடு போராடி மாண்டான்; ஹேஹயாதிபதியான கார்த்தவீரியார்ஜுனனும் ஜமதக்னி மகரிஷியிடம் அபராதம் செய்து, பரசுராமனால் அடிபட்டு அழிந்தான். வாதாபி என்னும் ராக்ஷஸன் ஹர்ஷத்தால் அகஸ்திய முனிவரை வஞ்சிக்கக் கருதியும், யாதவக்கூட்டமானது வியாஸரை அவமதித்து ஏமாற்ற விரும்பியும், அவர்களது சாபத்துக்குள்ளாகி நசிக்கலாயினர்.

"இவ்வாறே மற்றும் பல மன்னர்களும் காமம் முதலான சத்துரு வர்க்கத்துக் குள்ளாகி, ஐம்புலன்களை யடக்கியாளச் சக்தியற்றவர்களாய், பந்து மித்திராதிகளுடன் ராஜ்ய ஐசுவரியங்களை இழந்து, அழிந்துள்ளார். பரசுராமன், அம்பரீஷன், நாபாகன் முதலான மகான்கள் காமாதி இழிகுணங்களை நீக்கி, இந்திரிய ஜயம்பெற்று, வெகுகாலம் பூமியாண்டு அனுபவித்துள்ளார்."

இதனால் வேந்தர்கள் விஷயத்தில் இந்திரிய ஜயம் அவசியம் என்பது கௌடல்யனது கருத்தாகும்.

அழகர் கோவில்:—சென்னைராஜதானி மதுரை ஜில்லா மேலூர் தாலூகாவில் உள்ள விஷ்ணு க்ஷேத்ரம். மதுரை நகருக்கு 12 மைல் வடகிழக்கு. கோவில் புராதனமானது. தமிழ்க் காவியமான சிலப்பதிகாரத்தில் பிரஸ்தாபிக்கப்படுவது. திருமாலிருஞ்சோலை யெனத் திருவாய்மொழியில் புகழப்படுவது. இங்கு எழுந்தருளியிருக்கும் அழகர்பிரான் கள்ளர்களுக்குக் குலதெய்வம். ஆடி அமாவாசையன்று ஏராளமான ஜனங்கள் இங்கு கூடுவர். 3 மைலுக்கப்பால் நூபுர கங்கை என்ற நீர்வீழ்ச்சியுள்ளது. இது புண்ய தீர்த்தம்.

ஏனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ மன்றிற் பழிப்பார் தொடர்பு.

காளிதாஸ மஹா கவி

KALIDASA, THE GREAT POET

ரகுவம்சம்:— எப்போது ஸ்ரீராமன் சிவதனுசை எடுத்து நாணேற்றி ஒடித்தாரோ அப்போதே ஜனகமகாராஜன் தமது ப்ரதிஞ்ஞை ஈடேறிற்றென நினைத்து, ஸீதா விவாக விஷயமான சிந்தை நீங்கினவராய் மிக்க தேஜஸ் பொருந்திய விசுவாமித்திரரது முன்னிலையில் சீதையை ஸ்ரீராமனுக்கு அக்கினி ஸாக்ஷிகமாய்க் கன்னிகாதானம் செய்துகொடுக்கக் கருதினார். உடனே அவர் தமது புரோஹிதரை அனுப்பி, தசரத சக்கரவர்த்திக்குத் தமது கருத்தைத் தெரிவிக்கச் செய்தார். ஜனக புரோஹிதர் அயோத்திக்குப் போனபோது, தசரதரும் தமது புதல்வருக்கு நிகரான பத்தினிகள் கிடைக்க வேண்டுமேயென்று ஆலோசித்துக் கொண்டிருக்கும் தருணம். அச்சமயத்தில் ஜனகர் சொல்லியனுப்பிய விவாக ஸமாசாரம் அவருக்கு மிகவும் களிக்கத் தக்கதாயிருந்தது. "புண்ணிய புருஷர்களின் மனோரதமானது கற்பக விருக்ஷத்தை யடைந்தவனது விருப்பம்போல், உடனே பலிக்கும் தன்மையுள்ளதல்லவா ?"

தசரத சக்ரவர்த்தியும் புரோகிதரைத் தகுந்தபடி உபசரித்து, ராமாதிகளின் விவாகத்திற்காக பிரஜைகளுடனும் ஸைன்யங்களுடனும் புறப்பட்டுச் சென்று மிதிலையை அடைந்தார். உடனே விவாகத்திற்குரிய பூர்வ மங்களக்கிரியைகள் நடந்தேறின. ஸீதையை ஸ்ரீ ராமனும், ஜனகரது ஔரஸ புத்திரியான ஊர்மிளையை லக்ஷ்மணனும், ஜனகரது தம்பியான குசத்வஜரின் புத்திரிகளான மாண்டவீ, ச்ருதகீர்த்தி என்பவர்களை முறையே பரதனும், சத்துருக்கனனுமாக மணந்துகொண்டனர்.

"இவ்வாறு பத்தினிகளோடு கூடிய ராமாதிகள் நால்வரும் தசரத சக்ரவர்த்தியின் ஸாமம், தானம், பேதம், தண்டம் என்ற நான்குவித உபாயங்களும் அவ்வவற்றின் பலன்களோடு கூடியுள்ளவை போல் விளங்கினார்கள்'. விவாக மகோற்சவம் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. தசரதரும் ஜனகரிடம் விடைபெற்றுக்கொண்டு, புத்திராதிகளுடன் அயோத்திக்குப் புறப்பட்டார். வழியில் பல அபசகுனங்கள் காணப்பட்டன. பெருங் காற்று எதிர்முகமாய் வீசிற்று; மரங்கள் ஒடிந்து விழுந்தன. சைநியங்கள் பலவாறு வருந்தின. திசைகள் தூளியால் நிறைந்து பார்க்கமுடியாம லிருந்தன. சூரியனை நோக்கி, நரிகள் ஊளையிட்டன. இவ்வித அபசகுனங்களைக் கண்ணுற்ற தசரதர் நடுநடுங்கி, இவற்றிற்குத் தக்க சாந்தி செய்யும்படி வஸிஷ்டரை பிரார்த்தித்தார்.

இவ்வாறிருக்கையில், சேனைக் கெதிரில் பெருஞ் சோதி தோன்றிற்று; உற்று நோக்குகையில், திவ்விய புருஷன் ஒருவன் காணப்பட்டான். "பிதா சம்பந்தமான யஞ்ஞோபவீதத்தையும், மாத்ரு வம்ச சம்பந்தமான தனுஸையும் தரித்துள்ள பரசுராமன், சந்திரனோடு கூடிய சூரியன் போலும், சர்ப்பத்தோடு கூடிய சந்தன விருக்ஷம் போலும் விளங்கினார். கோபாவேசங் கொண்ட பிதாவின் உத்திரவினால் இவர் தனது அன்னையின் சிரத்தை வெட்டி, முதலில் தயையையும், பிறகு க்ஷத்திரியர்களையும் அழித்து, பூமி முழுவதும் ஜயித்துள்ளவர்." தமது பிதாவான ஜமதக்னி மகரிஷியை ஓரரசன் கொன்றதற்காக, க்ஷத்திரிய வம்சங்களையே யழித்துள்ள அந்தப் பரசுராமனைக் கண்டதும், தசரதர் பெரும் நடுக்கமுற்றார்; 'தமது புதல்வனுக்கும், பார்க்கவருக்கும் பொதுவாயுள்ள **ராமன்** என்னும் பெயரானது, ஹாரத்திலும் ஸர்ப்பத்திலும் இருக்கும் ரத்தினக் கூட்டம்போல், அவருக்கு மனோஞ்ஞமாயும், அதே காலத்தில் பயங்கரமாயும் ஏற்பட்டது.' உடனே அவர் அருக்கியம் முதலிய மரியாதைகளுடன் பரசுராமனைப் பூஜிக்கக் கருதினார். ஆனால், அவர் தசரதரைச் சிறிதும் லட்சியம் செய்யாது, ஸ்ரீராமன் இருக்குமிடத்தையே நோக்கிச் சென்றார்; கையும் வில்லுமாய், ராமனையடைந்து, பாணத்தைத் தொடுக்க யத்தனத்துடன் பார்க்கவர், "எனக்கு அபஹாரம் செய்துள்ள க்ஷத்திரிய ஜாதியர்களை அழித்து ஒருவாறு சமனமடைந்திருந்தேன். தூங்கும் சர்ப்பமானது, தடியாலடிபட்டுச் சீறி எழுவது போல், உனது விக்கிரமத்தைக் கேட்டுச் சினங் கொண்டுள்ளேன். இதுவரையில் மன்னர்கள் பலராலும் எடுத்து வளைக்கமுடியாத ஜனகரிடமுள்ள தனுஸை நீ ஒடித்தாய் என்று கேள்விப்பட்டு, எனது வீரியமாகிற கொடிமுடியே சிதறி விழுந்ததாகநினைக்கிறேன். இதுவரையில், **ராமன்** என்று சொன்னால், அது என்னையே குறிக்கும். இனிமேல் அது ஜயசீலனான உனக்கே ஏற்றதாகும் என்பது எனக்கு மிகவும் வெட்கமா

சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை நேரா நிரந்தவர் நட்பு.

யிருக்கிறது. எனது பிதாவின் ஹோமதேனுவின் கன்றை அபஹரித்த கார்த்தவீரியனையும் எனது கீர்த்தியைப் போக்க ஏற்பட்டுள்ள உன்னையுமே எனது சமான அபராதம் செய்த முக்கிய சத்துருக்களாக நினைக்கிறேன். நான் ஏற்கெனவே க்ஷத்திரியர்களை வேரற அழித்துப் பராக்கிரம சாலி எனப் பெயர் பெற்றிருந்தாலும், நீ ஜயிக்கப் படாமலிருக்கும் வரையில், நான் அதைப் பொருட்டாக நினைப்பதிற்கில்லை. "உலர்ந்த புல்லைப்போல், சமுத்திர ஜலத்திலும் ஜ்வலிப்பது தான் அக்கினியின் மகிமையல்லவா?" நீ ஒடித்துள்ள தனுஸானது பூர்வமே விஷ்ணுவின் தேஜஸால் பலம் குன்றியுள்ளது. நீ அதை ஒடித்தது ஒரு விசேஷ பராக்கிரமமாகாது. நதிப்பிரவாகத்தின் வேகத்தால் வேரறபட்டிருக்கும் பெரும் விருட்சத்தை இலேசான காற்றும் கீழே வீழ்த்தக்கூடும்! ஆகையால் நான் உன்னுடன் போராடுவது நிற்கட்டும். விஷ்ணுசம்பந்தமான இந்த வில்லை நீ வாங்கி வளைத்து, அதில் சரம் தொடுப்பாயேயானால், நான் உன் பாகுபலத்தை மெச்சி, உன்னால் நான் தோல்வியடைந்தவனாக நினைப்பேன்" என்று இறுமாப்புடன் கூறினார்.

இவ்வாறு பரசுராமன் சொல்வதைச் செவியுற்ற ஸ்ரீராகவன், கொஞ்சம் புன்னகை செய்து, யாதும் பதிலுரைக்காமல், அவரது வில்லை வாங்கி வளைப்பதே உத்தமமான பதில் என நினைத்தார். "முந்தின அவதாரத்தில் வகித்திருந்த தமது வில்லையடைந்து அவர் வெகு சோபையுடன் விளங்கினார். ஸ்வயமே அழகாயுள்ள நீருண்ட மேகத்திற்கு விசித்திரவர்ணங்களுள்ள வானவில்லும் ஏற்பட்டால், கேட்பானேன்?"

உடனே ஸ்ரீராமன் அந்தத் தனுவின் ஒரு நுனியை பூமியில் நிறுத்தி, அதை வளைத்து நாணேற்றி, பாணத்தையும் தொடுத்தார். 'ஜ்வலித்துக்கொண்டிருந்த அக்கினியானது அணைந்து புகைமட்டில் மிகுந்ததா யிருப்பதுபோல், பரசுராமன் தமது வீரியம் ஒடுங்கி, ஒளிமங்கினவரானார். 'இவ்வாறிருக்கும் ராம, பரசுராமர்கள், பார்க்கும் ஜனங்களுக்குப் பௌர்ணமி தினம் சாயங்காலத்திலுள்ள சந்திரனும் சூரியனும் போல் தோற்றினார்கள்.'

அவ்வாறு தீனமாய் நிற்கும் பார்க்கவரை நோக்கி ஸ்ரீராமன், "நீர் அந்தணராதலால் உம்மை யடிக்க எனக்கு மனம் வரவில்லை. ஆனால் நான் தொடுத்துள்ள பாணமோ வீண்போகக் கூடாது. ஆகையால் இதைக்கொண்டு நீர் சம்பாதித்துள்ள புண்ணிய லோகங்களையாவது, அல்லது எங்கும் தடையின்றி ஸஞ்சரிக்கக்கூடிய உமது கதி விசேஷத்தையாவது இதற்கு இரையாக்குகிறேன்" என்று கேட்டார். அதற்குப் பரசுராமன், 'நீர் பரமபுருஷன் என்பதை நான் அறியாமலில்லை. ஆனால், பூமியில் அவதரித்துள்ள உமது வைஷ்ணவ தேஜஸைக் கண்டறியவேண்டுமென்றே நான் இவ்வாறு உம்மைக் கோபமூட்டினேன். இனி இப்புவியில் எனக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. லோகநாதனான உம்மால் எனக்கு ஏற்பட்ட அபஜயமும் சிலாக்கியமே. எனது கதி விசேஷமிருக்கட்டும். எனக்குரிய புண்ணிய லோகங்களைச் சங்கரிக்கலாம்' என்று சொல்ல, ஸ்ரீராமனும் அவ்வாறே செய்து, பிறகு அவரது பாதங்களில் வணங்கி,தம்மை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டார். பரசுராமனும், தமது மாத்ரு சம்பந்தமாயும், ரஜோகுணப் பிரதானமாயுள்ள க்ஷத்திரியத் தன்மையை ராமன் நீக்கினதும் ஒரு பெரிய அனுக்கிரகமென நினைத்து, ஸ்ரீராமன் வந்துள்ள தேவ்காரியம் நிர்விக்கினமாய் நிறைவேற வேண்டுமென்று ஆசீர்வதித்து அவரிடம் விடைபெற்றுச் சென்றார். பிறகு தசரதர் தம் புதல்வன் மறுபிறப்பு அடைந்தான் என நினைத்து ஆனந்த சாகரத்தில் மூழ்கினவராய், எல்லா பரிவாரங்களுடன் அயோத்தியடைந்தார்

தசரதர் தமது புதல்வர்களுடனும் நாட்டுப் பெண்களுடனும் ஸகல ராஜ்ய ஸுகங்களையும் அனுபவித்து மகிழ்ந்து வந்தார். பிறகு அவருக்கு வயது முதிர்ந்து, அந்திமகாலம் அணுகியது. "எல்லா உலக சுகங்களையு மனுபவித்து, விருத்தாப்பியத்தை யடைந்து ஜீவதசையின் முடிவை யடையப்போகும் தசரதர், எண்ணெய் வற்றிப் போய், திரியின் நுனியை யடைந்து, அணையப் போகும் தருணத்திலிருக்கும் விடியற்கால விளக்குச் சுடர்போல் விளங்கினார் அரசனுக்கு நிரை ஏற்பட்டதைப் பார்த்தால்,விருத்தாப்பியமானது, கைகேயிக்குப் பயந்து, அவ்வுருவாக அவரது காதண்டை வந்து, 'ஸ்ரீராமனிடம் ராஜ்ய ச்ரீயை ஒப்புவித்து விடலாம்' என்று சொல்வதுபோல் இருந்தது" உடனே தசரதர் வசிஷ்டாதி மந்திரிகள், மன்னர்கள், நகரத்து ஜனங்கள் முதலான எல்லோரையும் சபைகூட்டி, ஆலோசித்தார்.

மின்சாரப் பிரவாகம்

CURRENT ELECTRICITY

[ஸ்ரீமான் ஏ. வரதாச்சாரியார் அவர்கள்.]

மின்சாரப் பிரவாக விஷயமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய மூன்று அம்சங்கள் உள. இவைகட்கு ஒன்றோடொன்று நெருங்கியுள்ள சம்பந்தமே மின்சார சக்தியின் எவ்விதக் கிரியைகளுக்கும் ஆதாரமாயுள்ளது. ரஸாயன உதி மாறுதல்களாலுண்டாகக்கூடிய மின்சார நிலைமை (மட்டம்) வேறுபட்டுள்ள இரண்ட வஸ்துக்கள் அல்லது ஸ்தானங்களுக்கு மின்சார சக்தி பரவக் கூடிய உலோகக்கம்பி முதலியவற்றால் சம்பந்தம் ஏற்பட்டால், உயர்ந்த மின்சார நிலைமை (Higher Potential) உள்ள இடத்திலிருந்து தாழ்ந்த நிலைமையுள்ள ஸ்தானத்துக்கு மின்சாரப் பிரவாகம் ஏற்படும்படி செய்யக்கூடிய சக்தி விசேஷமுண்டாகிறது. இவ்வாறு மின்சார மட்ட தாரதம்மியத்தால் (difference of potential) உண்டாகக்கூடிய இச்சக்தி விசேஷத்தை மின்சார சாலனம் (Electromotive force, or E. M. F.) எனச் சொல்லுகிறார்கள். இதன் பலத்தால் பிரவகிக்கக்கூடிய மின்சார சக்தியானது கம்பி முதலிய தக்க வஸ்துக்களில் பரவிச் செல்லும்போது, ஒருவித தடை (Resistance ஏற்படுகிறது இத்தடையின் அளவு கம்பி முதலியவற்றின் கனம், சுபாவம் முதலிய காரணங்களால் ஏற்றக்குறைவாயிருக்கும். மின்சார பாண்டங்களிலிருந்தோ, மற்றைய கருவிகளிலிருந்தோ உண்டாக்கப்படும் மின்சாரப் பிரவாகத்தின் பரிமாணம் அல்லது பலம் (Strength of Current), மேற்கூறிய மின்சார சாலனம், தடை இவ்விரண்டையும் பொருத்திருக்கும். மின்சார சாலனம் அதிகரித்தால் பிரவாக பரிமாணமும் ஏற்றவாறு ஜாஸ்தியாகும். தடை அதிகமானால், பிரவாக அளவு குன்றும். தடை என்பது மின்சார பாண்டாதிகளில் ஏற்படக்கூடிய (a) உள்மார்க்க எதிர்ப்பையும் (Internal Resistance), சுற்றுமார்க்கக்கம்பி முதலியவற்றில் உண்டாகும் (b) வெளிமார்க்க எதிர்த் தாக்கத்தையும் (External Resistance) குறிக்கும். இவற்றை முறையே த (உ), த (வெ) என்ற சங்கேதங்களால் குறிப்பிடுவோம்.

மின்சாரப் பிரவாகம் ஏற்படுமிடங்களில் மேற்கூறிய மின்சார சாலனம், பிரவாக பரிமாணம், பிரவாகமார்க்கத்திலுள்ள எதிர்ப்பு (தடை) இம்மூன்றுக்குமுள்ள சம்பந்தத்தை ஓம் (Ohm) என்னும் வித்வான் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார். இச்சம்பந்தத்தைக் குறிப்பிடும் விதிக்கு ஓம் விதி (Ohm's law) எனப் பெயர் வழங்கி வருகிறது.

ஒரு சுற்றுமார்க்கத்திலுள்ள மின்சார பரிமாணமானது அதிலுள்ள மின்சார சாலனத்துக்கு கிரம விகிதமாயும் (i.e. ஏற்றவாறும், *directly*), எதிர்ப்புக்கு விலோம விகிதமாயும் (i e, கிரமமற்றும், *inversely*) மாறக்கூடியதாயிருக்கிறது. அதாவது மின்சார சலனம் அதிகரித்தாலும் குன்றினாலும், பிரவாக அளவும் முறையே அம்மடங்கு அதிகரிக்கும் அல்லது குன்றும்; தடை ஜாஸ்தியானால் அவ்வளவுக் கவ்வளவு, பிரவாக பரிமாணம் குன்றும்; தடைகுறைந்தால், பிரவாகம் அதிகரிக்கும்.

நீளம், விஸ்தீர்ணம், கனம் முதலிய வஸ்துக்களின் பௌதிக குணங்களை அளவிடவோ, ஒன்றோடொன்று ஒப்பிட்டுக் கூறவோ, அங்குலம், கஜம், சதுரங்கலம், ஏகர், பலம், பவுண்டு முதலிய மூல அளவு எண்கள் (units of length area, weights etc.) இருப்பது போல், மின்சாரப் பிரவாக விஷயத்திலும் மேற்கூறிய மின்சார சாலனம் முதலிய மூன்றையும் அளவிட்டு விவகரிப்பதற்குரிய மூல எண்கள் பழக்கத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் இவற்றின், அளவைக் குறிக்கும்போதெல்லாம், பழக்கமூல எண்ணாலேயே அளவிட்டுச் சொல்லவேண்டும்.

(*a*) மின்சார சாலனத்துக்கு (E M F.) மூல அளவு எண், வோல்டு (Volt) எனப்படும்.

(*b*) ....பிரவாக பரிமாணம் (பலம்) (C) ....,ஆம்பியர் (ampere) எனப்படும்.

(*c*) மார்க்கத்தடை: (R) ....ஓம் (Ohm).....

இவ்வித சங்கேதத்தை அனுசரித்து, ஓம் விதியை அடியிற்கண்டவாறு கூறலாம்:—ஒரு சுற்று மார்க்கத்தில் (அல்லது மார்க்கத்தின் இரண்டு ஸ்தானங்களுக்கு இடையே,) உள்ள வோல்டுகளை, அதிலுள்ள ஓம் அளவால் வகுத்தால், அதில் ஏற்படும் ஆம்பியர்களின் ஸங்கியை கிடைக்கும்

$$\text{பிரவாக பரிமாணம் (ஆம்பியர்கள்)} = \frac{\text{மின்சார சாலனம் (வோல்டுகள்)}}{\text{தடை (உ + வெ) (ஓம்ஸ்)}}$$

சங்கேத எழுத்துக்களால், ஓம் விதியை

$ப = \frac{சா.}{த}$ என்று சுருக்கமாய்க் குறிப்பிடலாம்.

மேற்கூறிய மூன்றுகளுள், எவையாவது இரண்டின் அளவு தெரிந்தால், மூன்ருவதின் ஸங்கியை ஓம் விதியால் அளவிட்டுக் கூறக்கூடும்

உதாரணம் :—' ஓர் அடுக்கு மின்சார பாண்டத்திலிருந்து (Electric Battery) $\frac{1}{2}$ ஆம்பியர் பிரவாகம் உண்டாகக் கூடும். அப்பாண்டத்தின் துருவங்களின் மின்சார மட்ட தாரதம்மியம் 6 வோல்டுகள். அப்பாண்டத்தின் உள் சுற்று மார்க்கத்தின் தடை (உ) 4 ஓம்ஸ் ஆனுல், வெளிமார்க்கத்தின் எதிர்ப்பு (வெ) எவ்வளவு?

$$ப = \frac{சா}{த (உ + வெ)}; \quad \frac{1}{2} = \frac{6}{4 + வெ}$$

$$2 + \frac{1}{2}வெ = 6, \ \frac{1}{2}வெ = 4 \ ; \ வெ = 8 \text{ ஓம்ஸ்.}$$

(2) ஒரு பாட்டரியின் மின்சார சாலனசக்தி 12 வோல்டுகள். அதன் உள்மார்க்கத்தடை 8 ஓம்ஸ். 40 ஓம்ஸ் எதிர்த்தாக்க முண்டாகக் கூடிய ஒரு கம்பியின் நுனிகள் பாட்டரியின் துருவங்களில் பொருத்தப்பட்டால், சுற்று மார்க்கத்தில் ஏற்படக்கூடிய பிரவாக பலம் எவ்வளவு?

$$ப = \frac{சா}{உ + வெ}; ப = \frac{12}{8 + 40} = \frac{1}{4} \text{ ஆம்பியர்.}$$

(b) மேற்கூறிய கணக்கில், $\frac{3}{4}$ ஆம்பியர் பிரவாக பரிமாணம் ஏற்படவேண்டுமானுல், முற்கூறிய கம்பிக்குப் பதிலாக எவ்வளவு தடையுள்ள கம்பி பொருத்தப்படவேண்டும்.

$$\frac{3}{4} = \frac{12}{8 + வெ}; \quad 24 + 3வெ = 48$$

$$\therefore 3வெ = 24; \ வெ = 8 \text{ ஓம்ஸ்.}$$

(3) மின்சாரப் பிரவாக முண்டாக்குவதற்கான கருவியின் சுற்று மார்க்கத்தில், 5 மின்சார விளக்குகள் பொருத்தப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு விளக்கின் தடை அளவு 12 ஓம்ஸ். கருவியின் உள்மார்க்கத் தடை 30 ஓம்ஸ். விளக்கு எரிவதற்கு $1\frac{1}{2}$ ஆம்பியர் தேவையானுல், சுற்று மார்க்கத்திலுள்ள மின்சாரசாலன அளவு என்ன?

$$ப = \frac{சா}{உ + வெ.}; \quad 1\frac{1}{2} = \frac{சா}{30 + 5 \times 12} = \frac{சா}{90}$$

$\therefore$ மின்சார சாலனம் = 135 வோல்டுகள்.

குறிப்பு:—மின்சாரப் பிரவாகபரிமாணம் (பலம்) மின்சாரசாலனம் இவற்றிற்குரிய வித்தியாசம் நன்கு கவனிக்கப்படவேண்டும். பிரவாகபரிமாணமென்பது அது பரவத்தக்க கம்பி முதலிய வற்றின் குறுக்குப் பரப்பின் (Cross-section) வழியாக ஒரு செக்கண்டில் (நிமிஷம், அல்லது மற்றைய மூலகால அளவிலோ) செல்லும் மின்சார இராசியைக் குறிக்கும். இந்த இராசி ஜாஸ்தியானுல் பிரவாக பலம் ஜாஸ்தி யென்றும், இது குறைந்தால், பிரவாக பலமும் குறைவானது என்றும் சொல்லவேண்டும். மின்சார சாலனமானது மேற்கூறிய மின்சாரப் பிரவாகம் ஏற்படும்படி செய்யக்கூடிய சக்தி விசேஷத்தைக் குறிக்கும். மின்சாரசாலனம் காரணமாயும், பிரவாக பரமாணம் காரியமாயுமாகும்.

(2) மின்சார சாலனம், பிரவாக பலம், தடை இம்மூன்றுக்குள்ள சம்பந்தத்தை, தலமட்ட வித்தியாசத்தினுல் ஜலப்பிரவாகம் ஏற்படுவதைக் கொண்டு உதாகரித்துக் கூறலாம். இரண்டு குழாய்கள் அல்லது பாத்திரங்களில் ஜலமானது வெவ்வேறு மட்டங்களிலிருப்பதாக வைத்துக் கொள்வோம் ஒரு சிறு குழாய் மூலமாய் முற்கூறிய இரு குழாய்களுக்கும் அடிப்பாகத்தில் சம்பந்தம் ஏற்படுத்தினுல், ஜலமானது உயர்ந்த மட்டமுள்ள குழாயிலிருந்து தாழ்ந்த மட்டமுள்ள குழாய்ப்பக்கமாய் ஓடி, இரு பாத்திரங்களிலுமுள்ள ஜலமட்டம் சமமாகுவதைக் காணலாம். முதன் முதலில், மட்டவித்தியாசம் மிகுந்திருந்தால் ஜலப்பிரவாகம் ஜாஸ்தியாயும், மட்டபேதம் குறையக்குறைய, பிரவாக பலம் குறைவாகவும் இருக்கும் ஆதியில் இரு பாத்திரங்களிலும் ஜலமட்டங்கள் சமமாயிருந்தால், இரண்டுக்கும் சம்பந்த முண்டானுலும், ஜலம் எப்பாத்திரத்திலிருந்தும் ஓடாமலிருக்கும். மேலும், ஜலமட்டபேதமிருக்கையில், சம்பந்தப் படுத்தும் குழாய் பெரிய துவாரமுள்ளதானுல், ஜலப்பிரவாகம் மிகுந்திருக்கும்; சிறிதாயிருந்தால், பிரவாகம் குறைவுள்ளதா யிருக்கும். இதனுல் ஜல மட்டங்களிலுள்ள வித்தியாசம், ஜலப் பிரவாகத்துக்குக் காரணம் என்றும், இப்பிரவாகத்தின் பரிமாணம் அல்லது அளவானது, மட்டவித்தியாசத்தையும், ஜலம் பிரவகிப்பதற்குரிய குழாயில் ஏற்படக் கூடிய தடையையும் பொருத்திறக்கிறது என்றும் அறியவேண்டும். குழாய் பெரிதானுல், தடை குறைவுபடும்; சிறிதானுல், எதிர்ப்பு மிகும். ஆகையால், ஜலப்பிரவாக அளவானது, ஜலமட்டத்தை அனுசரித்தும், சுற்று மார்க்கத்திலுள்ள

தடைக்கு மாருகவும் வேறுபடும். இதுபோலவே மின்சாரப்பிரவாகம் மின்சார மட்ட வித்தியாசத்தால் (மின்சார சலனத்தால்) உண்டாகக்கூடியது; அதன் பலம், மின்சார மட்டத்தின் (நிலைமையின்) வித்தியாச அளவுக்கு நேர் சம்பந்தமுள்ளதாகவும், மின்சார சுற்று மார்க்கத்திலுள்ள தடைக்கு (எதிர்ப்புக்கு) விலோம விகிதமாயுள்ளதாகவுமிருக்கும்.

(3) குழாய் மூலமாய் ஜனங்களுக்கு ஜலம் ஸப்ளை செய்யப்படும் சென்னைமாநகரம் போன்ற இடங்களில், குழாய் உயர்ந்த மட்டத்தில் வைக்கப்பட்டுள்ள வீடுகளிலும், அல்லது சிறு குழாயுள்ள வீடுகளிலும் ஜலம் குறைந்து வருவதும், குழாய் தாழ்ந்த மட்டத்தில் வைக்கப்பட்டு, பெரிதாகவுமிருந்தால் அதற்கேற்றவாறு ஜலம் ஜாஸ்தியாக வருவதும் அனுபவசித்தமாகும். ஜலம் சேகரித்து வைக்கப்பட்ட ஏரி அல்லது பெருந் தொட்டிக்கும், ஒவ்வொரு வீட்டிலுமுள்ள குழாய் முகத்துவார மட்டத்திற்கும் உள்ள வித்தியாசமே ஜலப்பிரவாக அளவுக்குக் காரணமாகும்.

(4) ஒரு கம்பி அல்லது இதர வஸ்து வழியாய்ச் செல்லும் பிரவாகமானது இரண்டு அல்லது மேற்பட்ட மார்க்கங்கள் வழியாய்ப் பிரிந்து, மீண்டும் ஒன்று சேர்வதாயிருந்தால், இந்த மார்க்கம் ஒவ்வொன்றிலும் ஏற்படும் பிரவாகமானது, ஓம் விதியை அனுசரித்து, அதற்குள்ள தடைக்கு விபரீதமாய் ஏற்றக் குறைவாயிருக்கும். உதாரணம்: 7-ஆம்பியர் அளவுள்ள பிரவாகம், முறையே 3 ஓம், 4 ஓம் தடையுள்ள மார்க்கங்கள் வழியாய்ப் பிரிந்து செல்வதானல், இவற்றிலுள்ள பிரவாகங்கள் 4 : 3 ஆக இருக்கும்; அதாவது முதல் மார்க்கத்தில் $\frac{4}{7} \times 7 = 4$ ஆம்பியரும், இரண்டாவதில் $\frac{3}{7} \times 7 = 3$ ஆம்பியரும் பிரவகிக்கும்.

(5) பல மின்சார பாண்டங்களை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தி உண்டாகும் கோர்வையிலும் (Battery), பிரவாகபரிமாணம், ஓம் விதியை அனுசரித்து, கோர்வையின் சொருபத்துக்கும் ஏற்றவாறு பேதப்படும். மின்சார பாண்டங்களைக்கொண்டு மூன்றுவித கோர்வை ஏற்படுத்தலாம்.

ஸ்ரீ கிருஷ்ணகர்ணாம்ருதம்

SRI KRISHNA KARNAMRUTAM

“த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவராம்பரம் ததானே ||
வபு ரளககுலாவ்ருதானுப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா”

(147) ராகாந்த கோபீஜன வந்திதாப்யாம்
யோகீந்த்ரப்ருங்கேந்த்ர நிஷேவிதாப்யாம் |
ஆதாம்ரபங்கேருஹ விப்ரமாப்யாம்
ஸ்வாமின் பதாப்யாமய மஞ்சலிஸ்தே ||.

“அனுராகத்தால் மதோன்மத்தர்களான கோபஸ்திரீகளால் வணங்கப்பெற்றவைகளும், யோகிச்சிரேஷ்டர்களால் ஸேவிக்கப் பெற்றவைகளும், சற்றுச் சிவந்து தாமரைப் புஷ்பம்போல் ரம்மியமாய் விளங்குபவைகளுமான தேவரீரது பாதங்களில் கைகுவித்து வணங்குகிறேன்.”

148. ஸ்மிதஸ்தபகிதாதரம் சிசிரவேணு நாதாம்ருதம்
முஹுஸ்தரளலோசனம் மதகடாக்ஷமாலாகுலம்|
உரஸ்தல விலீனயா கமலயா ஸமாலிங்கிதம்
புவஸ்தலமுபாகதம் புவனதைவதம் பாது ந:||

“புன்சிரிப்பால் அலங்கரிக்கப்பெற்ற உதடுகளோடு கூடினவரும், அம்ருதம்போல் இனிய புல்லாங்குழலின் கீதங்களோடு கூடினவரும், அடிக்கடிசலிக்கும் பார்வைகளோடு கூடினவரும், சிருங்கார கடாக்ஷங்கள் நிரம்பியவரும், நித்தியம் வக்ஷஸ்தலத்தை விட்டு அகலாதிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மிதேவியால் ஆலிங்கனம் செய்யப்பட்டவரும், பூமியில் அவதரித்திருப்பவருமான ஸர்வலோகநாதன் நம்மைக் காத்தருள்வாராக.”

140. நயனம்புஜே பஜத காமதுகம்
ஹ்ருதயாம்புஜே கிமபி காருணிகம் |
சரணம்புஜே முனிகுலைகதனம்
வதனம்புஜே வ்ரஜவதூ விபவம் ||

“கமலம் போன்ற நேத்திரங்களால் ஸர்வாபீஷ்டங்களையும் அளிப்பவரும், ஹ்ருதயத்தில் நிகரற்ற கருணை நிறைந்தவரும், முனிவர்கள் ஸதா ஆச்ரயிக்கும் பாதகமலங்களோடு கூடினவரும், கோபஸ்திரீகளின் லீலைகள் நிறைந்த முக கமலத்தோடு விளங்குபவருமான பெருமானைச் சரணமடையுங்கள்.”

150. நிர்வாஸனம் ஹந்த ரஸாந்தராணாம்
நிர்வாண ஸாம்ராஜ்ய மிவாவதீர்ணம் |
அவ்யாஜ மாதுர்ய மஹா நிதானம்
அவ்யாத் வ்ராஜாணமதி தைவதம் ந: ||

"எல்லா ரஸங்களையும் திரஸ்கரிப்பவர்போல் விளங்குபவரும், மோக்ஷ ஸாம்ராஜ்யமே பூமியில் அவதரித்துள்ளதுபோல் தோற்றுபவரும், ஸ்வயமாயுள்ள அருஞ்சுவைகளுக்கோர் மூலஸ்தானமாக விருப்பவரும், கோபர்களுக்கு ரக்ஷகனுமான பெருமான் நம்மை இரட்சிக்கட்டும்"

151\. காளிந்தீ புளினே தமால நிபிடச்சாயே
புர: ஸஞ்சரன்
தோயே தோயஜ பத்ர பத்ர நிஹிதம்
தத்யன்ன மச்னுதி ய: |
வாமே பாணிதலே நிதாய மதுரம்
வேணும் விஷாணம் கடி —
ப்ராந்தே கா:ச்ச விலோகயன் ப்ரதிகலம்
தம் பாலமாலோகயே ||

"யமுனா நதியின் மணற் குன்றுகளில், தமால விருக்ஷத்தின் அடர்ந்த நிழலில் கோபாலர்களோடு ஸஞ்சரித்து, தாமரை இலையைப் பாத்திரமாகச் செய்துகொண்டு அதில் தயிர் சாதம் வைத்து சாப்பிட்டும், இடது கையில் புல்லாங்குழலும், இடுப்பில் கொம்பும் தரித்தும், சுற்றுப் பக்கத்தில் மேய்ந்து வரும் பசுக்களை அடிக்கடி நோக்கிய இடைச்சிறுவனுய் அவதரித்துள்ள கார் வண்ணனைக் கண்டு களிக்கிறேன்." பகவான் நிகரற்ற ஸௌலப்ய குணத்தால், ஆயர்பாடியிலுள்ள இடைச்சிறுவர்களோடு கூடி, மாடு மேய்த்த காலத்திலுள்ள தரிசனத்தில் மனம் ஈடுபட்டுப் பரமானந்தம் பெற்றதைக் கூறுகிறார் லீலாசுகர்.

152\. யத்கோபீ வதனேந்து மண்டனமபூத்
கஸ்தூரிகா பத்ரகம்
யல் லக்ஷ்மீகுச சாதகும்பகலச-
வ்யாகோச மிந்தீவரம் |
யந்நிர்வாண விதான ஸாதன விதௌ
ஸித்தாஞ்சனம் யோகினும்
தந்ய : ச்யாமல மாவிரஸ்து ஹ்ருதயே
க்ருஷ்ண பிதானம் மஹ :

"எது கோபஸ்திரீகளின் சந்திரன் போன்ற முகங்களுக்கு ஆபரணம் போல் விளங்கிற்றே, எது கஸ்தூரியில் எழுதப்பட்டுள்ள சித்திர விசேஷங்களோடு பிரகாசித்ததோ, எது லக்ஷ்மீ தேவியின் ஸ்வர்ணமயமான ஸ்தனங்களுக்கு நீலோத்பல புஷ்பம்போல் விளங்கிற்றே, எது உத்தம மோக்ஷானந்தத்தை யளிப்பதில் யோகிகளுக்குச் சித்தாஞ்சனம் போன்ற சாதனமாயிற்றே, கிருஷ்ணன் என்று பெயர்கொண்ட அந்த நீலமேகம் போன்ற காந்தியானது என் மனத்தில் உதித்து இடைவிடாது பிரகாசிக்குமாக!" பகவானது திருமேனி வர்ணமானது வர்ணித்துக் கூற முடியா வண்ணம் அவ்வளவு மனோஞ்ஞமானது என்பது கருத்து.

153\. புல்லேந்தீவர காந்தி மிந்து வதனம்
பர்ஹாவதம்ஸப்ரியம்
ச்ரீவத்ஸாங்க முதார கௌஸ்துபதரம்
பீதாம்பரம் ஸுந்தரம் |
கோபீனும் நயனோத்பலார்ச்சித தனும்
சோ கோப ஸங்காவ்ருதம்
கோவிந்தம் கலவேணு நாதநிரதம்
திவ்யாங்க பூஷம் பஜே ||

"மலர்ந்துள்ள நீலோத்பல புஷ்பத்தின் காந்தி போன்ற தேஜஸோடு கூடியவரும், சந்திரன் போல் மனதைக் களிப்பிக்கத்தக்க முகமுடையவரும், மயில் தோகையால் அலங்காரஞ் செய்து கொள்வதில் பிரியமுள்ளவரும், ஸ்ரீவத்ஸம் எனும் அழகிய மச்சமுடையவரும், கௌஸ்துபம் எனும் உயர்ந்த ரத்தினமணிந்து, மனோஞ்ஞமான பீதாம்பரம் தரித்துள்ளவரும், கோபிகளின் அழகிய கண்பார்வைகளால் இடைவிடாது ஆதரவுடன் பார்க்கப்பெற்றவரும், பசுக்களாலும், இடையர்களாலும் சூழப்பட்டவரும், காதிற்கினிய வேணுகானங்கள் செய்வதில் மிக்க ஆஸ்தையுள்ளவரும், அங்கங்களில் உத்தம ஆபரணங்கள் அணிந்தவருமான கோவிந்தனைப் பஜிக்கிறேன்."

அஜாதசத்ரு.—(கி. மு. 502-475). சிசுநாக வம்சத்து 6-ம் அரசன். பிம்பிஸாரன் மகன். தன் பிதாவைக் கொன்றதாக வுள்ள வதந்தியைப் போக்கிக் கொள்வதற்காக இவன் கௌதம புத்தரைத் தரிசித்ததாகப் பௌத்த நூல்கள் கூறும். இவன் கோஸல நாட்டையும் லிச்சவிகளின் நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான். கோஸலர்களால் இவன் கைதியாக்கப் பட்டதாகவும் ஒரு கதையுண்டு கங்கையும் சோணநதியும் சேருமிடத்து பாடலிபுரத்தை ஸ்தாபித்தான். பிறகு அதுவே மகத நாட்டின் தலைநகராயிற்று. இவனது அரசாட்சியின் 8-ம் ஆண்டில் புத்தபகவானுடைய நிர்வாணம் நிகழ்ந்தது. அஜாதசத்ருவின் தாய், லிச்சவிகளுடைய வைசாலி நகரத்தரசனுன சேதகன் மகளான "செல்லணு" என்று ஜெயின நூல்கள் கூறும். திபேத்து நாட்டு நூல்களின்படி அவள் பெயர் வாஸ்வி எனவும், அவள் கோபாலனுடைய மருமகள் எனவும் தெரிகிறது. இவனுக்கு கூனிகன் என்ற பேருண்டு. கோஸல தேசத்து நங்கையை மணந்தவன். இவன் பாரஸீக வாசனன டாயஸ் (521-485) அரசனுடைய ஸஹஜீவி.

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ லொல்லை யுணரப் படும்.

ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள்மீது தோத்திரப் பாடல்கள்

SONGS IN PRAISE OF SRI JAGADGURU SANKARACHARYA SWAMIGAL OF KAMAKOTI PITH

[ஸ்ரீமான் இ. சே. வரதராஜய்யரவர்கள், பீ. ஏ.,]

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அணியாரு மறங்குலைந்து மறந்துவன்றி
யறிவோர் பால் ஆர்வமோங்கும்
பணியாவு மிலவாகிப் பரமனவ
னடியாற்பாற் பக்தி குன்றித்
துணியாத கொடுஞ் செயல்கள்
மிகப் பரந்து புவிதுயரத் துழலும் வேலைப்
பணியாருஞ் சயனத்தான் பார்த்தான் பா
லன்றருளிப் பகர்ந்த பண்பே. (1)

அறவோரை மிகக் கடிந்து
நல்லனக ளெய்தாமல் அகலவோட்டும்
மறவோரை நீருக்கி யறம்நிறுத்த
வுகந்தோறும் வருவேமென்ன
வுறவோதும் சொற்கிணங்கப்
பாரதப் பூத்தென் பாலினுமை ஞானப்பால்
பெறவோவில் தவஞ் செய்த
பிள்ளையார் முதற்குரவர் பிரசவாக்கால். (2)

வாயாரப் புகழ்ந்ததுவும்
கும்பேசர் முதலாக வரன் மாற்றெய்வம்
ஓயாவிழாமலியத் திருக்கோயில்
கொண்டருள வுற்றதாகி
மாயாதபுகழ் மிகுமகாமகத்திற்
பலகோடி மாக்கணண்ணிச்
சாயாத பத்தியொடும் நீராடி
முத்திபெறும் தனித்தடாகம். (3)

தன்னகத்தே கொண்டுளதாய்த்
தனிச்சேடன்றன்னுலும் சாற்றற் காற்ருப்
பொன்னகரை வென்றுளதாய்ப் புகழாரும் நதி
யேழுள் பொலிவுற்ரேங்கும்
இன்னகத்தகுட முனிவன் கடங்கவிழ
வெழுந்துதிரை யெறி நீர்ப்பொன்னி
கொன்னகத்த வனத்தகத்த பொருளெலாம்
கொண்டொழுகும்குடந்தையுள்ளால் (4)

அறந்தானே யுருவெடுத்துப் புவியிடத்தே
சன்மார்க்கம் அமைய வென்றும்
மறந்தானே மறைந்தொழிய வைந்தொழிலார்
ஆடலரன் மனிதனுகிப்
பிறந்தானே பவமாக்கு முக்குணங்கள்
கடிந்துதவப்பெரும் பேறெய்தத்
துறந்தானே மக்கடமிற் சிறந்தானே
யெனப்பலருந் துதியா நிற்ப. (5)

அறுசமயங் கொண்ட வனியுண்மை
யறியாதவைகட்கமைந்தவாறே
வுறுஞ்சமயத்தெம்மதமும் சம்மதிப்ப
வத்துவித வுண்மை தன்னை
மறுசமயம் பிறர் நினைப்புஞ் செய்யாமற் செய்
தமைத்த மறுவில் சீர்த்தி
பெறுசமய குரவரா மாதி சங்கரர்
வழியிற் பிறங்கு மாண்பீர். (6)

நாவாரப்பருகுவது நற்கலைகள்
வாயார நவில்வவேதம்.
ஓவாது காண்பதர னொளியுருவ
முலகுயுமாறுற்றவாசான்
தாவாதவொழில ரன்றனருச்சனையே
பணிவதரனளினப் பொற்ருள்
மூவாத கலப்பெல்லா மத்துவிதப்
பெருங்கலப்பே முன்னுங்காலை. (7)

கற்றவர் நிதியே கல்லா மாந்தர்கள்
கதியே மார்க்கம்
உற்றவர் விதியே நல்லாறுற்றவர்
பதியே பாவம்
பற்றலர் திதியே வின்பம் பற்றினர்
மதியே நின்னைச்
சொற்றிற மில்லேன் சொல்லித்
துதிக்குமா றறிந்திலேனே. (8)

புகழ்க்கு நல்லொருவனென்கோ
பொலியுற மூர்த்தி யென்கோ
தகவுடைக் கலைகளெல்லாம்
தனிவடி வெடுத்த தென்கோ

குறிப்பு:—இக்கவிகள் காமகோடி மடாதிபதி திருவானைக்காவிற் கெழுந்தருளிய காலத்தில் 1926-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி குருவாரத்தில் மகா சந்நிதானத்தின் முன்னிலையிற் படிக்கப்பெற்றன.

வுகந்தொறு மறத்தை நாட்ட
வுறமந்தப் பரனே யென்கோ
சகந்தழைத் துய்யப் போந்த
சங்கரா வெங்கள் பேறே. (9)

கட்டளைக் கலித்துறை

நீரூர்ந்த மேனியனம் பிகை பாகன் றிரு வடியில்
மாரூத சிந்தையன் ஏர் காம கோடிமடாதிபனுர்
வீரூக்கு மாசனனீ சற்குப்பூசை விழைந்தியற்ற
வாருதவன் பொடுங் கண்டவர்க்குண்டோ வரு
[வினையே. (10)

களங்கொண்ட நஞ்சினன் கண்மணி
தான் கொண்ட கண்டமும் பல்
வளங்கொண்ட மாமறை யோதும்
திருமுக மண்டலமும்
தனங் கொண்ட வில்வம் கரங்
கொண்டருச்சித்துச் சங்கரன்முள்
உளங் கொண்ட சற்குரு கண்டோம்
பவப்பய னுற்றனமே. (11)

அனுப்பர்.—கன்னட தேசத்திலிருந்து மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் குடியேறிய கிருஷிகர். பாஷை, கன்னடத்தின் திரிபு. இவர்களில் அல்லிக் குலம் என்பது முக்கியமான பிரிவு. இவர்களில் சைவரும் வைஷ்ணவருமுள்ளனர். வைஷ்ணவர் பிராம்மணப் புரோகிதர்களை நியமித்துக் கொள்வர். இவர்கள் விதவா விவாஹம் செய்வர். பட்டப் பெயர் கவண்டன். ஆறுமேடு என்ற வகுப்பினராகப் பிரிந்துள்ளனர். ஒவ்வொருவனுக்கும் அவன் அத்தை மகள் உரிமைப் பெண்டாட்டியாவாள். விவாகத்தில் தாலி கட்டுவது கிடையாது. மணமகனும் மணமகளும் எழு சந்தர்ப்பங்களில் தங்கள் சுண்டு விரல்களைக் கோர்த்துக் கொள்வதே பிரதான விவாகச் சடங்காம். இவர்கள் ஜாதிப் பஞ்சாயத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்.

அஷ்டாங்கஹ்ருதயம்:—வடமொழி வைத்திய நூல். வாக்பட்டர் எழுதியது. காலம் கி. பி. 6-ம் நூற்றாண்டு. அஷ்டாங்கமாவன:—1. சல்லியம்= தேகத்துக்குள்ளிருக்கும் முள் முதலியவற்றை எடுப்பது. 2. சாலாக்யம்=குத்தி நீரை எடுப்பது. 3. காயசிகிச்சை=நோய்க்கு மருந்து கொடுப்பது. 4, பூதவித்தை=பேய் முதலியவற்றை ஓட்டுவது. 5. கௌமார ப்ருத்யம்=குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் வைத்தியம் செய்வது. 6. அகததந்திரம்=விஷ வைத்தியம் செய்வது. 7. ரஸாயன தந்திரம்=தேகபுஷ்டி ஆயுள் விருத்தியுண்டாக்குவது 8. வாஜீகாணம் = போகங்களில் அதிக உத்ஸாகமுண்டாக்குவது.

நமது சிறு கதை

OUR SHORT STORY

பீச்சாங்கத்தி

I

திருவடீசன் பேட்டை அல்லாஸாமி கோயிலுக்குப்போகும் சந்தில் தென்னண்டைச் சரகில் ஒரு பழைய வீடு இருக்கிறதல்லவா? அது அபூர்வமான சாமான்கள் விற்கும் காதர் பாச்சாவுக்குச் சொந்தம். போனவருஷம் அவன் திடீரென்று இறந்துபோனபொழுது அதைப்பற்றி யார் அக்கரைப்பட்டார்கள்? அவனுக்குப் பெண்சாதியுமில்லை. பிள்ளையுமில்லை. சென்னப்பட்டணத்தில் உறவினர் யாரும் இருந்ததாகவும் தெரியவில்லை. அவனுக்குச் சிநேகிதர்களும் வெகு பேர்களில்லை. ஆதலால் அவன் இறந்தானென கவனித்தவர் ஒருவருமில்லை.

போலீஸாருக்கும், பாரிஸ்டர் ஹாலாஸ்யத்துக்கும் மாத்திரம் அதைப்பற்றிச் சிறிது தெரியும். அவன் இறந்தான் என்பதும், இன்ஸ்பெக்டர் **மாபூஸ்கானும்**, **ஹாலாஸ்யமும்** அவன் வீட்டுக்கு வந்து, தாளிட்டிருந்த கதவை உடைத்து உள் சென்று, அவன் அபூர்வ வஸ்துக்களிலொன்முன பெரிய ஐயனுர் விக்கிரஹத்தால் நசுக்குண்டு கிடப்பதைக் கண்டபொழுதுதான் ஏற்பட்டது. அங்கு தேடிப் பார்த்தபொழுது அவன் ஒருசிறு புஸ்தகத்தில் எழுதிவைத்திருந்த சில சமாசாரங்கள் இன்ஸ்பெக்டருக்கு அதிசயமாய்ப்பட்டன. ஹாலாஸ்யத்துக்கு அதுவுமில்லை.

எல்லாம் இந்தப் **பீச்சாங்கத்தியால்**தான் வந்தது என்று மூன்று துண்டாக ஒடிந்து போயிருந்த கத்தியை எடுத்து ஒன்று சேர்த்து அது ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த பெட்டியில் அதை வைத்து பாரிஸ்டர் காட்டியபொழுது, மாபூஸ்கானுக்கு ஒரு ஒடிந்த கத்திக்கும் ஓர் ஆள் இறந்ததற்கும் எப்படி சம்பந்தம் ஏற்படக்கூடும் என்று அறியமுடியவில்லை.

அப்பொழுதுதான் காதர் பாச்சா கைப்புஸ்தகம் உதவிற்று. அதில் எல்லாம் ஹிந்துஸ்தானியில் எழுதப்பட்டிருந்தது. அவனுக்குக் கைநடுக்கலானதால் எழுத்துக்கள் சில குளறித்தானிருந்தன. ஆயினும், ஒரு பாரிஸ்டரும், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் மனது வைத்தால் எதைத்தான் கண்டுபிடிக்க முடியாது!

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா ரழுதகண் ணீரு மனைத்து.

II

தன் வீட்டு நடையில் தனிமையாய் உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது காதர் பாச்சா அந்தப் பீச்சாங்கத்தியைத் தவிர வேறொன்றையும் பார்ப்பதில்லை. அது அவனைத் தன் மாயத்தில் சிக்கும்படி செய்ததுபோலும். பீச்சாங்கத்தியென்றால் சாதாரணப் பீச்சாங்கத்தியல்ல. வெகு நீளம்; மேலும் பாம்புபோல் வளைந்து வளைந்திருந்தது. பக்கங்களில் கூர்மையே கிடையாது. அதைத்தொட்டு உருவினால் அது கையை வெட்டாது. ஆயினும் அதன் நுனி வெகு கூராயிருந்தது.

அது சாதாரண எஃகால் ஆனதுபோல் தோன்றவில்லை. பழைய காலத்தில் சஸ்திர வேலையில் நிபுணன் ஒருவன் எஃகைவிட கெட்டியாக உலோகக் கலப்பு ஒன்று செய்து அதில் இக்கத்தியைச் செய்தான் போலும். அவனுடன் அம்மாதிரி ஆயுதங்கள் செய்யும் வழக்கமும் அற்றுப் போயிருக்கவேண்டும். அற்புதமான பழைய சாமான்களைப் பரிசிலனை செய்வதில் தன் ஆயுள் முழுவதையும் கழித்த காதர் பாச்சாகூட அம்மாதிரி வேறோர் ஆயுதத்தையும் பார்த்ததில்லை என்று எழுதியிருந்தான். அதன் பிடியும் மரத்தால் ஆனது. ஆயினும் என்ன! ஆச்சரியம். என்ன மரமென்று ஒருவரும் சொல்லக்கூடவில்லை. வெகு அழுத்தமாயிருந்தது. அதில் ஆங்காங்கு சிறிய ரத்தினங்களிழைக்கப்பட்டிருந்தன.

அதைக் கண்கொட்டாமல், அநேக நாழிகை ஒவ்வொரு தினமும் தான் பார்ப்பது வழக்கமென்று காதர் பாச்சா எழுதி வைத்திருந்தான். அது அவன் கையில் வந்ததே ஒரு பெரிய ஆச்சரியம். வடக்கே வெகு தூரத்திலிருந்து வந்த ஒரு ஜோகி அதை ஒரு பலம் கஞ்சாவுக்கு அவனிடத்தில் விற்றுவிட்டுப் போய்விட்டான். விற்கும் பொழுது, "சாயபு! இந்தக் கத்தி சாதாரணமானதல்ல. இதை முதன்முதல் வாங்கியவன் ஒரு ஸ்திரீயின் பேரில் சந்தேகம் ஜனித்துக் கோபத்துடன் அவளை இதனால் குத்திப் போட்டான். அதுமுதல் இக்கத்தி யார் கைப்பட்டாலும் அவர்களுக்குப் பெண் பிள்ளைகள் விஷயத்தில் கோபம் ஏற்பட்டு ஸ்திரீஹத்திக்கு ஹேதுவாகிறது அம்மாதிரி இதற்கு ஏற்பட்ட பாவம் அநந்தம். ஆதலால், ஜாக்கிரதை, மேலும் மேலும் பாவம் சம்பாதித்துக் கொள்ளச் செய்யும் இந்தக் கத்தி" என்று சொல்லி, "இதோ பார்" என்று, அதன் நுனியில் வெளிச்சம் படும்படியாக அதை அசைத்தான். அங்கே அதில் ரத்தக்கறை இருப்பதுபோல் தோன்றிற்று. மறுபடியும் திருப்பிப்பார்க்க அதில் ஒன்றும் தெரியவில்லை. அதுதான் ஆரம்பம். ஜோகி போன பிறகு எவ்வளவோ தினம் அதை ஆயிரந் தடவை பார்த்திருக்கிறான் காதர் பாச்சா சாயபு.

இப்படித் தான் ஒரு நாள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது மணி ஆறரை இருக்கும். சூரியன் அஸ்தமித்துவிட்டான். கடையில் விளக்கேற்றக் காதர் பாச்சா மறந்துவிட்டான் போலும். அக்கத்தியையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அவனுக்குத் திடீரென ஒரு தோற்றமுண்டாயிற்று. தான் வேறொரு மனிதனாகவும் வெகு தூரத்துக்கப்பாலுள்ள ஒரு பெரிய பட்டணத்தி லிருப்பதாகவும் நினைத்துக் கொண்டான். அவனுக்கு ஒரு பிள்ளை இருந்ததாகவும், அதிசுந்தராங்கியான ஒரு ஸ்திரீயை அவன் மணந்ததாகவும் தோன்றிற்று. சிறிது காலம் எல்லோரும் சுகித்து வாழ்ந்தனர். ஆனால் ஒரு நாள் தன் மகன், ரூபவதியான தன் பெண்சாதியின் பேரில் திடீரெனக் காரணமில்லாமல் சந்தேகங்கொண்டு, தான் தனியே வைத்திருந்த இக்கத்தியை எடுத்துக்கொண்டுபோய், அவளை ஒரே குத்தாகக் குத்திவிட்டதாகத் தோன்றிற்று. மரணவாதனையினால் அப்பெண் அலறிய சத்தமும் காதில் பட்டதுபோல் தோன்ற, காதர் திடுக்கிட்டெழுந்து விழித்துப் பார்த்தான். கத்தியின் பேரில் அவன் கை பட்டிருந்தது. ஆச்சரியத்துடன் தனது கைப்புத்தகத்தில் தான் கண்ட தோற்றத்தைக் குறித்திருந்தான். இந்தத் தோற்றம் அவன் கண்ட முதல் தோற்றமன்று. ஜோகியாரிடம் கத்தி வாங்கினதுமுதல் ஐந்தாறு தடவை வெவ்வேறு விதமான மருட்சி அவனுக்குத் தோன்றி யிருந்தது. அவை யெல்லாம் நடந்தவாறே அவன் கைப்புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தன. அக்கத்தியிலுள்ள இப்பயங்கரமான குணம் தான் அவன் மனதை கவர்ந்தது போலும்.

ஆயினும் அக்கிழவன் ஒரு விஷயத்தில் திருப்தி யுடையவனாகவிருந்தான். "பெண்சாதி, பிள்ளை முதலிய ஒருவரும் இல்லாத என்னிடத்தில் இது இருக்கிறவரையில் இது துஷ்கிருத்யத்துக்கு எப்படி உபயோகப்படும்? அப்படி பிறர் கையில் இதை அகப்படும்படி விடுவதைவிட இதை ஒடித்துப் போடுவேன். அப்படிச் செய்தால் என் பிராணனுக்கு ஹானிவருமென்று

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

ஜோகியே சொல்லியிருக்கிறான். ஆயினும் என் போன்ற கிழவன் ஒருவன் இருந்தாலென்ன? போனால் என்ன? என முணுமுணுத்துக் கொண்டு தன் அலுவல்களைப் பார்த்துவந்தான்.

III

ஆகையால் மறுநாள் பாரிஸ்டர் ஹாலாஸ்யமும் அவன் புதிதாய் மணந்த சுப்பலக்ஷிமியும் அவள் அத்தான் சுந்தரமும் தன் கடையில் நுழைந்த பொழுது, பீச்சாங்கத்திப் பெட்டியை உடனே மூடிவிட்டான் பழையகால சாமான்களில் நோக்க முடைய பலர், ஹைரோட்டை விட்டுக் காதர் பாச்சா கடையில் நுழைவதுண்டு. அப்பொழுது அங்குள்ள சாமான்களில் ஒவ்வொன்றாய்ப் பார்த்துக்கொண்டேபோய்க் கடைசியில் தங்களுக்கு வேண்டிய இரண்டொன்றை வாங்கிக் கொள்ளுவது வழக்கம். அம்மாதிரி பார்த்துக் கொண்டுவரும்பொழுது ஹாலாஸ்யம் அங்கே ஒரு மேடையின்பேரில் வைத்திருந்த ஒரு சாஸ்தாவின் (ஐயனார்) தாம்பிர விக்கிரகத்தைப் பார்த்தான். அதன் முகம் ஒருவிதக் கோரமாய் இருந்தது. அதன் கண் பார்வை குறுகி பக்கத்தில் யாரையோ ஆத்திரத்துடன் பார்ப்பதுபோ லிருந்தது. மலையாள தேசத்தை யொட்டியுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவன் ஹாலாஸ்யம். ஆதலால், "சாஸ்தாவுக்குக்கூட விக்கிரகமா?" வென்று அதைப்பிடித்துக்கொண்டு, "சாயபு! இதன் விலை என்ன?" என்று கேட்டான். அதற்குள் அவன் மனைவி, "அதென்னத்திற்கு? பெண்டாட்டிபேரில் சந்தைப்பட்டு ஆத்திரப்படுபவன்போல் இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே பீச்சாங்கத்திப் பெட்டியைத் திறக்க, அதிலுள்ள அவ்வற்புதமான ஆயுதத்தைக் கண்டு பிரமித்து, கையிலெடுத்து, "அதை நீங்கள் வாங்குகிறதாயிருந்தால் அதற்கு அனுகுணமாக இக்கத்தியை நான் வாங்குவேன்" என்றாள். அப்பொழுது காதர் பாச்சா அதை மெதுவாகக் கையில் வாங்கி, "இது விற்பதில்லை மகராஜ்! இது விற்பதில்லை" என்று அவசரமாய்ப் பெட்டியில் வைத்துப் பூட்டினான். "விற்காமல் போனால் இங்கு ஏன் வந்தது?" என்று கேட்டுவிட்டு இரண்டொரு சில்லரை சாமான்களை வாங்கிக்கொண்டு அவர்கள் போய்விட்டனர்.

"இவ்வழகிய சீமானும் சீமாட்டியும் இதை வாங்கிக்கொண்டு போனால், அதனால் வரும் பழி, பாவம் நம்மைத்தொடாராதோ" வென்று பயந்து விற்க மறுத்துவிட்டான் வயதான காதர் பாச்சா சாயபு. சாதாரணமாய் உற்றுப் பார்க்குமளவிலேயே பழி ஏற்படும்படியான தோற்றங்கள் உண்டானால், நிஜமாகவே ஒரு யௌவன புருஷன் கையிலகப்பட்டால், என்ன பிரமாதம் விளையுமோ எனப் பயந்தனன்போலும்.

அதனால்தான் சில தினங்கள் கழித்து அது திடீரென்று திருட்டுப் போகவே அவன் மனது அவ்வளவு கலங்கிற்று. "திருடனாயிருந்தாலென்ன; யாராயிருந்தா லென்ன! என்னிடம் விட்டு இக்கத்தி ஓர் ஆளிடம்போனால் அதன் பழைய குணத்தைக் காட்டி இது ஸ்திரீஹத்திக்கு இடந்தருமே" எனப் புலம்பினன். எங்கு பார்த்தாலும் திரிந்து இரும்புக்கடைகளி லெல்லாம் தேடினன். திருட்டு சாமான்கள் வாங்கிவிற்பதாகத் தெரிந்த இடங்களிலெல்லாம் போய்ப் பார்த்தான். ஓரிடத்திலும் அகப்படவில்லை.

ஒரு மாதமாயிற்று. ஒரு நாள் இலுப்பைத் தோப்புச்சேரியில் அதிகக் கோபம் ஏற்பட்டதால் ஒருவன் தன்னுடைய மனைவியைக் குத்திக் கொன்று போட்டான் என்பதாகப் பத்திரிகையில் வாசிக்கவே, கட்டாயம் இது பீச்சாங்கத்தி வேலைதான், எனத் தீர்மானம் செய்தான். வாஸ்தவமும் அப்படித்தா னிருந்தது. அதைத் திருடியவன், விற்க சமயம் பார்த்துக்கொண்டிருந்த பொழுது, ஒரு நாள் தன் மனைவி பேரில் சந்தேகங் கொண்டு, இக்கத்தியால் அவளைக் குத்திக் கொன்றுவிட்டான் என்பதாக ருஜு ஏற்பட்டது.

அப்பொழுது காதர் பாச்சா போலீஸ்காரரிடம்போய் அக்கத்தி தன்னுடைய தென்றும் அது ஒரு நாள் திருட்டுப்போய் விட்டதென்றும் சொல்லி அதை மறுபடியும் தன்னிடம் கொடுத்து விடும்படி கெஞ்சிக் கேட்டனன். கேஸ் முடிவாகும் வரையில் ஒன்றும் செய்ய முடியாதென்று அவர்கள் முதலில் சொன்னார்கள். அப்பொழுது தவறாமல் தினம் காதர் பாச்சா கோர்ட்டுக்கு நடந்தான். அக்கத்தியை இரு தரப்பு வக்கீல்களும், ஜட்ஜியும், ஜூரிமாரும் தொடும்போதெல்லாம் சாயபுக்குக் கொதிப்புத்தான். "பொல்லாத கத்தி ஆச்சுதே. என்ன நாசம் விளைவிக்குமோ! என எப்பொழுதும் பயப்பட்டுக்கொண் டிருந்தான்.

கேஸ் முடிந்தது. குற்றவாளிக்குத் தண்டனையும் ஆயிற்று. அப்பொழுது காதர் பாச்சா மறுபடியும் போலீஸாரிடம் போய் அக்கத்தியைத்

தன்னிடம் கொடுத்து விடவேண்டு மெனக் கெஞ்சினன். அப்பொழுது அவர்கள், "கத்தியா? அது ஸர்க்கார் தரப்பு பாரிஸ்டர் ஹாலாஸ்யமய்யர் தமக்கு வேண்டுமென்று வைத்துக் கொண்டனரே. இனிமேல் உமக்கு எட்டாதுங் காணும், போம்" என்று சொல்லியனுப்பி விட்டனர். ஆனால் சாயபு சும்மா இருக்கவில்லை பாரிஸ்டர் வீட்டுக்கே சென்றான். அவரிடம் போய்க் கெஞ்சினான். கூத்தாடினான். ஏராளமாகப் பணம் தருவதாகச் சொன்னான். அப்பொழுது அவர், "போ, சாயபு, போ! அன்றையதினம் அம்மாள் இதை வேண்டுமென்று கேட்க, விற்கப்போவதில்லை என்று நீ சொல்லவில்லையா? அன்று இது உன்னிடம் இருந்தது. நீ அப்படிச் சொன்னாய். இன்று என்னிடம் இருக்கிறது. நானும் அப்படியே சொல்லுகிறேன். நான் இதை விற்கவும் போவதில்லை. கொடுக்கவும் போவதில்லை" என்று பரிகாசமாய்ப் பேசுவதுபோல் கண்டிப்பாய்ச் சொன்னான். சாயபு துடிக்கிறான் குனிந்து தரையைத் தொட்டுச் சலாம் செய்கிறான். "அப்படிச் சொல்லக்கூடாது மகராஜ்! இந்தக் கத்தியின் குணம் தெரியாது உங்களுக்கு இது என்னை விட்டுப் போகக்கூடாதே" என்று கத்தினான். அச்சமயம் சுப்பலக்ஷ்மியம்மாளும் உள்ளே வர, அவர்களிடம் போய், "அம்மணீ, இது பொல்லாத கத்தி, இது வேண்டாம் உங்களுக்கு. இதைக் கொடுக்கும்படி யஜமானிடம் சொல்லுங்கள். பணம் தாரேன். வேறு எது வேண்டினும் தருகிறேன்.' எனக் கதறினான்

அவன் பட்டபாடு அவ்விருவரையும் சற்று உறுத்தியது. இதில் என்ன விசேஷம் இருக்கும் என்பதாக யோசிக்கையில், அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். அப்பொழுது அக்கிழவன், "அதைக் கொடுத்து விடுங்கள். இக் கத்தியினால் மோசம்வரும், நேசம் கெடும் நாசம் வரும்" என்று சொல்ல, அவர்கள் மனம் சிறிது தளர்ந்து, "அப்புறம் வா சாயபு, பார்ப்போம்" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டனர்.

IV

அன்று சாயங்காலம், ஏழு ஏழரைமணி இருக்கும். மத்தியானமெல்லாம் காதர் பாச்சாவின் வார்த்தையையே நினைத்துக் கொண்டிருந்தான் ஹாலாஸ்யம். அந்தப் பீச்சாங்கத்தியின் நினைவே பொல்லாது அல்லவா? வந்ததும் தன் அறைக்கு நேரேபோய் அக்கத்தியை எடுத்து அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பார்க்கப் பார்க்க அது அவன் மனதைக் கவர்ந்தது. ஒருவித துவேஷபுத்தியும், காரணம் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு கோபமும் உதித்தது. அப்பொழுது அடுத்த அறையில் சுப்பலக்ஷ்மியும் அவள் அத்தான் சுந்தரமும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தனர். அங்கு அவன்போக, மனதிலிருந்த கோபாக்கினி ஜ்வாலை விட்டு எரிய ஆரம்பித்தது. அவர்களிருவரும் விளையாடுவதே மனதில் ஆக்ரோஷத்தை யுண்டு பண்ணிற்று. ஆயினும் அதற்குக் காரணமும் சொல்ல முடியவில்லை.

இரண்டு மூன்று மாத காலமாக அவர்கள் அப்படி ஆடவில்லையா? இதுவரையில் இல்லாமல் இப்பொழுது திடீரெனத் துவேஷத்துக்குக் காரணம் என்ன? என நினைத்துப்பார்த்தான். தன் கோபம் தப்பானது எனப்பட்டது. ஆயினும் அது போகவில்லை. உடனே சிவ்வெனத் தன் அறைக்கு வந்து உட்கார்ந்துவிட்டான்.

தினமும் கச்சேரியிலிருந்து வந்ததும் தான் இருக்குமிடம் வந்து விசாரித்துப் போகும் தன் புருஷன் இன்று அந்த அறைக்கு வந்து தன்னுடன் பேசவில்லை எனக் கண்ட சுப்பலக்ஷ்மி சிறிது நேரம் கழித்து ஹாலாஸ்யம் இருந்த அறைக்குள் வந்தாள். அப்பொழுதும் எதையோ நினைத்துக் கொண்டிருப்பவன்போல் சும்மா விருந்த தன் பிரியநாதனைப் பார்த்து, "காரியமாயிருக்கிறீர்போ லிருக்கிறது. இருக்கட்டும், எனக்குத் தூக்கம் வருகிறது. நான் போய்ப் படுத்துக் கொள்ளட்டுமா?" என்று சொல்லிக் கொண்டே மெத்தையேறி சயன கிருகத்துக்குச் சென்றாள்.

அப்பொழுதும் ஹாலாஸ்யம் தன்னிடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. ஒரே அடியாய் ஆழ்ந்த யோஜனையி லிருந்தவன்போல் காணப்பட்டான். அப்பீச்சாங்கத்தியை அவன் பார்க்குந்தோறும் அவன் மனது பொங்கியதுபோல் தோன்றிற்று. இரவு பதினொரு மணி இருக்கும். அக்கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு தான் செய்வது இன்னதென்று தெரியாதவன்போல் தடுமாறிக்கொண்டு அவன் மெத்தைப்படி ஏறினான். ஏறும்பொழுதே அவன் மனதில் சுப்பலக்ஷ்மியின்பேரில் ஒரு ஆத்திரம் உதித்தது. அது என்ன, எதற்காக, என்று அவன் யோசனை

செய்பவில்லை. தடதடவென்று படியேறி அவள் படுத்திருக்கும் அறைக்குள் சென்றான்.

அங்கே தனது மஞ்சத்தில் படுத்துக் குழந்தை போல் மனதில் சிறிதும் களங்கமில்லாமல் தூங்கும் அவள் அழகிய முகத்தைக் கண்டனன்; அங்கம் பதறியது. மனம் குழப்பமுற்றது.

V

ஹாலாஸ்யம் தடதடவென்று படியேறிய சமயம், அவன் உட்கார்ந்திருந்த அறையில் ஜன்னல் கதவு சற்று நகர்ந்தது. உள்ளே சந்தடி யாதொன்றும் காணாமலிருக்கவே அது கொஞ்சம் கொஞ்சமாகத் திறக்கப்பட்டு, வெளியிலிருந்து ஒரு மனிதன் மெதுவாக அவ்வறைக்குள் ஏறிவந்தான். வந்து மறுபடியும் குனிந்து வேறொருவனைக் கையைப்பற்றி உயரத்தூக்கினான். அப்படித் தூக்கப்பட்டவன் காதர் பாச்சா.

அப்பொழுது ஒரு பெண் பயத்தால் ஓ வென்று அலறிய கீச்சு சப்தம் அவ்வீடு முழுதும் கேட்டது. உடனே முதலில் ஜன்னலில் ஏறியவன் தொப்பென்று கிழே குதித்து ஓடிப் போய்விட்டான். காதர் பாச்சா அப்படிச்செய்ய வில்லை. அந்த சப்தம் வந்த வழியை நோக்கி மெதுவாக மெத்தைப்படியேறி சயன கிருகத்தில் நுழைந்து அங்கு குடித்தவனைப்போல் மிரள மிரள விழித்துக் கொண்டிருக்கும் ஹாலாஸ்யத்தின் கையிலிருந்து அக்கத்தியை மெதுவாக எடுத்துக்கொண்டு வந்த வழியே போய்விட்டான்.

என்னமோ பயங்கரமான சொப்பனம் கண்டவள்போல இரண்டொரு தரம் அலறி எழுந்தாள் சுப்பலக்ஷ்மியம்மாள். விழித்துக்கொண்டு பார்த்து பக்கத்தில் தன் நாதன் இருக்கக்கண்டு, 'ஐயோ நீங்கள்தானா! யாரோ என்னை அந்தப் பீச்சாங்கத்தியை எடுத்துக் குத்த வந்தாற்போலிருந்தது. விழித்துப் பார்க்கவும் பயமாயிருந்தபடியால், என்னமோ அலறிவிட்டேன். நீங்கள் ஏன் அப்படி நிற்கிறீர்கள்? உங்களைப் பயமுறுத்தி விட்டேனா என்ன?'' என்று சொல்லி இருகரங்களையும் அவன்புறம் நீட்டினாள்

மறுநாள் பொழுது விடிந்தது. ஹாலாஸ்யத்துக்கு அந்த இரவில் நடந்தனவெல்லாம் சொப்பனம்போல் தோன்றின. ஆயினும் என்ன பயங்கரமான விஷயம்! எவ்வளவு பெரிய பாபத்துக்கு ஆளாகத் தெரிந்தான்! என்ன கோபம் வந்தது! தன் அருமை மனையாட்டியிடம் என்ன துவேஷம் ஏற்பட்டது! என்று நினைக்கும்போது, அதற்கெல்லாம் காரண பூதமான பீச்சாங்கத்தி ஞாபகம் வந்தது.

நாம் அந்தப் பைத்தியக்காரக் காரியம் செய்யப் புகுங்கால், யாரோ நமது கையிலிருந்து அக்கத்தியை மெதுவாக வாங்கிக் கொண்டுபோய் விடவில்லையா? அது யார்? அந்த சாயபுபோலிருக்கிறதே என்று யோசித்து உடனே ஆள் விட்டு அவனைக் கொண்டுவரும்படி செய்தான். ஆனால் காதர் பாச்சா ஓரிடத்திலும் அகப்படவில்லை. வீட்டுக்கதவும் உள்ளே தாளிட்டிருந்தது. உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் மாபூஸ்கானுக்குச் செய்தி சொல்லியனுப்பி, இருவரும் பூட்டையுடைத்து உள்ளே போய்ப் பார்த்தார்கள். அங்கே அவன் சாஸ்தாவிக்கிரகம் விழுந்து நசுக்குண்டதைக் கண்ட விஷயம் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாய் இதைப் பற்றி சுப்பலக்ஷ்மி சொன்ன வார்த்தைதான் உண்மையெனத் தோன்றுகிறது. "நான்தான் அப்பொழுதே சொன்னேனே, நீங்கள் சாஸ்தா விக்ரகம் வாங்கும்பொழுது அதற்கனுகுணமாக இக்கத்தியும் வாங்க வேண்டுமென்று. இக்கத்தியைத் தங்களிடமிருந்து எடுத்துக்கொண்டு போனதும் அதனால் மறுபடியும் ஒருவித பாபமும் ஏற்படாமலிருக்க வேண்டுமென்று— அந்த கிழவன்—ஐயோ, நல்லவன்— இதை ஒடிக்கப் பிரயத்தனப்பட்டிருக்க வேண்டும். அழுத்தமான பொருளானதால் அந்த மேடையினடியில் நுனியினால் குத்தி நடுவில் பாராங்கல்லை வைத்து சம்மட்டியால் பிடியண்டை அடித்திருக்கிறான். அது மேடையையே ஆட்டி விட்டது போலும். மேடைமேலிருந்த சாஸ்தா ஆடிக் குனிந்திருந்த கிழவன் தலையில் விழுந்து அவனைக் கொன்றுவிட்டது. ஜோகி சொன்னதாகப் புஸ்தகத்தில் தான் சொல்லியிருந்தானே. அது நிஜந்தான். தன்னைக் கடைசியாக ஒடிக்க வந்த மனிதனை ஒடித்து விட்டதுபோலும். உலகத்தில் ஈசன் செயல் யாரறிவார். கிழப்பிராணன் ஒரு நிமிஷத்தில் போயிருக்கும்'' ஆயினும் இக்கத்திபோனதும் நல்லதுதான். நல்லவர்களுக்குப் பாப எண்ணங்களை உண்டுபண்ணும் குணமுடையதல்லவா?

முற்றிற்று.

———

தேசிங்கு ராஜன்

DESINGH RAJAN

(9ப-ம் பக்கத் தொடர்ச்சி.)

தேசிங்குராஜன் சண்டைக்குத் தயாரித்தல்

உடனே கொலுக்கூடியது அம்மேடையில்,

சிங்கம்போலுட்கார்ந்தானையா ராஜா தேசிங்கு. செயராமு, கங்காராமு, சிற்றப்பதுரை, தரணி சிங்கு, நத்தர் சிங்கு, கோபால் சிங்கு, ராமுசிங்கு, லக்ஷ்மணசிங்கு, ராமுதாரி, லக்ஷ்மணதாரி, மரன் சிங்கு, கிருபுசிங்கு முதலிய துரைகள் ஓரே கும்பலாய் வந்து கூடினார்கள். உடனே வழுதாவூரில் மோவுத்துக்காரனுக்குச் செய்தி சொல்லியனுப்பினர்.

அவ்வூர் செஞ்சியிலிருந்து முக்காத வழி தூரம். அர்க்காரமார்கள் அதிசீக்கிரமே அங்கு போய்க் கடிதத்தை அவ்வீரனிடம் கொடுத்தனர். அன்றைய தினம் அவனுக்குக் கலியாண தினம். உறவினர் சிநேகிதர் பலரும் வந்து கூடியிருக்கின்றனர். கையிற் கங்கணம் கட்டியிருக்கின்றான் மோவுத்துக்காரனும்.

"கர்னூபூரிபரங்கா முழங்குது
வழுதா வூருக்குள்ளே,
சரிகை உடுப்புத் தரித்திருக்கிறான்
மோவுத்துக்காரனும்
அல்லாவே அல்லாவே என்று
தாலிகட்டப் போனான்."

ஆயினும் ஓலையைப் பார்த்தவுடன்

"மண்டி போட்டு எழுந்துட்கார்ந்தான்
மோவுத்துக்காரனும்
தாலியைக் கொண்டு தட்டிலே வைத்தான்
மோவுத்துக்காரனும்
பட்டாஉரு விக்கையிலே பிடித்தான்
மோவுத்துக்காரனும்"

சபையி லுள்ளவர்களைப் பார்த்து,

"கத்தி முனையிலே சோறுதிங்கிற
கர்நாட்டு துரைமாரே,
சத்துருவான நவாப்பு மேலே
சண்டைக்கு போரேன் நான்
நவாப்பை வெட்டி தாலிகட்டுகிறேன்
பட்டாணி துரைமாரே."

என்று,

சலாம் வாங்கித்திரும்பினானையா மோவுத்துக்காரனும்.

அவ்வார்த்தை கேட்ட அவனது தாயும் சையத் சாயபுவும் வேகமாக ஓடிவர, அவன் தாய் "என் கண்மணியே, பத்துமாதம் சுமந்துபெற்று, எறும்பு அண்டவொட்டாமல் காத்து, தரையில் விட்டால் மண்படுமென்று தூக்கிவளர்த்து உன்னை மெத்த புத்திசாலி என்று எண்ணியிருந்தேனே. என்ன சற்றும் யோசனையில்லாமல் சண்டைக்குப் போகிறேன் என்கின்றாய்?

"சந்தனம் பூசி சண்டைக்குப் போனால்
ஜல்தி குண்டுபாயும்
மஞ்சள் உடுப்புடன் சண்டைக்குப்போனால்
மகனைக் காணமாட்டேன்"

என்று சொல்லி "அப்பா, இன்றைக்கிருந்து, தாலிகட்டி விருந்து புசித்து சந்தோஷமாக வந்திருக்கிறவர்களுட னிருந்து அவர்களுக்குரிய மரியாதை செய்து அனுப்பிவிட்டு நாளைக்குப் போகலாம்" என்று அன்புடன் கேட்டனள். ஆயினும் அம்மாதிடம் மோவுத்துக்காரன்,

"என்னிட ராஜன் சிநேகிதக்காரன்
எழுதி யனுப்பினான்
நவாப்பு ஜனமும் செஞ்சியில்வந்து
அலங்க மேறினாம்
இரண்டுநாழிகையில் நவாப்பைவெட்டி
ரத்தக்களரிபண்ணி"

செஞ்சிராஜனுக்கு மகுடம் சூட்டுவேன்.

"கட்டாமல்போனால் நவாப்புகையில்
கடுக செத்துப்போரேன்
பிள்ளைபிறந்தால் சண்டைமுகத்தில்
பேரெடுக்க வேணும்
உந்தன்வயிற்றில் பிள்ளைபிறந்து
ஊதாரி ஆவேனோ
ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு
என்னைப்பெற்ற மாதாவே
சண்டைமுகத்திலே செத்தேனேயானால்
ஜல்தி மோக்ஷமுண்டு
என்றைக்கும் பேர் இருக்கவேணும்
இந்த உலகினிலே
புல்லும் பூமியு முள்ளவரைக்கும்
பேரெடுக்க வேணும்"

சண்டை கெலித்துவந்தால் புகழுடன் தாலிகட்டுகிறேன்;

மண்டுமடிந்து போனேனேயானால்
மனது கலங்காதே
போய்வாரேன் போய்வாரே னிப்போ
புண்யவதிதாயே

என்று பந்தலைவிட்டு வெளியேவந்து குதிரை லாயத்தில் புகுந்து நீலவேணியின்

கழுத்துக்கயிற்றை கால்கயிற்றை
கத்தியால்வெட்டினனும்

நெற்றிமயிரைப்பிடித்து ஏறின மோவுத்துக்கார னுக்கு முன் நீலவேணிக்குதிரை போகாமல் நாட்டியமாடி நின்றது. அப்பொழுது கீழே குதித்து குதிரையைப் பார்த்து

என்னமோசம் பண்ணினையடா
நீலவேணியே நீ
நவாப்புமேலே சண்டைக்குப்போரேன்
நீலவேணியே நீ
சண்டைகெலித்து வந்தேனேயானல்
நீலவேணியே நீ
தங்கத்தாலே ஜீனிபோடுகிறேன்
நீலவேணியே நான்

என்று தட்டிக்கொடுத்து மறுபடியும் அதன் முதுகில் ஏறினன்.

மேகம்போல பறக்குதையா
நீலவேணிக் குதிரை
கோட்டையைச் சுற்றி வளைத்திருக்குது
நவாப்பு பாளையமும்

அதை லக்ஷியம் செய்யாது

பாளையம் குறுக்கே போரானையா
நீலவேணி மேலே.
ஒற்றைக் குதிரையைக் கண்ணாலே கண்டார்
நவாபு பாளயத்தில்
முன்னூறு குதிரையைக் கண்ணாலே கண்டான்
மோவுத்துக்காரனும்
இடது காலிலே சிமிட்டாக் கொடுத்தான்
நீலவேணிக்கு
தாண்டித்தாண்டித் தரைமண்டலம் கொண்டது
நீலவேணிகுதிரை
லகானுமில்லே சீனியுமில்லே
நீலவேணிக்குதிரை
கொரடா இல்லே சேர்ப்பந்தில்லே
நீலவேணிகுதிரை.

கோட்டையில் புகுந்து ராஜாதேசிங்கு சபைக்கு வந்து மண்டிபோட்டு சலாம் வாங்கி,

"இத்தனைமறதி உனக்கு ஏனையா
ராஜாதேசிங்கு
இரண்டு நாழிகைக்கு முன்னே சொன்னல்
நான் வரமாட்டேனே
இத்தனை நாழி நவாப்பு ஜனமும்
இங்கே இருக்குமா
ஜல்தி ஜல்தி உத்தாரம் தாரும்
ராஜாதேசிங்கு."

என, சிங்கம்போல் சீறினன். அப்பொழுது தேசிங்குராஜனும் அவனைப் பார்த்து "கல்யாண உடுப்பும் கையில் கங்கணமும் கட்டியிருக்கின்ற மோவுத்துக்காரனே—நீ கஸ்தூரி சந்தனம் பூசி இருக்கின்றாய்—தாலிகட்டி வந்தாயோ இல்லையோ? ஜல்தி சொல்லும்" எனக் கேட்டனன். மோவுத்துக்காரனும்

"கத்திபிடிக்கிற சிப்பாய்மாருக்கு
பெண்டாட்டி என்னத்துக்கு
நானொரு பெண்ணைத் தாலிகட்டுவேனே
ராஜாதேசிங்கு
நவாப்பை வெட்டி நவாப்புமகளைத்
தாலிகட்டவேணும்
ஆற்காட்டிலே கலியாணம் பண்ணுகிறேன்
ராஜாதேசிங்கு
என் கலியாணத்திற்கு நீ வரவேணும்
ராஜாதேசிங்கு"

என்று பரிகாசமாகப் பேசி, பிறகு நல்லது அந்தப் பேச்சிருக்கட்டும் நீர் வருகிறீரோ நான் போகட்டுமா ஜல்தி ஜல்தி உத்தரம் தாரும் என,

கனைத்துக் கதும்பி எழுந்தானையா
மோவுத்துக்காரனும்.

ராஜா தேசிங்குக்கு அதிக சந்தோஷம் பிறந்துவிட்டது. பிறகு தன்னருமைச் சிநேகிதனைக் கிட்ட அழைத்து, கையைப்பிடித்துத் தழுவிக் கொண்டு, "நீ ஒருவனாய் சண்டைக்குப் போக வேண்டாம். நானும் கூட வருகிறேன். ஆயினும் மூன்றுவருஷத்திற்கு முன் கலியாணம் செய்தும் முகத்தையே பார்த்தறியாத எனது ராணியைப் பார்த்து வருவேன் என்று சொல்லி தன் சிற்றப்பன் தரணிசிங்கு ராஜனிடம் போய் பெண்சாதியைப் பார்த்துவிட்டு உடனே தான் சண்டைக்குப் போவதாகத் தான் பண்ணியிருக்கும் தீர்மானத்தைத் தெரிவித்தனன். அப்பொழுது அவ்வரசன் "என்னருமை மகனே, நீ பிறந்தது வெள்ளிக்கிழமை. உன் குதிரையும் ராணியும் பிறந்தது வெள்ளிக்கிழமை. சண்டையும் வெள்ளிக்கிழமை வந்திருக்கிறது ஆகையால் இன்று சண்டை வேண்டாம். நாளைக்குப்போய் ஜயசீலனாய்த் திரும்பிவரலாம்" என ஆதரவுடன் கெஞ்சினன். அதைக்கேட்டு ராஜாதேசிங்கு சிற்றப்பனைப் பார்த்து "இன்றுதானே நவாபு ஜனங்கள் இங்கு வந்திருக்கின்றன. கோட்டையைச் சுற்றி வளைத்திருக்கின்றது நவாபு பாளையம். பேட்டையைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள்.

" இரங்கர் கோயிலில் துலுக்கர் வந்தால்
சும்மா இருப்பேனோ
ராஜகுலத்தில் நானும் பிறந்தேன்
ரோஷக்காரனுக
முன்வைத்தகாலைப் பின்வைப்பேனோ
சிறப்பராஜாவே "

எனப் பதிலளித்தனன். அப்பொழுது அக் கிழவன் "என் மகனே தேசிங்கு, நீதான் சொன்ன வார்த்தையைக் கேட்கமாட்டேனென்கிருய். உன்னை யெடுத்து நான் வளர்த்தேன் உனக்கு ஆறு மாதம் ஆகாதென்று நம்முடைய குரு சொல்லியிருக்கிருர். இப்பொழுது மூன்று மாதம் ஆகிவிட்டது" என்று சொல்லி, மேல் பேசுமுன், தேசிங்குராஜனுக்கு வந்த கோபத்தை அறிந்து தான் யாது சொன்னுலும் கேட்க மாட்டானென்று தெரிந்து கொண்டு கடைசியாக "நீ ராணியுடன் பேசும்போது திரைக்கப் புறமிருந்து பேசு" என சொல்லிப் போனுன்.

ராஜனும் ராணியும்

தேசிங்குராஜனும் ராணி அரண்மனை வந்து சேர்ந்தான். ஒறரையில் குறுக்கே திரை போட்டிருந்தது. அரசன் வந்தவுடன் ராணியை யழைக்கத் தாதிமார் போனுர்கள்.

' மயிலைக்குயிலை மருளச்செய்யும்
மாது ராணியம்மாள்
அன்னநடையைப்பின்னிடச் செய்யும்
அன்னை ராணியம்மாள்
மெத்தமனதில் ஆச்சரியமாக
வியப்பினைக் கொண்டாள்

ராஜனழைத்த காரியமறிய சிங்காதனம் விட்டெழுந்து மஞ்சள் சாலையில் வந்து சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்து கஸ்தூரி மஞ்சள் நிறம் துலக்கி, இந்திர வர்ணப்பட்டுடுத்தி சீவி வகுத்துக் கொண்டையிட்டு வண்ணவிழிக்கு மையும் சந்திரப் பிறைபோன்ற முகத்துக்குப் பொட்டுமிட்டு

கச்சை இருக்கி முடிந்தாளையா
காதலி ராணியம்மாள்
முத்துக்கொஞ்சி, கொப்புத்தொங்கல்
துடியத் தொங்கவிட்டார்
ரவைகளிழைத்த கம்மல் ஜிமிக்கி
நல்கொப்பு மயிர் மாட்டி
நானிலம்புகழும் கத்திரி பாவலி
நலமாய்த் தரித்தார்கள்
கண்டசரங்கள் மோகனமாலை
கழுத்தில் தரித்தார்கள்
இடையி லொட்டியாணம் பலவித கொலுசு
இனிப்பாய் மாட்டினுர்கள்.
கலகலெனச் சுருள் கொலுசுடன்
மற்றதும் காலில் கொஞ்சிடவே

அரசன் இருக்கும் அரண்மனையில் வந்தாள் ராணி அம்மாள். அப்பொழுது இராஜாதேசிங்கு " எந்தன் ராணியே, நவாப்மேல் சண்டைக்குப் போகிறேன், நாழிகை ஆகிவிட்டது. சீக்கிரம் உத்திரவு கொடுக்கவேணும்" எனக் கேட்க. ராணியம்மாள் 'என் பிராண நாதரே! தாம் இந்த வருஷம் சண்டைக்கென்று கோட்டையைவிட்டு வெளியே போகவேண்டாம்' எனச் சொல்லினள். அப்பொழுது ராஜாதேசிங்கு, "பெண் புத்தி சண்டைக்கு ஏற்குமோ," என இகழ, ராணி அம்மாள் "என்னைக் கலியாணம் பண்ணி மூலையில் வைத்தீர் அன்றுமுதல் சந்தோஷ சுகமொன்றும் யானறியேன். ஆயினும் இந்த சவுரியம் முழுமையும் இருக்கவேண்டும்

" சண்டைக்கு பயந்து வந்தீரானுல்
எந்தன் பிராணநாதா
கோட்டைக் கதவை சாத்திப்போடுவேன்
எந்தன் பிராணநாதா
அலங்கத்துமேல் பீரங்கி ஏற்றுவேன்
என் பிராணநாதா
அடியோடே நான் கொளுத்திப் போடுவேன்
என் பிராணநாதா"

என சொல்ல, போய்வருவதாக உத்திரவு கேட்டனன். பிறகு பாக்கு வெற்றிலையை கையிலெடுத்து வாங்கிக்கொள்ள வேண்டுமென ராணி கேட்க அரசன் தன் கையை நீட்டினுன். ராணி அக்கையை உள்ளிழுத்துப் பார்த்து, "கையே இத்தனை அழகாயிருக்கிறதே. முகம் எத்தனை யழகாயிருக்குமோ ? பாவி, நான் செய்த பாவமிது. என் தலையெழுத்து இப்படியு மிருக்கிறதே என்று

"கதறியழுது புலம்பினுளையா ராணி அம்மாளும்"

அப்பொழுது ராஜாதேசிங்கு அவ்விடம் விட்டு கொலுவுக்கு வந்து, உடனே குதிரையைக் கொண்டுவரும்படி சொல்ல, நல்ல அலங்காரத்துடன் பாராசாரியைக்கொண்டு வந்து நிறுத்தினுர்கள். தேசிங்குராஜன் குதிரையண்டை போய் அதன் மேலேறுங்கால்

சாகிறேமென்று தெரிந்ததையா பாராசாரிக்கு
தரையைத் தரையைப் பார்க்குதையா பாராசாரியும்
மிரளமிரளக் கண்ணைச் சுழட்டுது பாராசாரியும்
படபடவென்று நடுங்குதுமேதகம் பாராசாரிக்கு

தேசிங்குராஜன் அப்போது அதைப் பார்த்துத் தட்டிக் கொடுத்து

"சாகத்தானு பயப்பட்டாய் நீ பாராசாரியே"

என்று தைரியப்படுத்தினான்.

லகானை இழுத்து கையில் பிடித்து ராஜாதேசிங்கு குதிரை ஏறின சமயம், அவனுடைய சுற்றத்தார்களும் மற்ற துரைமாரும் சண்டைக்கென்று குதிரை யேறினார்கள். அம்மாதிரி சேர்ந்த வீரர்களின் மொத்தம் முன்னூறு பேர் தான் இருந்தனர். குதிரையை ரங்கநாதர் கோயிலுக்கு ஓட்டி மடைப்பள்ளியில் புகுந்து புனுகு, ஜவ்வாது, வெட்டிவேர், மருக்கொழுந்து, கண்டமாலை, தண்டமாலை கொண்டு பொன் செம்பில் பன்னீர் கொண்டுவந்து தூங்காவிளக்கை சந்நிதியில் ஏற்றி வைத்து பூஜை முதலியன செய்து, "நாராயணு, கோவிந்தா, நந்தகோபாலா, பக்தவத்ஸலா, சங்கசக்ர கோதண்டபாணீ, மதுசூதனு, தாமோதரா, முறையிட்ட கரிக்கு அபயம் தீர்த்த பரவஸ்துவே, நான் நவாபுபேரில் சண்டைக்குப் போகிறேன் கெலித்துவர உத்திரவு தரவேண்டும், வந்தவுடன் தங்கத்தால் கலசம் வைக்கின்றேன்," என்று இருகரங்களைக் கூப்பி எதிரிலே நின்றான். அப்பொழுது அபசகுனங்கள் பல கண்டன. அவ்வரங்க தேவனுடைய

"கண்டமாலை தண்டமாலை கருகிப்போயிற்று
கழுத்திலிருந்த முத்தாரங்கள் கழன்று விழுந்ததுபார்
கண்ணீர் நிறையத் தண்ணீர் சொரியுது ரங்கநாத [ருக்கு
அத்தர்பன்னீர் புனுகு ஜவ்வாது கரைந்து விழுந்தது
நெற்றியிலிருந்த திருமணி அப்போ நிலத்தில் விழுந் [தது.

கழுத்திலிருந்த துளசி மாலை
கழன்று விழுந்ததுபார்.
ஏற்றி வைத்ததிருவிளக்கங்கே
திட்டென விழுந்ததாம்
எதிரிலிருந்த கோபுரமங்கே இடிந்து விழுந்தது
பக்கத்திலிருத்த லக்ஷுமியங்கே பதறி
விழுந்தாளாம்
எதிரிலிருந்த கருடஸ்தம்பம் இரண்டாய்
விழுந்தது பார்
கிழக்கு முகத்திலிருந்த சாமி மேற்கே
திரும்பினாராம"

இந்தச் சகுனங்களைக் கண்ணாலே கண்ட ராஜா தேசிங்குக்குக் கோபம் வந்து மூண்டு கொண்டது

"உனக் கென்னகேடு வந்தது சாமி ரங்கனாதரே
நானல்லவோ பயப்படவேண்டும் நான் முன் வைத்த காலை பின் வைப்பேனோ.

நீ சாகவுமாட்டாய் பிறக்கவுமாட்டாய் ரங்கநாதரே.
ஒரே ஜனன மெடுத்தீரையா ரங்கநாதரே.
இன்று செத்தால் நாளை பிறப்பேன் ரங்கநாதரே.

எனச் சொல்லி, "நான் செத்தாலும் பிழைத்தாலும் உம் பாதத்தில் சேர்த்துக் கொள்ளும்" என்று கும்பிட்டுக்கொண்டு கோயில் வெளியே வந்து, நாராயணு! கோவிந்தா வென்று பன்னிரண்டு அங்குபடிவைத்த தன் குதிரைமேல் ஏறிக் கோட்டையை விட்டு வெளியே வந்தான். அவன் வருவதைப் பார்த்த நவாபு பாளையமும் கலங்கி பயந்து ஓட ஆரம்பித்தது.

கள்ளக் குரிச்சிக் கோடிப்போகுது
நவாப்பு பாளையமும்.
திருவண்ணுமலைக் கோடிப்போவுது
நவாபுபாளையமும்
கணவாக் குரிச்சிக்கு ஓடிப்போவுது
நவாப்பு பாளையமும்
புலியா யிருந்த பாளைய மெல்லாம்
பூனையாய்ப் போச்சுது

அப்பொழுது அக்கலவரத்தைக் கண்ட பங்காரு நாய்க்கன் நவாபிடம் வந்து

எமனைப்போலே வாரானையா ராஜாதேசிங்கு
சிங்கம்போலே வாரானையா ராஜா தேசிங்கு
வருகு முன்னமே வீசிப்போடுவான் ராஜா தேசிங்கு.

பக்கத்தில் உள்ள தாழனூர் மலையனூர் ஏரிகளில் ஜலம் பதின்காதவழி பரவி இருக்கிறது.

ஆற்றுக்கரை இரண்டு நாழி வழி
சங்கராபரணியும்

அதைக் கண்ணாலே கண்ட சமேதார்மாரில்

நத்தர் சிங்கு கோபால் சிங்கு
ஆறறிலே குதித்தாராம்
சிற்றப்ப துரை தரணிசிங்கு
ஆற்றிலே குதித்தாராம்
ராம சிங்கு, லக்ஷ்மண சிங்கு
ஆற்றிலே குதித்தாராம்
ராமதாரி லக்ஷ்மணதாரி
ஆற்றிலே குதித்தாராம்
பேட்டை சிப்பாய் மோவுத்துக்காரனும்
ஆற்றிலே குதித்தாராம்

பொய்படு மொன்றோ புனை பூணுங் கையறியாப் பேதை வினைமேற் கொளின்.

மற்றுமுள்ள அநேகர் தண்ணீரைப் பார்த்து பயந்து செஞ்சிக் கோட்டைக்குத் திரும்பினர். முப்பது குதிரை வீரர் தாம் அக்கரை வந்தனர். அவர்களுக்குள் மோவுத்துக்காரன்தான் பெரியோன். அவன் தேசிங்கு ராஜனைப் பார்த்து,

"முதல் யூகத்தில் இருக்கிறுரையா
சுபங்கி துரைதானும்
கடைசி யூகத்தில் இருக்கிறுனையா
நவாபு சைதுல்லா.

முதல் சண்டைக்கு நான் போக உத்தாரம் தரவேணும் என்று கேட்டனன். அப்போது தேசிங்கு ராஜன் மோவுத்துக்காரனைப் பார்த்து "ஐயனே உனக்கண்ணனும் இல்லை தம்பியுமில்லை. கையிலே கங்கணம் கட்டியிருக்கின்றுய். சண்டை முகத்தைப் பார்த்தறியாத நீ ஒண்டியாய்ச் சண்டைபோடவேண்டாம். நானும் வருகிறேன்" எனச் சொல்லினன். அதை மோவுத்துக்காரன் ஒப்பவில்லை.

நானும் நீயும் புகுந்து வெட்டினல்
ராஜாதேசிங்கு
உன்பேர் முன்னல் வருமேயன்றி
என்பேர் வருகாது
கால் நாழிகை நீர் கண்ணல் பாரும்
ராஜாதேசிங்கு
நவாபின் பாளையம் நானே இப்போ
ஹதம் செய்யாவிட்டால்
எந்தன்பேர் மோவுத்துக்காரன் என்று
எண்ணுவார்களோ

என்று சொன்ன மோவுத்துக்காரனைப் பார்த்து "நான் என்ன சொன்னலும் கேளேனென்கிறுய்" என்று சந்தோஷமாக உத்தரவு கொடுத்தனுப்பினன். மோவுத்துக்காரனும்

சலாம் வாங்கித் திரும்பினனையா
நீலவேணிமேலே
இடது காலுக்கு சிமிட்டா கொடுத்தான்
நீலவேணிக்கு
காற்றுப்போலப் பறக்குதையா
நீலவேணிக் குதிரை

ஒற்றைக் குதிரை வருவதைக் கண்ட சுபங்கி துரை தன் ஜமேதார்மாரைப் பார்த்து பீரங்கி போடச் சொன்னன்.

பளபள வென்று பளுத்தா தீர்த்தார்
ஜமேதார் மாரும்

ஆனல் நீலவேணி ஓரடியும் படாமல் நடுத்தண்டிலே வந்து சேர்ந்தது.

மூவாயிரம் குதிரை வந்து வளைத்தது
மோவுத்துக்காரனை
பட்டா உருவிக் கையில் பிடித்தான்
மோவுத்துக்காரனும்

குதிரையை வடக்கு முகம் திருப்பி அங்கே வளைத்துக்கொண்ட ஆயிரங் குதிரையை
கத்தி எடுத்து வீசினனையா மோவுத்துக்காரனும்

அங்கிருந்து மேற்குப்பக்கம் திரும்பி அங்கே வந்து வளைந்த ஆயிரம் குதிரையை எதிர்த்தான்.

காகாவென்று சுழலுதுபாரு
நீலவேணிக்குதிரை
குடல்கள் சரிந்திட சில குதிரைகள்
வந்து விழுந்ததுபார்
தலைகள் துண்டாய் சில குதிரைகள்
தவரி விழுந்ததுபார்
துண்டு துண்டாய் தூக்கி வெட்டுரான்
மோவுத்துக்காரனும்
கால்மாடு தலைமாடாய்ப் போகுது
நவாபு பாளையமும்.

சுபங்கிதுரை தன் பீரங்கிகளை அவன் பக்கம் திருப்பி அவனைச் சுட்டுப் பார்த்தான்.

அத்தனை குண்டுக்கும் தப்பிவருகுது
நீலவேணிக்குதிரை.

அங்கிருந்து கிழக்குப் பக்கம் திரும்ப, அங்கு

மார்புபிளந்து சில குதிரைகள்
மாய்ந்து விழுந்ததுபார்.

இப்படியாக வெட்டிக்கொண்டு தண்டில் மோவுத்துக்காரன் புகுந்தான். பாளையங்களை கொசுக்கள் போல் தேய்க்கின்றுன். அரிந்தரிந்து போடுகிறுன். அப்போது சுபங்கிதுரை ஒரு யானையின் பேரில் ஏறி அநேக யானைகளை அவ்வீரனுக்கு எதிரில் விடுத்தான். அதைக்கண்டு

பாலா உருவிக் கையிலே பிடித்தான்
மோவுத்துக்காரனும்

நீலவேணியும் யானைக்குமேல் ஒரு சாணுயரம் உயர்ந்து பாய்கிறது.

குதிரைபோகிற வேகத்தாலே குத்தி சாய்க்கிறுனும் பிறகு தெற்கேயிருந்த சுபங்கி துரையைக் கண்டு அவன் எதிரே குதிரையை விட்டு அவன் யானையின் பேரிலிருந்த மாவெட்டியை வெட்டித்தள்ளி அவனுடைய மார்புக்கு நேரில் பாலாவை இழுத்துப் பிடித்தான். அப்பொழுது சுபங்கி துரை, நடுங்கி, யானையிலிருந்து விழுந்து ஒற்றைக் கை பொடிய, ஒரு கையாலே சலாமிட்டு அப்போதே

ஓடிப்போகிறேனென்று உயிர் பிச்சைகேட்டான். அவனை ஓடிப்போவென்று சொல்லி விடுத்து மறுபடி தண்டில்புக, திமிரிக்கோட்டை ஷேக்மகம்மது அவனை வந்தெதிர்த்தான். கையிலுள்ள பாலாவால் மோவுத்துக்காரன் தொடையில் குத்தினான். அதை வலது கையால் பற்றி எடுத்தெறிந்து கோபத்துடன் சிவ்வென்றெழுந்து,

கத்தி எடுத்து ஷேக்மகமது
கழுத்தை வெட்டப்போனான்.

அப்பொழுது ஷேக்மகமது, என்
தலையைக் காக்கவேண்டுமையா மோவுத்துக்காரனே
தெய்வமும் நீரே. தேசிகர் நீரே மோவுத்துக்காரனே

அடிமை என்னை ஆதரிக்கவேண்டும் என்று வணங்கி ஸலாம் செய்தான். அவனை ஈட்டியெறிந்த கையை வெட்டிவிட்டு மேலும் சைனியத்தில் புகுந்து போகிறான்.

சத்திபிடித்த சிப்பாய்மாரை
கரணையாடிவாரான்
சலாம் வாங்கின சிப்பாய்மாரை
ஓடிப்போகச் சொன்னான்.

இம்மாதிரி ஒரு காலமும் சண்டை செய்தறியாத பாலனான மோவுத்துக்காரனுக்கு கைஓய்ந்து போச்சுது. இரத்தக் கவலும் கவ்விக்கொண்டது ராஜாவண்டை போகவேண்டுமென்று குதிரையைத் திருப்பிவருகிறான். அவ்வேளை பதுங்கியிருந்த குண்டுக்காரர் இரட்டை குண்டை சுட அந்தக் குண்டு நெற்றியில் பட்டது மோவுத்துக்காரனுக்கு

அல்லாவே: அல்லாவே: என்று கீழேவிழுந்து
வைகுந்தபதவி சேர்ந்தானையா மோவுத்துக்காரனும்

நீலவேணிக்குதிரை அவனைச் சுற்றிசுற்றி முகந்து நின்றது. ஆனால் தன்னைப் பிடிக்க வந்த நவாபின் சைன்யத்தைப் பார்த்து கரகரவென்று சுழன்று காலினாலே எட்டி உதைத்தது. பிறகு இரண்டு தாண்டில் தேசிங்குராஜன் முன்னால் வந்தது. குதிரையைப் பார்த்த ராஜாதேசிங்கு அதைக் கட்டிக்கொண்டு. விசனத்துடன் அதை முன்னால்விட்டு மோவுத்துக்காரன் இறந்தவிடம் வந்து சேர்ந்தான்

அவனை வாரியெடுத்து மடிமீது
வைத்தான் ராஜாதேசிங்கு.

முகத்துடன் முகம் வைத்து கோவென்று கதறி என்னுடன் வளர்ந்த தம்பி, " என்னை விட்டு நீ எப்படிப் போனாய். எனப் புலம்பினான்.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பி.ஏ.]

அம்பு :—(தடுத்துப் புன்முறுவலுடன்)ஐயா! கொஞ்சம் நிதானியுங்கள். அவசரப் படாதீர்கள். போகிறேன் என்கிறவர்களைத் தடுக்க என்னால் முடியுமா? முடியாது. தவிர, தாம் இன்று எனக்குச்செய்த பேருதவியின் காரணமாக நான் தங்களுக்கு இந்த ஊழியஞ் செய்கிறேனேயன்றி வேறெதற்காகவுமன்று. தான் ஏதோ ஏமாந்து விட்டதாகச் சொல்லுகிறீர்கள். நான் தங்களை எந்த விஷயத்தில் ஏமாற்றினேன் என்பதும், தாங்கள் ஏமாந்து எக்காரியஞ் செய்துவிட்டீர்களென்பதும் எனக்கு விளங்கவில்லை. நான் இன்னவளென்பதைத் தாங்கள் அறிவீர்களென்றே இதுவரையும் எண்ணியிருந்தேன். என் பெயரைத் தாங்கள் கேட்காமலிருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். நிற்க, இது தாசி வீடு என்பதை யறியாமலே உள்ளே வந்துவிட்டீர் என்று வைத்துக்கொள்ளுவோம். இப்பொழுது மணி சுமார் ஐந்திருக்கும். இவ்வேளையில் தாங்கள் இந்த வீட்டிலிருந்து வெளிக்கிளம்பினால், பார்ப்போர், தாம் இவ்விரவு முழுவதும் இங்கிருந்து விட்டுப் போவதாக நினைப்பார்களா; அல்லது இப்பொழுதுதான் வந்துவிட்டுச் செல்வதாகக் கருதுவார்களா? அன்றி, உண்மையாக நடந்தனவற்றைச் சொன்னால்தான் நம்புவார்களா? தாங்களே நன்றாக யோசித்துப் பாருங்கள். நான் தாசிகள் வம்சத்தில் பிறந்திருக்கிறேனெனினும் தாசித்தொழிலை இதுகாறுஞ் செய்தவளல்ல. அதில் எனக்கு விருப்பமும் இல்லை. என்னை ஆதிமுதல் கை தொட்டவரைத்தவிர இதர ஆடவர்களுடைய தேகஸ்பரிசம் என்மீது இன்றுவரை பட்டதில்லை. இன்றிரவே தாங்கள் என்னைத் தொட்டிருக்கின்றீர். அதுவும் நான் மூர்ச்சையா யிருந்தபொழுது. என் காதலரும் என்னைத் தம் சொந்த மனைவிமாதிரி பாவித்து வருகிறார். அவர் இவ்வூரை விட்டுச் சென்று இன்றைக்குச் சரியாக ஒரு வாரமாகிறது. இன்று அல்லது நாளை வந்துவிடுவார். அவர் இல்லாத சமயத்தில் நான் தனித்து வெளிச் சென்றதில்லை. அவருடைய உத்தரவும் அதுவேயாகும். அதை மீறி இன்று சென்றேன். அதனுடைய பலனையுங் கண்டேன். இவைகளை எல்லாம் எதற்காக நான் சொல்லவேண்டுமென்று தாங்கள்

கேட்கக்கூடும். இப்பொழுது தாங்கள் செல் வதை எவரேனும் பார்த்திருந்து அவர் வந்தபின் அவரிடம் சொன்னால் என் கதி என்னவாகு மென்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். தான் மணந்துகொண்ட மனைவியைவிடப் பன்மடங்கு அதிகமாக என்னை நேசித்து வருவதுமல்லாமல் இந்த வீட்டை எனக்கென்று விலை கொடுத்து வாங்கிக் கொடுத்தார். வேண்டுமவ்வளவு சாமான் களை வாங்கிப்போட்டார். ஆடையாபரணங்களை வாங்கித் தந்தார். இன்னோரன்ன உபகாரஞ் செய்தவர்க்கு அவர் ஊரிலில்லாத சமயம் துரோ கஞ்செய்தேன் என்று கேள்விப்பட்டால் அவர் மனம் என்ன பாடு படும். அவர் மறுபடியும் என் முகத்தில் விழிப்பாரா? என்று சொல்ல,

இரத்:—அத்தகைய துரோகம் நீ இப்பொ ழுது ஒன்றுஞ் செய்து விடவில்லையே.

அம்பு:—தாங்கள் இவ்வுலகம் இத்தன்மைய தென்றறியீர் பனைமரத்தடியிலிருந்து பாலைக் குடித்தாலுங் கள்ளென்று சொல்லக்கூடிய உல கம். அவ்விதமிருக்கத் தாம் இங்கு வந்து செல்வ தைக் கண்ணுற்றோர் வேறு விதமாகக் கருதார் என்று நினைப்பது அனுபவக் குறைவேயாகும். தங்களுடைய மனதைப்போல் இவ்வுலகம் அவ்வ ளவு தூய்மையை யுடையதன்று எனக்கூறி முடிப்பதன்முன், 'அம்புஜம்! அம்புஜம்! என்ற ழைத்துக்கொண்டே சுமார் ஐம்பது வயதுடைய ஒரு கிழவி அவ்வறைக்குள் வந்தாள்.

இக்கிழவிதான் அம்புஜத்தின் தாய்; கமலம் என்பவள் இவள் உள்ளே வந்தவுடன் அம்புஜத் தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "மகளே உன் விதி இவ்வாறாயிற்று! என்று சொல்லிக் 'கோ' வென்றழுதாள்.

அம்பு:—(ஆச்சரியமும் விசனமுங் கொண்ட வள்போற் கண்ணீர் வடித்து) அம்மா! என்ன இது? விஷயமென்ன? நலியாயிருந்த மாமா ஏதே னும் இறந்துவிட்டாரா? அல்லது வேறேதே னும் விசேஷமுண்டோ. சமாசார மின்ன தென்று சொல்லாமல் அழுதால் நான் என்ன வென்று கண்டு கொள்வது. சங்கதி இன்ன தென்று தயவுசெய்து சொல்லுங்கள், எனக் கேட்டாள்.

கமல:—இறந்தோரை நினைத்து அழுதால் மறுபடியும் அவர்கள் உயிர்பெற்று எழுந்துவரப் போகிறார்களா? உயிரோடிருக்கும் உன்னை நினைத்தே அழுகிறேன் என்று சொல்லி மறுபடி யும் அழலானாள்.

அம்பு:—வயதேறி விட்டாலே புத்திமழுங்கி விடுகிறது. விஷயமின்னதென்றுஞ் சொல்லமாட் டாய். சந்தர்ப்ப மறிந்து நடக்கவுந் தெரியாது சைகை செய்தாலுமுணர்ந்துக் கொள்ள முடி யாது. ஐயா உட்கார்ந்து கொண்டிருப்பதை யறியாமல் இவ்விதங் கத்துகிறாயே என்று சொன்னாள்.

கமல:—(அப்பொழுது தான் தெரிந்து கொண்டவள்போல் சற்று ஒதுங்கி நின்று முக்காடிட்டுக்கொண்டு இரத்தினத்தைத் தன் கடைக்கண்ணாற் பார்த்து) கண்ணே! இவர் சமீ பத்திற்றானா நாடகசாலையில் நீ உட்கார்ந்து கொண்டிருந்தாய்? இவருடைய வீட்டிற்குத் தானா நீ போயிருந்தாய்? என்று கேட்டாள்.

அம்ப:—(வியப்படைந்தவள் போல்) இவை களை யெல்லாம் உனக்கு யார் சொன்னார்கள்? அல்லது நீயே பார்த்துக் கொண்டிருந்தாயா? என வினவினாள்.

கமல:—மகளே! என்னுடைய டிக்கட்டை யும் நீயே வைத்துக்கொண்டு கொட்டகைக்குட் சென்று விட்டாய். நான் மாமாவுடன் சற்று நேரம் பேசியிருந்து அவரை யனுப்பிவிட்டு உள் ளே வரலாமென்று வந்தேன். டிக்கட்டில்லாமல் உள்ளே விட முடியாதென்றார்கள். உன்னையா வது கூப்பிடலாமென்று பார்த்தேன். நீ உட்கார்ந் திருந்த விடமும் எனக்குத் தெரியவில்லை. பிறகு அங்கு ஏன் காத்துக்கொண்டு நிற்கவேண்டும். நாடகம் முடியுஞ் சமயம் திரும்பிவந்து உன்னை அழைத்துக்கொண்டு போகலாமென நினைத்து வீட்டுக்கு வந்தேன். நான் வந்த கொஞ்ச நேரத் திற்குள் பிள்ளைவாள், இங்கு வந்தார். உன்னைக் கேட்டார். பயந்துகொண்டு சங்கதியைச் சொன் னேன். ஆகா! நானில்லாத சமயத்தில் நாடகம் பார்க்கப் போனாளா! என்று சொல்லி நான் எவ் வளவு தடுத்துங் கேட்காமற் கோபத்துடன் சென்றார் நீ வருவதற்குச் சற்று முன்னதாக மறுபடியும் வந்தார். ஐயோ! மகளே! அப்புறஞ் சொல்ல நாவெழவில்லையே எனக் கூறித் தேம்பித் தேம்பியழுதாள்.

அம்பு:—(கண்களில் நீர் வடிய) அம்மா தயவு செய்து அப்புறம் நடந்ததின்னதென்று சொல்லு. அவர் என்ன சொன்னார் எப்பொ ழுது வருகிறேனென்று போனார். மிகவும் கோ

பித்துக் கொண்டாரா? சங்கதி யின்னதென்று சொல்லிவிட்டுப் பின் அழக்கூடாதா என்று விசனத்துடன் கேட்டாள்.

கமல:—அழுதால்தான் தீருமா, அன்றி அடித்துக்கொண்டாற்றான் போனது வரப்போகிறதா? திரும்பி வந்தவர் கொஞ்சநேர முட்கார்ந்தார்; எழுந்தார். அங்குமிங்கும் சற்று உலவினார். என்னை ஏற இறங்கப் பார்த்து "சண்டாளி! இந்த வேலை செய்யவேண்டுமென்று எவ்வளவு நாட்களாகக் காத்துக்கொண்டிருந்தாய். உங்கள் ஜாதித்தொழிலைக் காட்டிவிட்டீர்களல்லவா உன் மகளுக்காகவேண்டி என் சுற்றத்தாரை நீக்கினேன். என் மனைவியை விலக்கினேன். எனக்கிருந்த ஆஸ்தியெல்லாம் வாரிக்கொடுத்தேன். இவ்வளவுசெய்தும் பலன் என்ன? நான் இல்லாத சமயத்தில் எனக்குத் துரோகம் நினைத்து வேறொருவனைத் தழுவிக்கொண்டாள்" என்றார் ஐயோ! அவ்வித மொன்றுமில்லையே. அவள் நாடகக் கொட்டகையிலல்லவோ இருக்கிறாள் என்றேன். அதற்கு அவர் நாடகம் பார்க்கப்போன பெருங்கதைதான் அவ்விதம் முடிந்தது. நாடகம் பார்க்கச் சென்றாள். அங்கு ஒரு நாயகனைத் தேடிப் பிடித்தாள். அங்கு சென்று பார்த்தாலல்லவோ தெரியும். அவளும் அவனும் நாடகத்தை எங்கே கவனித்தார்கள். இருவரும் பேசுவதும் சிரிப்பதுமாகவன்றோ இருந்தது. இன்று வந்திருந்த ஜனங்களெல்லாம் இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்களே யன்றி நாடகத்தை யார் கவனித்தார். ஏனென்றால் உன் மகளுக்குக் கிடைத்த ஆள் அப்பேர்ப்பட்டவர். சாந்தகுணமும் பெருந்தன்மையும் வாய்ந்தவர். மாணிக்கவாசகம் பிள்ளையின் ஏக புத்திரர். இவளுடைய எண்ணம் ஈடேறுவதற்கு வேண்டிக் கொட்டகையில் நெருப்புப் பிடிக்கவும், இவள் மூர்ச்சையாகவும், இரக்கமனதுடைய அப்புண்ணியவான் இவளைத் தூக்கிக்கொண்டு தன் வீட்டிற்குச் செல்லவும் அங்கு இருவரும் சந்தோஷித்திருக்கவும் எனக்குத் துரோகம் நினைக்கவும் நான் இவ்வாறு இங்கு கத்தவும் ஆயின. கமலம்! காரியமென்னமோ நடந்துவிட்டது. இனி அதை நினைத்து வருந்துவதில் பிரயோசனமில்லை கடைசியாக உனக்குச் சொல்ல வேண்டிய தொன்றுண்டு. நல்ல உத்தமனை உன்மகள் கெடுத்துவிட்டாள். இதையறியாதார் இவ்வூரில் எவருமிலர். எனக்குத் துரோகஞ்செய்ததுபோல் அவருக்குஞ் செய்யாம லிருக்கும்படி உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் உன் மகளுக்குக் கொடுத்தவற்றில் ஒரு தம்படிகூட எனக்கு வேண்டியதில்லை. இனிமேல் உன் மகளுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இனி உன் மகள் இருக்குமிடம் நோக்கித் தலைவைத்துங் கூடப் படுக்கமாட்டேன் ஈசுவரசாக்ஷியாக இது சத்தியம் என்று சொல்லி எழுந்து போய்விட்டார். அம்புஜம்! இதுதானம்மா நடந்த சங்கதி என்று சொல்லவே, நின்றுகொண்டிருந்த அம்புஜம் மரம்போற் பூமியிற் சாய்ந்துவிட்டாள்

கமல:—"ஐயோ, மகளே!" என்று வாயின் மீது அடித்துக்கொண்டு தன் மகளை எடுத்து மார்புடன் அணைத்து வேண்டிய சிகிச்சைகள் செய்து மூர்ச்சை தெளிவித்தாள்.

அம்பு:—ஆ தெய்வமே! இனி நான் என்ன செய்வேன்! எவ்வாறு உய்வேன்! ஒருவிதமான பாபதோஷத்தையும் அறியேனே என் துரைக்கு என் மனமாற எத்தகைய துரோகமுஞ் செய்யாதிருக்க எனக்கு இந்த விதியேற்பட்டதே இதுகாறுமென்னைக் காப்பாற்றிச் சுகந்தந்தவரே என்னைக் கைநழுவ விட்டபிறகு இனி இவ்வுலகிலிருந்து என்ன சுகத்தை யனுபவிக்கப் போகிறேன். இனிமேலும் இவ்வுடலை வைத்துக் கொண்டு உயிருடன் வாழவேண்டுமா! யாருக்காக என் உயிரை வைத்துக்கொண்டிருக்க வேண்டும். இவ்வுலகில் இனி எனக்குச் சுகமேது; என்று சொல்லி, ஏதோ அப்பொழுதுதான் நினைத்துக் கொண்டவள்போல் எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு இரத்தினத்தைப் பார்த்து, "பிரபு! தம்முடைய இஷ்டம்போ லிதைத்தாம் சொல்லலாம். தங்கள் முன்னிலையில் என்னையும் மறந்து ஏதேதோ சொல்லிவிட்டேன். எனக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விபத்திற்குத் தாங்களும் ஒருவிதத்திற் காரணமாய் நிற்கின்றீர்களெனினும் தம்மீது பழியைப் போட்டால் என் மண்டைவெடித்துவிடும். எல்லாவற்றிற்கும் காரணம் நானேயாகும். என் விதிக்குப் பிறரை நொந்துகொள்வதா லுண்டாகும் பலன் என்ன? ஒன்றுமில்லை, எனவுரைத்து முகத்தை மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி அழலானாள்.

இவைகளை யெல்லாம் கவனித்துக்கொண்டு வந்த இரத்தினம் பின்வருமாறு எண்ணலானான். இது என்ன தருமசங்கடமாய் முடிந்ததே. நாம் ஒன்று நினைக்கத் தெய்வம்

கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர் குழா அத்துப் பேதை புகல்.

வேறொன்று நினைக்கிறதே. பிராணிகளுக்குத் தக்க சமயத்தில் உதவி செய்யவேண்டியது மாதர் மாந்தர் கடமையென்னும் தர்ம சாஸ்திரத்தைக் கைக்கொண்டொழுக இவ்வாறு ஏற்பட்டதே. இந்த விஷயத்தில் நான் செய்யவேண்டியது இன்னதென்பது எனக்குப் புலப்படுவதாயில்லை. நான் விகற்பமான எண்ணத்துடன் இப்பெண்ணுடன் பேசவாவது அவளைத் தொடவாவது இல்லையெனினும், பிறர் கெட்ட அபிப்பிராயங் கொள்ளும்படி நேரிட்டதே. இனி நான் என்ன சொல்லினும் ஒருவரும் நம்பமாட்டார்கள் போலுமிருக்கிறது. நான் இப்பெண்ணுடன் சகவாசஞ் செய்தேன் என்னும் பொய்யான வசைச்சொல் நிலைபெற்று உண்மையாகி விடும்போலுமிருக்கிறது. இது ஒரு புறம் நிற்க, இப்பெண்ணின் நிலைமையைக் கருதும்பொழுது எனக்குப் பெரிய பாவம் வந்து சம்பவிக்கும் போலிருக்கிறது. என்னால் அவள் தன் வாழ்க்கைத் துணைவனை இழக்க நேரிட்டது. சாதாரணமான தாசிகளைப்போ லென்றால் பாதகமில்லை. இவள் கொஞ்சங் கற்புடையவள்போற் காணப்படுகிறாள். இவள் இதை நினைத்து வருந்தி அழுது கண்ணீர் வடிப்பாளானால் அது என்னை யன்றோ பாதிக்கும். ஸ்திரீ பாபம் மிகப் பொல்லாததாயிற்றே. இதற்கென் செய்வது! ஒரு புறத்தில் வீண் வசைச்சொல்; மற்றொரு பக்கத்திற் பெண்பழி. இவ்விரண்டின் மத்தியிற் சிக்கிக் கொண்டிருக்கிறேன். முதலாவதை நீக்க வழியொன்றுங் காணோம். இரண்டாவதை நீக்கலாம். இவளை நான் அங்கீகரித்துக்கொள்வது சன்மார்க்கமன்றே. இப்பெண்பழியை நீக்குதற்குரிய நன்மார்க்க மொன்றையுங் காணேமே என்று இன்னும் பலவாறு எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது வேலைக்காரியான ஆயா அங்கு வந்து, "இது என்னம்மா அநியாயம். சூரியனுதித்த பிறகுங்கூட விளக்கை பெரித்துக் கொண்டிருக்கிறீர்கள். என்னமோ செய்யுங்கள். நான் ஏன் அதைச் சொல்லவேண்டும். யாரோ ஒருவர் வெளியில் நின்று கொண்டிருக்கிறார். இரத்தினம் பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்கிறார். அப்பெயருடையவர் இவ்வீட்டில் இல்லையென்று சொன்னேன். உள்ளே இருக்கிறார் என்பது தெரிந்துதான் நான் வந்திருக்கிறேன். என்னிடத்தில் ஏன்மறைக்கிறாய். கோபால பிள்ளை வந்திருப்பதாகச் சொல். போகிறாயா? அல்லது நானே செல்லட்டுமா? என்று அதட்டிக் கேட்டார். எனக்குங் கொஞ்சம் சந்தேகமுண்டாகி வந்தேன். என்னம்மா அம்புஜம், அவரை வரச்சொல்லவா'' என்று கேட்க, அம்புஜம் இரத்தினத்தைப் பார்த்தாள். "ஆகவே வசைச்சொல் பரவி விட்டதென்பது உண்மையாயிற்று. இவரும் தக்க சமயத்திலேயே வந்தார். அவர் இதற்கு என்ன வழி சொல்லுகிறாரென்று பார்ப்போம் என எண்ணி, "ஆயா! அவரை இங்கு அழைத்துக் கொண்டுவா'' என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு அம்புஜத்தைப் பார்த்து "பக்கத்தில் இன்னுமொரு அறையிருக்கிற மாதிரி தெரிகிறது. அதில் நீங்களிருவருஞ் சென்றிருங்கள். ஒரு விஷயத்தைக் குறித்து இங்குவரும் என் நண்பருடன் கலந்து பேச வேண்டியிருக்கிறது. பிறகு உன்னைக் கூப்பிடுகிறேன். அப்பொழுது வா'' என்று சொல்லிப் பெண்ணையும் தாயாரையு மனுப்பிவிட்டுத் தனியே சிந்தாகூலனாய் உட்கார்ந்திருந்தான்.

கொஞ்ச நேரத்திற்குள் கோபால பிள்ளையும் அங்குவந்து "குட்மார்னிங். (Good morning) பிரதர்'' என்று சொல்லி, அங்கிருந்த சோபாவிலமர்ந்துகொண்டு, "ஏது பிரதர்! நான் தங்களிடம் வந்து சேர்ந்த முகூர்த்தம் தங்களுக்கு ஒரு நல்ல பெண்ணையுந் தேடிவிட்டதுபோ லிருக்கிறதே'' என்று சொன்னான்.

இரத்:—நல்லபெண் என்பது தமக்கு எவ்விதந் தெரியும். தாம் முன்னமேயே இந்தப் பெண்ணையறிவீரா? என்று கேட்டான்.

கோபா:—நான் முன் இங்கிருந்தபொழுது இந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறேன். அப்பொழுது பத்தாண்டுச் சிறு பெண்ணாயிருந்தாலும், கண்டோர் மனதைக் கவரவல்ல வனப்பை வாய்க்கப் பெற்றிருந்தாள். அநேகர் இப்பெண்ணின்மீது கண் வைத்திருந்தார்கள். தாசி வம்சத்துப் பெண்ணே எனினும் சிறுவயது முதற்கொண்டே குலஸ்திரீபோல் நடித்து வருவாள். பார்ப்போரும் தாசிவீட்டுப்பெண்ணென்று சொல்லத் துணியார் அவ்விதமிருக்கப் புஷ்பவதியானவுடன் இராமனாதபுரத்திலிருக்கும் கருடாசலம் பிள்ளை என்பவர் இங்குவர இருவருக்கும் பரஸ்பர நேசமுண்டாக, அவரே சாந்தி முகூர்த்தம் முதலானது செய்வித்து வைத்துக் கொண்டாரென்று நான் சென்னையிலிருந்த பொழுது கேள்விப்பட்டேன். நேற்றிரவு நானும்

இவளைக் கொட்டகையிற் பார்த்தேனெனினும் அவளை இன்னாரென்று தெரிந்துகொள்ள என்னால் முடியவில்லை. தாசியென்றுந் தோன்றவில்லை. தாங்கள் பேசிக்கொண்டிருக்கவே ஒரு சமயம் தங்கள் பந்துவாயிருக்கலாமென்று எண்ணியிருந்தேன். இதெல்லா மிருக்கட்டும் பிரதர். அப்பெண்ணை எப்படி இசையும்படி செய்தீர்? முன்னமேயே தங்களுக்குத் தெரியுமா? அல்லது நேற்றிரவுதான் முதன்முதற் பார்த்தீரா? என்று கேட்டான்.

இரத்:—நான் இதற்கு முன் இப்பெண்ணைப் பார்த்ததில்லை. இப்பொழுதும் அவளை என் தங்கையாகவே பாவிக்கிறேனேயன்றி வேறுவிதமில்லை. என்று சொல்ல,

கோபா:—என்ன பிரதர்! என்னிடத்திலேயே இப்படிப் பொய் சொல்லுகிறீர். இப்பெண்ணிற்கும் கருடாசலம் பிள்ளைக்கும் விரோதம் எப்படியோ ஏற்பட்டதென்றும் உங்களிருவருக்கும் சிநேகமுண்டாகி விட்டதென்றும் ஊர் முழுவதும் ஒரே சொல்லாயிருக்கத் தாம் தங்கையென்று சொன்னால் சிரிப்பார்கள். நேற்றிரவு கொட்டகையில் நெருப்புப் பிடித்ததும், அதையணைப்பதற்கு உதவி செய்யலாமென்று உங்களெல்லோரையும் விட்டு விட்டு ஓடினேன். ஆனால் ஜனங்கள் என்னைத் தள்ளிக்கொண்டு வெளியில் கொண்டுவந்து விட்டனர். தங்களைக் கூட்டிப்போக உள்ளே வரலாமென்று பார்த்தேன். என்னால் முடியவில்லை. சற்று நேரத்திற்குள் நம் நண்பர்களும் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தனர். தாம் மாத்திரம் வரவில்லை. எல்லா ஜனங்களும் வந்துவிட்டனர். பிறகு எங்களுக்குத் தெரிந்தவர்களிற் சிலரைக் கேட்கத் தாம் தாசி அம்புஜத்துடன் வண்டியேறிச் செல்வதாகச் சொன்னார்கள். நாங்கள் கேட்டோரெவ்வொருவரும் இவ்விதமே கூறினர். அங்கிருந்தோரெல்லாரும் இதையே பேசினர் வீட்டிற்கு வந்து வேலையாளை விசாரிக்கத் தனக்கொன்றுந் தெரியாதென்று சொல்லிவிட்டான் சரி தாம் இங்குதான் இருப்பீர், விடியட்டும் பார்த்துக் கொள்ளுவோம் என்று மாணிக்கம்பிள்ளை வீட்டிற்குச் சென்றேன். மற்றவர்கள் அவரவரில்லஞ் சென்றனர். அதிகாலையிலெழுந்து வெளிக் கிளம்பி வந்தேன். வழியில் இதைப்பற்றிக் கேட்காதோர் பஞ்சம். வீட்டில் பார்த்தேன் இல்லை. இங்கு வந்தேன். விஷயமிவ்வாறிருக்கத் தாம் தங்கையென்றுரைப்பதின் கருத்தென்னவென்று வினவினன்.

இரத்:—நடந்த வரலாறுகளனைத்தையும் ஆதியோடந்தமாகக் கூறி, "பிரதர்! நான் இவ்வாறு இரு கொள்ளிவாய்ப்பட்ட எறும்புபோற் றவிக்கிறேன். இன்னது செய்வதென்று எனக்கு விளங்கவில்லை. தாம் இதற்கு ஒரு வழி சொல்ல வேண்டுமென்று கேட்டான்.

கோபா:—பிரதர்! இனித் தாம் மீனும்பிகையின் சந்நிதியில் நின்று சத்தியஞ் செய்தாலுங் கூடத் தாம் ஒரு பாவதோஷத்தையும் அறியாதவரென்பதை நம்பமாட்டார்கள். ஆகவே அவ்வழியிற் செய்யக் கூடியதொன்றுமில்லை. இவ்வழியிற் பார்ப்போமானால் தாம் இப்பெண்ணை அங்கீகாரஞ் செய்து கொள்வதே உத்தம மென்று நினைக்கிறேன். தங்கள் அந்தஸ்துக்குத் தகுதியான பெண்ணேயாவள். அதைப்பற்றி ஒருவரும் கேவலமாக எண்ணமாட்டார்களென்பது திண்ணம். தாம் இப்பெண்ணை விட்டு விட்டால் வீணுகப் பெண்பாவம் தங்களைப் பிடிக்குமென்று பயப்படுகிறேன். அவ்விதம் விடுவதில் தங்களுக்கு உண்டாகக் கூடிய நன்மையையுங் காணேம். மேலும் இக்காலத்தில் தாசி வீடு செல்லாதவன் எவன் இருக்கிறான். ஒருவருமில்லை. அதையொரு கௌரவமாகக் கருதுகிறார்களேயொழிய தாழ்மையாக எவரும் நினைப்பதில்லை. கடவுளுக்குப் பொருந்துமா என்கிறீர். தாசிகள் என்ற ஒரு தனிவகுப்பினர் உலகிலிருப்பதே கடவுள் சம்மதத்திற்குச் சாட்சியாகும். தாசி வீடு செல்வது பாபகாரிய மெனில் ஈசுவரன் அவர்களை ஏன் படைக்கவேண்டும்? ஆகவே அதைப்பற்றியும் தாம் கவலைகொள்ளவேண்டியதில்லை. எனக்குத் தெரிந்தவரைக்கும் தாம் அப்பெண்ணை அங்கீகரித்துக் கொள்வதே சிறந்ததென்று சொல்லுகிறேன். பின் தங்களிஷ்டம் என்று சொன்னான்.

இரத்:—எனக்கும் அவ்விதமே புலப்படுகிறது. இது சங்கதியை அப்பெண்ணிற்குத் தெரிவித்து வருகிறேன். தாங்கள் அதற்குள் மளிகைக்குச் செல்லுங்கள் என்று சொல்லிக் கோபால பிள்ளையை அனுப்பிவிட்டு அம்புஜத்தை யழைத்தான்.

அவளும் அங்குவர "என்னை உன் காதலனாக அங்கீகரித்துக் கொள்வதில் உனக்கு ஏதேனும் ஆக்ஷேபணையுண்டோ" என்று இரத்தினம் கேட்டான்.

அம்பு :—(சற்று நேரம் மௌனமாயிருந்து) பிரபு! அது விஷயத்தில் எனக்கு யாதொரு தடையுமின்றெனினும் ஒன்று சொல்ல விரும்பு கிறேன். அதாவது —தாம் இக்காரியத்தை முழு மனதுடன் செய்யவேண்டும்; எனக்காக வேண் டித் தாம் இந்த எண்ணங் கொள்வதாயிருந்தால் எனக்கு இஷ்டமில்லை யென்பதேயாம் என்று உரைத்தாள்.

இரத் :—என் மனப்பூர்வமாகத்தான் இந்தக் காரியஞ் செய்கிறேன் என்ருன்.

அம்பு :—அவ்விதமெனின் இன்று முதல் தாம் எனக்கு நாயகர் என்று கூறி நமஸ்கரித் தாள்.

கொஞ்சநேர மிருவருஞ் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்த பிறகு, இரத்தினம் அம்பு ஜத்திடம் விடைபெற்றுக் கொண்டு தன் மளி கையை நோக்கிச் சென்ருன். வழியில் தனக்கு அறிமுகமானோர் வந்தாலுங்கூடப் பார்க்காதவன் போல் தலைகுனிந்து நடந்தான். அன்று முதல் வியாபார சம்பந்தமான எல்லாவற்றையும் கோபால பிள்ளையிடம் ஒப்புவித்துவிட்டான். சிறிது நாட்கள் வரைக்கும் அம்புஜத்தின் வீட் டிற்குப் பகலிற் சென்ருல் இரவில் செல்லாமலும் இரவிற் சென்ருல் பகலிற் போகாமலுமிருந்தான். பிறகு அங்கு ஒருநாள், தன் வீட்டிலொரு நாளு மாகச் சிறிது நாட்கள் இருந்தான். கடைசியில் கல்வி கேள்விகளிற் சிறந்தவனும் நன்னடக்கை மேற்கொண்டவனும் பகவத்பக்தியி லீடுபட்டவ னும் சன்மார்க்கத்திலொழுகி நடப்பவனுமான இரத்தினம் துர்ச்சனரின் சேர்க்கைவாசனையின் பலனாக அம்புஜத்தின் அழகில் மையல்கொண்டு அவளுடைய பாதங்களே அடைக்கலமென்று அவளுடைய வீடடைந்தான்.

வாசகர்களே! கோபால பிள்ளை யாவனென் பதும் அவனுடைய நண்பர்கள் எத்தகையோ ரென்பதும் இரத்தினம் இந்நிலைமைக்கு வரக்கா ரணமாய் நின்றவன் எவன் என்பதும் உங்க ளுக்கே ஒருவாறு விளங்கியிருக்கு மெனினும், அவைகளைப் பற்றி இங்கு சற்று விரிவாக எழுது வதற்கு நம்மை மன்னிப்பீர்களென்று நம்புகி ரும். இரஞ்சிதத்தின் உண்மையான மன நிலை மையை யறியாமல் அவள் மீது காமவிகாரங் கொண்டு, இரத்தினத்தைத் தீயவழியிற் புகுத்தி விட்டால் அவள் தன்னை மணப்பதில் யாதொரு தடையுமிராதென்ற தப்பபிப்பிராயங் கொண்ட மதனகோபன் தன் நண்பர்களில் ஒருவனை கோபால பிள்ளையை ஏவிவிட்டான். அவனும் சாமர்த்தியமாக இரத்தினத்தைத் தன் வழிப் படுத்தினன். அவனுக்குத் துணையாக அவனு டைய சிநேகிதர்களுஞ் சேர்ந்தனர். நாடக சாலைக்குச் சென்று பின் மதனகோபன் தாசி அம்புஜத்தை யனுப்பினன். அவளும் சாதுர்ய மாக நடித்து இரத்தினத்தைத் தன் கைவசப் படுத்திக் கொண்டாள். இது இவ்வாறு நடந்தே றும் பொருட்டே மதனகோபனின் ஆட்கள் கொட்டகைக்கு நெருப்பும் வைத்தார்கள். தீயோர் கூட்டத்திற் கலந்து தீய வழியி லலைந்து தீக்கு ணமே மேற்கொண்டு தீக்கருமங்களே புரிந்து வரும் தீயோர் தாம் கைக்கொண்ட காரியம் நிறை வேறுவதில் நோக்க முடையோரா யிருப்பார்க ளேயன்றி அதனல் பிறருக்கு உண்டாகவல்ல தீமையைக் கருதார்கள். உலக இயல்பும் அதுவே என்க. மதனகோபன் தனக்கு ஒரு விதத்திலே னும் யாதொரு கெடுதலையும் கனவிலுங் கூட நினைத்திராத இரத்தினத்தைக் கெடுப்பதில் தன் முழு நோக்கத்தையும் செலுத்தினனே யன்றிக் கொட்டகையை நெருப்பிட்டுக் கொளுத்தினல் வீணுக உயிர்ச்சேதமும் ஜனங்களுக்குத் துன்ப மும் கஷ்டமும் ஏற்படுமே என்பதை அவன் ஒரு சிறிதும் கவனிக்கவில்லை.

அஜந்தா. கிராமம். ஹைதராபாத் ராஜ்யம், அவு ரங்காபாத் ஜில்லா பொகதான் தாலூகாவில் உள் ளது. ஸர்ஸாலார் ஜங் வம்சத்தாருக்குச் சொந்தமான ஜாகீர் கிராமம். இது மலையுச்சியில் ஒரு கணவாயில் உள்ளது. அங்கு கி. பி. 1727-ல் கட்டிய கோட்டை ஒன்றுண்டு. 4 மைல் வடமேற்கில் இன்ஹ்யாத்ரி மலையில் உள்ள பௌத்தக் குகைகளுக்குப் பேர் போனது. 250 அடி உயரமான கற்பாறைகளில் இக்குகைகள் வெட்டப்பட்டுள்ளன. இங்கு 24 விஹா ரங்களும் 5 சைத்யங்களும் உள்ளன. இவைகளில் வெகு அழகாகச் செதுக்கப்பட்ட உயரமான தூண் வரிசைகள் உள்ளன. குகையின் சுவர்களில் கௌதம புத்தருடைய சரித்திரம் முதலியவற்றைப் பற்றிய வர்ணந்தீட்டிய சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. சுமார் 2,200 வருஷங்களுக்கு முன்பு தொடங்கிய சித்திரங்கள் இதுகாறும் அழியாமல் இருப்பது அதி சயிக்கத்தக்கது. இந்தச் சித்திரங்களைப் பெயர்த் தெழுதிப் புஸ்தக ருபமாக ஜான் க்ரிப்பித்ஸ் (John Griffiths) என்பவர் வெளியிட்டிருக்கின்றனர்.

சிறுத்தொண்டர்

சிவ:—பர்வதகுமரீ! நீ கூறியதுபோல் அன்னதானம் மற்றைய தானங்களைவிட மகா சிரேஷ்டமானதுதான். ஆனல் அதிலும் கவனிக்க வேண்டியது ஒன்றிரண்டுண்டு. அன்னதானம் செய்வதில் நிதானமாயிருப்பதே நன்மையைக் கொடுக்கும்.ஏதோசெல்வமிருப்பதினலேயே வந்தவர்க்கெல்லாம் அன்னமிடுவதென வைத்துக்கொண்டால் சகல துன்பங்களுக்கும் அடிப் பீடமாயிருக்கும் சோம்பேறித்தன்மை பழுத்தெழும் என்பதை நீ சிந்திக்கவில்லை போலும். அதனல் உலகத்திற்கே பெருந்துன்பம் விளைகின்றது. ஈகையாவது என்ன? வறியார்க்கொன்றீவது. வறியார் என்பவர் யார்? கூன், குருடு, செவிடு முதலிய அங்க ஈனர், பிணியாளர், வயோதிகர், சிறு குழந்தைகள், பருவகாலக் கர்ப்பிணிகள், தாமாக வேலை செய்து ஜீவிக்க சக்தியற்றவர்கள், உலகப் பற்றை நீக்கி எல்லாப்பற்றையும் நம்மேற் செலுத்தி நிற்பவர் முதலியோர் வறியவர் எனப்படுவார். இவர்களுக்குக் கொடுப்பதே தருமமாகும். இதனல்தான் புண்ணியமுண்டு. மற்றையவர்களுக்கு அன்னமிடுவது விருந்தேயன்றி தானமாக மாட்டாது. பூர்ணங்கன் ஒருவன் நிர்விசாரமாய் நன்றாக அன்னதான சத்திரத்தில் வயிறு புடைக்கப் புசித்துவிட்டு ஒரு வேலையுமின்றி, நம் நினைவுமில்லாமல், ஊர்வம்புகளுக்கு உறவினனய்த் திரிவதால் அன்னதானஞ் செய்பவனுக்கு என்ன புண்ணியங் கிடைக்கும் என்பதை யோசித்துப்பார். இன்னும் ஒரு விசேஷம். அதுவும் அதிமுக்கியமாய் கவனிக்கவேண்டியதொன்று. பயன் கருதாது கடமை பற்றிச் செய்வதுதான் தர்மம். பிரதிதானம் கருதியேனும், புகழ் கருதியேனும், மோக்ஷங் கிடைக்குமென நினைத்தேனும் செய்வதால் உண்மையில் ஒரு லாபமும் இல்லை. வறியோர்கள் வந்தகாலத்தெல்லாம் தத்தம் கடமையைச் செய்யக் காலம் வந்ததே என ஒவ்வொருவரும் தம் மாற் கூடிய அளவில் உணவளிக்கவேண்டும்.

பார்:—சுவாமி! இந்தப் பீடிகை எதற்காகவோ? நான் தெரிந்து கொள்ள விரும்பிய ஒன்றைக் கூறுமலே விட்டீர்களே?

சிவ:—அதைச் சொல்லத்தான் இந்த விஷயத்தை ஆரம்பித்தது. பூலோகத்தில் நம்மீது சதா பக்தி பூண்டு தர்ம நெறியில் நிற்பான் ஒருவன் சிறுத்தொண்டன் என்னும் பெயரோடு கூடியிருக்கின்றான். அவன் இந்த அன்னதானத்தை மகா சிரத்தையோடு செய்துவருகிறன். சிவ சின்னந்தரித்த சிவனடியார் யாவரேயாயினும் அவன் அன்னதான சாலையில் அன்ன முண்ணலாம். அவர்களுக்கு ஆசார உபசரணையோடும் அறுசுவையோடும் அன்னம் படைப்பதுடன், ஆயிரம் பேருக்குக் குறையாமல் சாப்பிட்டாலன்றி, தானும் தன் பத்தினியும் அன்னம் புசிப்பதில்லையென ஒரு நிர்ணயத்தையுங் கொண்டிருக்கிறன். அவனது பக்தியின் திறத்தை நான் என்னென்று சொல்லுவேன்.

நந்தன் சரித்திரமானந்தம் மெட்டு. சங்கராபரணம்.

கண்ணிகள்

(1) தொண்டன் பக்தியின்வி—சேஷம்
சொல்வதுப்ர—யாசம்
அத்தியந்த——நேசம்
அழகு சிறுத்—தொண்டன்

(2) கண்டு களிப்பதல்லால் உண்டு மகிழ்ந்தவர்கள்
அண்ட முழுவதிலுங் கொண்டாடும் மேன்மைச்சிறு

(3) பக்தன் திரிகாரண சுத்தன்- புண்ய ஜீவ
முக்தன் எனக்ருபைவ சத்தன் இனியசிறுத்

(4) அன்னதானம் செய்வதென்ன நிலையிருப்ப
தென்ன பரிசோதிப்பேன் முன்னே அடியே சிறுத்

இப்பேர்ப்பட்ட அரிய பக்தனுக்கு நாம் திருவருள் புரியவேண்டாமோ?

பார்:—சுவாமி! அவசியம் கிருபை செய்ய வேண்டியதுதான்.

சிவ:—ஆனல் ஒன்றல்லவா! இவனும் இவன் பத்தினியும் மைந்தனுமாகச் செய்துவரும் அன்னதானம் அடியாரிடத்துள்ள பக்தியாலேயே எனினும், நல்ல உள்ளமில்லாது, வேடம் புனைந்துவரும் கள்ளர்களும் இப்பொழுது இந்த சிறுத்தொண்டனது அன்னதான மடத்தில் மிகுதியாயிருக்கின்றார்கள். ஆகையால் அதன் பலனையும் அவன் அனுபவிக்க வேண்டுமன்றே! அதற்காக அவன் பக்தியைச் சோதிப்பதாக அவனிடம் சென்று பின்பு அவனுக்கு முக்தியைத் தருவதே ஒழுங்காகும்.

பார்:—சுவாமி! இந்தக் காரியத்தை முடிக்கத் தாங்களும் வேஷம் புனையவேண்டுமே?

சிவ:— ஆஹா! அதற்குத் தகுந்த வேடம் பைரவ வேடமே ஆகும். சரி, இன்றைக்கே இக்காரியத்தை முடித்துவிடுவோம். அதற்காக முதலில் செய்யவேண்டியது இன்று முழுவதும் சிவனடியான் ஒருவனேனும் சிறுத்தொண்டன் மடத்திற்கு வாராமலிருப்பதோடு அவன் கண்ணிற்குப் படாமலும் செய்யவேண்டும். நான் சென்று வருகிறேன்.

பார்:—சுவாமி! சென்றுவாருங்கள்.

அங்கம் II—காட்சி—2

இடம்: சிவாலயம்.

[இராகம் ஆரபி—ரூபக தாளம்]

சிறுத்தொண்டர்

(1) "மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான்
மகளொடும் பாடி
போதோடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்
பின்பு புகுவேன்
யாதுஞ்சுவடு படாமல்ஐயாறடைபு
கின்றபோது
காதல் மடப்பிடியோடுங் களிறு
வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்.

(2) ஏடு மதிக் கண்ணியானை யேந்திழை
யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையும் கைதொழு
தாட வருவேன்
ஆடலமர்ந்துறைகின்ற ஐயா
றடைகின்ற போது
பேடை மயிலோடுங் கூடிப் பிணைந்து
வருவனகண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்".

அடியார்க் கெளியனெனுந் திருநாமம் படைத்த மெய்யனே! உனது அடியாருக்கு அடிமையாகி அவர்களுடைய உள்ளங் குளிர உபசரித்து உணவளித்தலையே பேரானந்தத்திற்குப் பெரும்பீடமாகக் கருதி இதுகாறுங் கவலையில்லாமல் இருந்த யான் இன்று கவலைப்படுமாறு வைத்தனையே!

[சுதினமே சுதினமு-மெட்டு]
[இராகம் லதாங்கி-சாப்பு தாளம்]

(பல்லவி)

பொன்னம் பலவன் கிருபையோ—
போதாக் காலமோ அறியேன் ஏது
நான் செய்வேன்—பொ—

(அனுபல்லவி)

என்ன ஆச்சர்ய மிது—எவரும்
வரக்காணேனே
எங்கு சென்று தேடியும் எதிர்
ஒருவருங் காணேன்—பொ

(சரணம்)

தினமுமாயிரமாக கனமுடனமு துண்டு
சிவனுர் விரதமதைச் சுபமாய்
முடித்ததுண்டு—இத்
தினமோ சிவனடியார்—தெரி
சனமே யில்லையே
தேடித்தேடிமனதும் தேகமுந்
தளர்ந்ததே—பொ

என்ன ஆச்சர்ய மிது! இந்நேரத்திற்குள் ஈசனடியார் இருநூற்றுக்கு மேல் போஜனம செய்து போயிருப்பார்களே! இன்றைக் கென்ன ஒருவரையேனும் பார்ப்பதற்கும் கிடைக்கவில்லையே! ஈசா! பக்தருள்ளத்திற் பால்போலும் பண்பருளும் பரமதீன தயாளுவே! இதுவும் நின் திருவிளையாடலோ! கள்ளமில்லா உள்ளத்தைக் கொண்ட சிவனடியார்களுக்கென்ன அபசாரத்தைச் செய்தேனே?

(விருத்தம்)

"காயாமுன் மரமீது பூ பிஞ்சறுத்தேனே
கன்னியர்கள் பழி கொண்டேனே
கடனென்று பொருள்பறித் தேவயறெரித்தெனே
கிளை வழியில் முள்ளிட்டேனே
தாயா ருடன்பிறவிக் தென்னவினை செய்தெனே
தந்தபொருளில்லை யென்றேனே
தானென்று கர்வித்துக் கொலைகளவு செய்தெனே
தபசிகளை யேசி னேனே
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள்பறித்தெனே
வாணரைப் பழித்திட்டேனே
வடவுபோ லேபிறரை சேர்க்காதடித்தெனே
வந்த பின் என் செய்தேனே
ஈயாதலோபி யென் றேபெயரெடுத்தெனே
எல்லாம் பொறுத்தருளு வாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை யீன்ற
தில்லைவாழ் நடராஜனே."

என் விரதத்திற்கும் பங்கம் நேரிடுமோ? எங்கெங்கோ சுற்றினேன், தேடினேன், இந்தப் பாவியின் கண்ணுக்குப் படக்கூடாதென மாயமாய் மறைந்திருக்கிறார்களோ! இன்னும் நான் எங்கென்று தேடுவேன்? ஐயோ தன்னந் தனியனாய் திக்கில்லாமல் நான் திகைத்து நிற்பது உனது பெருமைக்கு அழகாயிருக்கிறதா?

* (விருத்தம்)

"வாழையடி வாழையென
வந்த திருக் கூட்ட
மரபினில் யான் ஒருவ னன்றோ
வகையறி யேனிந்த
ஏழைபடும் பாடனக்குத்
திருவுளச் சம்மதமோ
இதுதகுமோ இது முறையோ
இது தருமந்தானே

* திருவருட்பா.

மாழை மணிப் பொது நடஞ் செய்
வள்ளால் யானுனக்கு
மகனலனே நீயெனக்கு
வாய்த்ததந்தை யலையோ
கோழையுல குயிர்த்துயரம்
இனி பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள் நின் னருள் ஒளியைக்
கொடுத்தருளிப் பொழுதே "

தஞ்ச மென்றவர்களுக்கு அஞ்சல் என்றருளும் செஞ்சுடர்த் தெய்வமே! ஆருயிர்க்கஞ்சி அலைந் தழுத அமரர்களுக்காக ஆறாத ஆலகாலத்தை அருந்தி அவர்களை அரவணைத் தாண்ட அருளுருவே! அடியேனை ஆதரித்தலும் ஓர் மலையோ—ஆலயதரி சனத்திற்கேனும் அடியவர்கள் வருவார்களே என்று வந்தும் இங்கும் ஒருவரையுங் காணவில்லையே—இன் னும் ஒருமுறை சுற்றிப் பார்த்துவருவேன்.

(சுருட்டி—சாப்பு தாளம்)

மாற்றறியாத செழும் பசும் பொன்னே !
மாணிக்கமே சுடர் வண்ணக் கொழுந்தே !

[போதல்]

அங்கம் II காட்சி 3

இடம்:—சிறுத்தொண்டர் வீடு.

[திருவெண்காட்டு நங்கை பாடிக்கொண்டு வருதல்]

[இராகம் பரசு—ஆதிதாளம்.]

(பல்லவி.)

இன்னும் வரக் காண்கிலனே—
ஈசனடியவரைத் தேடியே போனவரை—இன்

(சரணங்கள்.)

1. பொன்னம்பல வாணரடி—போற்றும் அடியவர்கள்
இன்னுமகப்படாமல்—இருக்கிறாரோ தெரியேன்
இனியேது—செய்யும்
வினையாது—ஒன்றும்
தெரியாது—மயங்குகிறாரோதெரியேன்—இன்

2. ஈசன் சகாயமின்றி—யேது நமக்கிங்கில்லை
நேசவிச்வாசமொடு—நினைத்ததும் பொய்யில்லை
நினையாரோ—துணை
புரியாரோ—நாதன்
வருவாரோ—சிவனடியார்கள் தம்மோடு—இன்

போய் எந்நேரமாயிற்று, இன்னும் வரவில்லையே. இன்றைக் கென்ன என்று மில்லாதபடி சம்பவித் திருக்கின்றதே. விடியுமுன்னமே அடியவர் முகத் தில் விழிக்கும் வழக்க மாச்சுதே. இன்று இதுவரை யிலும் இங்கு ஒருவரும் வாராமல், அவர்களை நா டிப் போன நாதரும் திரும்பாமல் இருப்பதென் றால் இது ஏதோ சூதாகத்தான் இருக்க வேண்டும். கருணை வள்ளலாகிய கண்ணுதலார் நம்மைச் சோ திக்கின்றாரோ! ஐயோ, கேவலம் அற்ப தன்மை யாகிய நம்மைத்தானே அவர் சோதிக்க வேண் டும்-மறதி-கோபம்-ஆசை—லோபம் முதலிய தூர்க் குணங்களை இயல்பிலே படைத்த மாந்தர்கள் நன் னெறி தவறுதலும் ஓர் அதிசயமோ ! இல்லை, இன்று என்னமோ ஒரு விசேஷம் நடக்கப் போகின்றது. இல்லையானல், ஆயிரக் கணக்காய் அன்ன மருந்திப் போவதிருக்க, இன்றைக்கு மாத்திரம் திடீரென ஒரு வரேனும் கண்ணிற்குப் படாமல் மறைந்திருக்க வுங் கூடுமோ ? இது அந்த முழுமுதற் றனிப்பெருங் கடவுளுடைய சோதனையே யல்லாமல் வேறில்லை—

[சிவபெருமான் பைரவர் வேடம் பூண்டு வருதல்]

சிவ:—சிறுத்தொண்டன் சிவனடியாரைத் தேடப் போயிருக்கின்றான். அவன் கண்ணிற்கு ஒருவரே னுந் தோன்றாமலிருக்கச் செய்து விட்டே இவ் வேடத்தைப் புனைந்து நான் இங்கு வந்தது. அவன் இங்கு வருவதற்குள்ளாக கற்புக்கணிகலமாகிய இந்த விற்புருவ நங்கையிடம் பிக்ஷை கேட்போம்.

[காஹரப்ரியா—ஆதி தாளம்]

[பட்டிவிடுவாரது மெட்டு]

[பல்லவி]

அன்னமிடுவாருண்டோ—அரும் பசிக்கு—அன்

[அநுபல்லவி]

பன்னெடு நாளாய் பார்த்தறியே னன்னம்
பன்னக பூஷணன் பக்ஷம் உண்டாகுஞ் சொன்னேன்

[சரணம்]

பாவமும் புண்யமு—மேயிரண்டுண்டு
பாருலகில் நமக்கு—வேறில்லை யென்று
தேவதாபக்தியே—சிறந்த துணையாக் கொண்டு
தேடுவீர் புண்ணியம்—
செய்தபாவத்தை விண்டு—அன்

பிக்ஷாந்தேஹி ! நெடுநாளாக அன்னமின்றி பசி யால் மெலிந்து வந்தேன். அன்புகொண்டு அமுது படைப்பார் எவரேனு முண்டோ? ஈசன் திருவருள் மிகவும் உண்டாகும். அம்மணி! கொஞ்சம் அன்ன மிடவேண்டும்.

திரு:—ஓ! யாரோ ஒருவர் பிக்ஷைக்கு வந்திருக்கிறார். மெத்த பெரியவராய்த் தோனுது. இதுவரையி லும் இவர்போலும் திவ்ய தேஜஸைப் படைத்த வர் எவரும் இங்கு வந்ததில்லை. உடனே சென்று உபசரிப்போம்.

(காஹரப்ரியா—ஆதிதாளம்)

(சக்கனி ராஜ மெட்டு)

பல்லவி

வாருங்கள் ஸ்வாமி—வரிசையுடன் மனைக்கு
வணங்கினேன் பொற்பாதம்—மாதவரே இன்று-வா
சிவ—தீர்க்க சுமங்கிலி பவ! மங்களானி பவந்து!

[அநுபல்லவி].

வாருங்கள் பசி—யாறுங்கள் சாமி
மனதுகுளிரும்படி அமுதுபடைப்பேனின்று—வா

[சரணம்]

திங்கள் நதி சூடிய—சங்கரனடியவர்
திவ்ய பதாம்புஜமே—உய்யும் வழி நிஜமே
எங்கள் தவம் பலிக்க—சம்ப்ரம முடன்வந்தீர்
எழுந்தருளும் ஸ்வாமி—ஏழை மனங்குளிர-வா

ஸ்வாமி! வாருங்கள். தங்கள் பசியாறும் வண்ணம் அறுசுவையோடும் அன்னம் பகிர்கின்றோம்.

வை:—மிக்க சந்தோஷம். அம்மா நான் அமுதுண்டு அநேக நாட்களாயின. தவஞ் செய்துகொண்டிருப்பவன். பசி மிகவும் கடுமையாகவுள்ளது.

திரு:—சுவாமி, அன்னம் தயாராயிருக்கின்றது.

வை:—இருக்கட்டும், ஹே மாதா! நீ மாத்திரம் இங்கு வந்து என்னை "வாரும்" என்று உபசரித்தனையே. இவ்வீட்டிற்கு எஜமான் இல்லையோ?

திரு:—ஸ்வாமி! எனது பர்த்தா சிவனடியார்களைத் தேடிப் போயிருக்கின்றனர். அவர் போய் நெடுநேரமாயிற்று, சீக்கிரம் வந்து விடுவார். அவர் இல்லை யென்றாலும் நான் அவரிருப்பதுபோலவே தங்களுக்கொரு குறைவின்றித் தக்க விதமாய் பக்குவத்தோடு மிக்க நல்ல உணவுகளைத் தர இங்கு காத்துக்கொண்டிருக்கிறேன். தாங்கள் பசியோடிருக்கிறீர்கள் தங்கள் கருத்துப்படி நடக்கச் சித்தமாகக் காத்திருக்கிறேன்.

வை:—சிவ சிவ! என்ன காலம் இது-அம்மா! நான் ஆளனில்லா வீட்டில் அன்னம் உண்பதில்லை-அப்படி உண்பது மகா பாவம். தெரியாமல் இங்கு வந்துவிட்டேன். போய்வருகிறேன்.

திரு:—சுவாமி! தங்கள் திருவுள்ளத்தில் அப்படி நினைக்க வேண்டாம். தங்களுக் கொரு குறைவுமின்றி அமுது படைப்பது எனது கடமை. தவறு வாராமற் காத்துக்கொள்வேன்.

வை:—

புருஷனில்லாமனைப் போஜன முண்பது
பாபம்—வருஞ்—சாபம்—இனி
அரை நிமிஷமேனு இங்கிருக் கேனிதை
அறிவாய்—அதி—விரைவாய்

திரு:—

பசியென்று வந்தவரைப் பசியோடனுப்புவது
பாபம்—வருஞ்—சாபம்—நான்
சுசியாயுங்களுக்கிங்கு—பசிதீரத் தருவேனுன்
சொகுசாய்—உண்ணும்—ருசியாய்

வை:—ஆளனில்லா வீட்டில் அன்னந்தான் உண்பது
தீது—த—காது, நாளைக்
காலப்பாச மெந்தன்—மேலே சுற்றிக் கொள்ளும்
காணுய்—பழி—பூணுய்.

திரு:—சீலத்தவசிகளைத் திருப்பி யனுப்புவது
தீது—த—காது, நாளைக்
காலப் பாச மெங்கள் மேலுஞ் சுற்றிக் கொள்ளும்காணும்—க்ருபை—பூணும்

வை:—

கோடி கோடியாய்ப் பொருள் குவித்துக்குபேரனைப்
போலுஞ்—செய்—தாலும், நான்
க்ரீடாதிபதி—யாவேனென்றாலும்
கேளேன்—இங்கு—தாழேன்

திரு:—

கொம்பனையாள் மனங் குளிரும்படியே யிங்குத்
தங்கும்—அருள்—பொங்கும், நான்
நம்பும் நாயகரும்—அன்புடன் வந்திங்கே
நாடி—வருந்—தேடி

பை:—

கோவில் மதிலோரம்—குவிந்த ஆத்தியடியில்
இருப்பேன்—கொஞ்சம், பொறுப்பேன், இங்கு
பாவையே உந்தன்—ஆளன்வந்தது மங்கு
பரிவாய்—அனுப்—பிடுவாய்

அம்மா! நான் ஆளனில்லா வீட்டில். அடியெடுத்து வைப்பதுமில்லை. பின்பு அன்ன முண்ணுவேனோ? இங்கு தங்குவது எனக்குப் பிடிக்காது. இதைக்கேள். இந்த நகரிலிரா நின்ற கணபதீச்சுரம் என்னும் திருவாலயத்தின் கண்ணுள்ள ஆத்தி விருக்ஷத்தடியில் கொஞ்சநேரம் இருப்பேன்-உனது நாயகன் சீக்கிரமாக இங்கு திரும்பி வந்தால் அங்கு உடனே வரும்படியாகச் சொல்லுவாயோ?

திரு:—ஸ்வாமி! தங்கள் திருவுள்ளப்படியே சொல்வேன்.

பை:—போய் வருகிறேன்

திரு:—ஸ்வாமி நமஸ்காரம்

பை:—தீர்க்க சுமங்கலி பவ! மங்களானிபவந்து [போதல்

[சிறுத்தொண்டன் வருதல்]

சிறு:—

படமுடியா தினித்துயரம் படமுடியாதரசே
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் [பொழுதென்
உடலுயிராதிய. வெல்லாம் நீ எடுத்துக் கொண்டுன்
உடலுயிராதிய வெல்லாம் உவந்ததனக்கே யளிப் [பாய்
வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாய் என் கண்ணுண்
மணியே என் குருமணியே மாணிக்கமணியே
நடனசிகா மணியே யென்னவ மணியே ஞான
நன்மணியே பொன் மணியே நடராஜ மணியே

ஹா தீனதயாபரா கருணைவாரிதியே! இன்று தங்கள் திருவுள மெப்படியோ?

அருமறை சோரு மறிவிலான் செய்யும் பெருமிறை தானே தனக்கு.

JL
3M2(1) N08V6
N26, 18+4
28376.

அடியார் யாரேனும் வந்தனரோ என்று வீட்டில் விசாரிப்போம்.

[சிறுத்தொண்டன் மனைவியிடம் செல்லல்]

திரு:—ப்ராணபதி! இந்நேர மென்ன? தாங்கள் வெளிச் சென்றிருந்த சமயம் அடியார் ஒருவர் வந்திருந்தனர்.

சிறு:—அப்படியா! மிக்க சந்தோஷம். கண்மணி! அவருக்குச் சகல மரியாதையோடும் அவர் மனமாற அன்னமிட்டாயோ?

திரு:—நாதா! அவர் மிக்க பசியோடுதான் வந்தார். வந்ததும் நான் சென்று வணங்கி அன்னமுண்ண வேண்டு மென்று மிகவும் வேண்டினேன். அவர் ஆகட்டும் என்று இவ்வீட்டிற்கு எஜமான் இல்லையோ வென விசாரித்தார். நான் தாங்கள் வெளிச் சென்றிருந்த விபரத்தைச்சொன்னேன். புருஷனில்லாத வீட்டிற் போஜன முண்ணேன் என்று மறுத்துவிட்டார்.

சிறு:—நான் உடனே வந்து விடுவேன் என்று சொல்லி சமாதானப்படுத்தி யிருக்கக் கூடாதா?

திரு:—நான் சொல்லாமலா இருந்தேன். எவ்வளவோ சொன்னேன். ஒரு வார்த்தை யேனும் அவர் தந் திருச்செவியி லேறவில்லை.

சிறு:—ஆனல் இன்னும் அமுதுண்ணமலா எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்?

திரு:—இல்லை. அவர், புருஷனில்லாவீட்டில்புகுவதே பாபம் என்று அன்ன சத்திரத்திலும் இருக்கேன் எனப் போய்விட்டார். நம்மூர் கணபதீச்சுர திருவாலயத்துக் கருகிலுள்ள ஆத்தி மரத்தடியில் "சற்றுநேரம் தங்கியிருப்பேன். உன் நாதன் வந்ததும் அங்கு அனுப்பு" எனக் கட்டளையிட்டுச்சென்றார்.

சிறு—இதோ சென்று விரைவி லழைத்து வருகின்றேன், எங்கள் வரவை எதிர்பார்த்துத் தயாராயிரு கண்மணி. ஒரு விஷயம். இங்கு வந்தவர் சாந்தமாய்ப் பேசிப்போனரா அல்லது கோபித்துச் சென்றாரா?

திரு:—சுவாமி! அவரைப் பார்த்தால் மகா தபசிபோலும், இவ்வுலகில் நான் இதுவரையிலுங் கண்டறியாத ஞான வொளியால் பிரகாசிப்பவர்போலும் தோன்றுகிறார். கொஞ்சம் கோபாக்கிரதர் போலத்தான் தெரிகிறது. ஸ்திரீயாகிய என்னிடத்தில் மனத்தை யடக்கும் வண்ணம் அவ்வாறு அவர் நடந்துகொண்டிருக்கலாம், எதற்கும் தாங்கள் சீக்கிரம்போய் அவரை யழைத்துக்கொண்டுவரப் பிரார்த்திக்கின்றேன்.

சிறு:—ஒரு விநாடியில் வந்துவிட்டேன். (போதல்)

அங்கம் II காட்சி 4

இடம்:—கணபதீச்சுரத் திருவாலயத் தருகிலுள்ள ஆத்திமரம்.

பைரவர்:—வாஸ்தவத்தில் இந்த சிறுத்தொண்டனுடைய உள்ளம் எமது அடியாரிடத்தில் விசேஷமான பக்தியைக் கொண்டிருக்கிறது. சிவனடியாரை அவன் தேடாத இடமில்லை. காலுஞ் சலித்தது. கண்ணுஞ் சலித்தது. அவன் மனம் மாத்திரம் இன்னுஞ் சலிக்கவில்லை. இப்பொழுதும் அவன் என்னை அழைத்துப் போக ஓடோடியும் வருகின்றான். நாம் நிஷ்டையி லிருப்பதுபோல் நடித்து அவன் வாய்மொழியைக் கேட்போம்.

[சிறுத்தொண்டன் வருதல்]

சிறு:—இதுதான கணபதீச்சுரத் திருவாலயம். இங்குதானே ஆத்திமரமிருப்பது? ஆம். சென்று பார்ப்போம் (ஆத்தி மரத்தருகிற் செல்லுதல்) ஹா இதோ இவ்விருக்ஷத்தினடியில் யாரோ ஒருவர் வீற்றிருக்கின்றார் (நன்றாக உற்றுப்பார்த்தல்) மகாயோகீசுவரர்போல் இருக்கின்றார். அரியதோர் நிஷ்டையிலாழ்ந்து இவ்வுலகையே மறந்து சிவாநந்த போகத்தை அனுபவிக்கின்றார். இவரைக் கண்டது நான்

தொலினே ஜேசின. பூஜாபலமோ—மெட்டு]

[இராகம் சுத்தபங்காளா—தாளம், ஆதி]

பல்லவி

தொலைநாட் செய்த என் பூஜா பலமோ
தொழுதிடவே வந்தார் தெய்வமாய்—தொலை

அனுபல்லவி

பலவித முனிவர் மகிதலத் திருப்பினும்
பரமனிவர் போல் பார்த்தறியேனே—தொ

சரணம்

அரியோ—அயனோ ஆதி சிவனோ
சுரலோ கேந்த்ரனோ சுடர்கதிரவனோ
சரியா ரிவர்க்கிணை ஜகமதிலில்லை
பெரியவர் கருணைப் பெருக்குக் கில்லை யெல்லை —தொலை.

இம்மஹானுபாவர் யாரோ? இந்த லோகந்தானோ அல்லது விண்ணுலகில் வாழும் பொன்னவரோ? இவரைப் பார்த்தால் மானிடரில் ஒருவராக மதிக்க மனம் இடங் கொடுக்கவில்லையே? ஹா! என்ன தேஜஸ்! என்ன சௌந்தர்யம், இப்பேர் பட்ட முகாரவிந்த சுகோதயத்தை நான் கண்டதே யில்லை. மும்மூர்த்திகளில் ஒருவரோ அல்லது தேவேந்திரன் தான் பூவேந்தர்களுக்குப் பாரேந்தும் புதுமுறையை தருமுறையாய் இக்கோலத்தோடு வந்துள்ளாரோ! அப்பா! இப்பொழுதே என்மேலிருந்து எதோ தாங்காச் சுமையொன்று நீங்கி யொழிந்ததாக ஒருவித சிரமபரிகாரத்தை உணர்கின்றேன்.

வேடிக்கை துணுக்குகள்

WIT & HUMOUR

(1) வகுப்பில் தமிழ் பூகோள வாத்தியார் ஒருவர் பிரிட்டானியாத் தீவுகளைப் பற்றிச் சொல்லி முடித்துவிட்டார். சீனு என்பவன் கவனிப்பதேயில்லை. உபாத்தியாயருக்கு அவன் பேரில் கோபம் வந்துவிட்டது. மிகவும் பர பரப்பாக அவனைக் கீழ்வருமாறு வினவினர்.

உபாத்தியாயர்:—'அடே சீனு' நான் சொன்னதைக் கவனித்தாயா ?'

சீனு:—'கவனித்தேன், ஸார்.'

உபாத்தியாயர்:—'சரி! லங்காஷைர் எங்கிருக்கிறது ?'

சீனு:—'சமுத்திரத்திற்கு அப்புறம்'

உபாத்தியாயர்:—'எதற்கருகாமையில் இருக்கிறது சொல்'

சீனு:—'லங்கைக்குப் பக்கத்தில் லங்காஷைர் இருக்கிறது, ஸார்' என்றான்.

* * *

(2) கல்வியில் உயர்ந்த பட்டம் பெற்ற ஓர் மனையாள் ஓர் ஆங்கிலேயக் காவ்யம் படித்து 'ஈஸிசேரில்' உட்கார்ந்திருந்தாள். அவள் வீட்டில் சமையல் பண்ணும் சிறுமி ஒருத்தி ஓடி வந்து, 'அம்மா ! என்ன செய்கிறது ? குழந்தையைச் சுற்றி நெருப்புப் பிடித்துக்கொண்டது ஐயோ !' எனத் துடித்தாள்.

அம் மாது, "சரி ! சேஷி ! உடனே டெலிபோனில் போலீஸ் ஸ்டேஷனுக்கு "பைர்! பைர்!" என்று கத்து. புஸ்தக பீரோவிலிருந்து 'அபாய விலக்கும், அதில் உதவியும்' என்ற புஸ்தகத்தை எடுத்துவா" என்று சொல்லிமுடித்தாள்.

'மாதரின் படிப்பின் மிகுதி நன்று' என மனம் வெருண்டாள் மட்டி சேஷி.

* * *

(3) பாட்டுக்கச்சேரியில் இருவர் ஒரிடத்தில் உட்கார்ந்திருந்தனர். அதில் ஒருவன் இன்னொருவனைப் பார்த்து, 'ஐயா! வித்துவான் என்ன வாசிக்கிறார் ?' என்றான். மற்றொருவன், 'இது தெரியவில்லையா? இந்த மூலையாப் பாரும். பெரிய வீணை வாசிக்கிறார். இது தெரியாமற் போனால் கண்ணுக்குச் சிகிச்சையே இல்லை' என முடித்தான்.

இருவரும் சங்கீதத்தில் ஞானிகளென்றே நமக்குத் தோன்றுகிறது.

(4) சிவராமய்யர் நல்ல உபாத்தியாயர். பாச்சுவும் சிறந்த சிஷ்யன். ஒரு நாள் இன்ஸ்பெக்டர் வந்தார். சிவராமய்யர் 'பாச்சு ! நம் துரையவாளுக்கு' நம் தேசத்தின் இள அரசைக் காண்பி என்றார்.

பாச்சு 'இதோ வந்துவிட்டேன் ஸார்' என்று எங்கோ ஓடி வேர்க்கத் திரும்பி வந்து, 'ஸார் இதோ இள அரசு' என்று ஓர் அரசங் கன்றைக் காட்டினன் இன்ஸ்பெக்டர் யாரை மெச்சுவதெனத் தெரியாது விஸ்மயித்தார்.

* * *

(5) 'ஒரு கப் உப்புமா ஒரு அணாத்தான் என்றான் ஹோட்டல்காரன்.

'மதி' என்றான் மலையாளி.

சாமி ஐயனுக்கு சாப்பாட்டில் பிரியம் 'இந்த மலையாளிக்கு எவ்வளவு தைரியம். நம்மையே மதிக்கச் சொல்கிறானே, என்று ஒரு கப் உப்புமா ஆர்டர் பண்ணினர். தட்டில் கொணர்ந்து வைத்தான். சாமி ஐயர் ஒரு கவளம் போட்டார் 'கடக்' என்றது. எடுத்தார் ஓர் சிங்களத்து அரைக்கால் ரூபாயை. அழைத்தார் ஹோட்டல் காரனை 'ஐயா ! பேஷ் ! உப்புமாவில் அரைக்கால் ரூபாயை முந்திரிப்பருப்புக்கு பதிலாய்ப் போட்டீரோ' என்று கோபமாகச் சொன்னான்.

ஹோட்டல்காரன் 'கொடும்' என வாங்கி 'எங்கே எங்கே யெல்லாமோ தேடினேன், நல்ல வேலை எடுத்துக் கொடுத்தீரே' என்று சும்மாயிருந்தான்.

சாமி, மலையாளியைப் பார்த்து, 'நீ சமத்தன்; ஒரு கப் உப்புமா மதித்தல் மூன்றணா இருக்கிறது' என்று சொல்லிச் சென்றான்.

* * *

(6) ஒருவன் மளிகையில் இரண்டு வீசை சர்க்கரை வாங்கினன். அதில் மணல் கலந்திருந்தது அடுத்த நாள் அவன் எல்லா மளிகைக் கடைகளுக்கும் ஒரு விளம்பரம் எழுதி யனுப்பினன்! விளம்பரம்:—ஐயா! ஒரு கடையில் வாங்கின சர்க்கரையில் வீசைக்கு, பத்து பலம் மணல் இருக்கிறது. எனக்கு விலையில்லாமல் இரண்டு வீசை சர்க்கரை அனுப்பினல் போலீசாரிடம் சொல்லவில்லை' என்பதே.

அன்று சாயந்திரமே அவனுக்கு ஒவ்வொரு கடையிலிருந்தும் இரண்டு வீசை இனமாக வந்து சேர்ந்தது. இதுவே வர்த்தகர்களின் உண்மை.

காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான் கண்டானாந்தான் கண்ட வாறு.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

நரஸிம்மாவதாரம்

NARASIMHAVATAR

விஷ்ணுவின் துவாரபாலகர்களான ஜய விஜயர்கள், ஸனகாதி யோகிகளால் சபிக்கப்பட்டு, ஹிரண்யகசிபு, ஹிரண்யாக்ஷன் எனும் அஸுரர்களாய்ப் பிறந்து, தங்கள் பல பராக்கிரமத்தால் தேவாதிகளை வருத்திவந்தன ரென்றும், தம்பியான ஹிரண்யாக்ஷன் வராகமூர்த்தியான ஸ்ரீ ஹரியால் கொல்லப்பட்டான் என்றும் முன் சஞ்சிகையில் கூறப்பட்டது.

நரசிம்மாவதாரம்

தனது தம்பியானவன் மகாவிஷ்ணுவால் நாசமடைந்தது கேட்டு, ஹிரண்யகசிபு துக்கசாகரத்தில் ஆழ்ந்தான்; கடுஞ்சினங் கொண்டான்; ஹரியினிடம் தீராப்பகை பாராட்டலுற்ருன். உடனே சம்பரன், நமுசி, ஹயக்ரீவன், புலோமன் முதலான தானவச் சிரேஷ்டர்களை வரவழைத்து, அவர்களை நோக்கி, 'வீரர்களே, நீங்கள் நான் சொல்வதைக்கேட்டு, பிறகு அதற்குத் தக்கவாறு காரியங்களைச் செய்யவேண்டும். எனது பிரிய சகோதரனை ஹிரண்யாக்ஷன் மாயா வராக ரூபமெடுத்துள்ள விஷ்ணுவால் சங்கரிக்கப்பட்டான். அவ்வித சத்துருவை என் சூலத்திற்கு இரையாக்கி, அவனது இரத்தத்தால் என் தம்பிக்கு தர்ப்பணஞ் செய்து திருப்தி உண்டாக்கப்போகிறேன். அடிவேர் போன்ற விஷ்ணு ஒழிந்தால், கிளைகள் போன்ற தேவாதிகள் வாடி அழிவார்கள். விஷ்ணுவுக்கு மூலம் விப்பிரர்கள், யாகங்கள், மற்றைய தர்மானுஷ்டானங்களுமே. இவற்றிற்கு நாசமேற்பட்டால், விஷ்ணுவின் பலம் குன்றும். ஆகையால் நீங்கள் பூலோகஞ்சென்று, ஆங்காங்கே சஞ்சரித்து, அந்தணர், பசுக்கள், வேதங்கள், வர்ணாசிரம தர்மங்கள் இவைகள் நிறைந்த கிராமாதிகளைக் கொளுத்தி நாசஞ்செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்தான். ஏற்கெனவே சாதுக்களைவருத்தி இம்சிப்பதில் தீவிரபுத்தியுள்ள அத்துஷ்ட வீரர்கள், வெகு உற்சாகத்துடன் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு, பூலோகமெங்கும் பரவிச்சென்று, பட்டணம், கிராமம், ஆசிரமம், க்ஷேத்திரங்கள் முதலியவற்றிலுள்ளோரைப் பலவாறு வருத்தி அழிக்கத்தலைப்பட்டனர். கோபுராதிகளை இடித்துத் தள்ளினர்; மரங்களைவெட்டி அழித்தனர். இக்கொடிய ராக்ஷஸர்களின் கொடுமை கண்டு நடுங்கின தேவர்கள் தேவலோகத்தை விட்டு வெளியேறி, பூலோகத்தில் பதுங்கி, ஒளிந்து வசித்துவந்தனர்.

ஹிரண்யகசிபு தன் சகோதரனுக்குச் செய்ய வேண்டிய உத்தரக்கிரியைகளைச் செய்வித்து, அவனது புத்திரர்களுக்குத் தேற்றரவு கூறினன். துக்கத்தால் மிகவும் வருந்திய ஹிரண்யாக்ஷனது பார்யையான ருஷாபானுவையும், தாயான திதிதேவியையும் பற்பல தத்வோபதேசங்களால் சமாதானப்படுத்தினன்.

பின்னர் ஹிரண்யனுக்கு, தான் ஜரை மரணமற்று நீடித்து வாழ வேண்டுமென்றும், எல்லா லோகங்களையும் ஜயித்து ஏக சக்ராதிபதியாய் ஆண்டு அனுபவிக்க வேண்டுமென்றும் ஆஸ்தையுண்டாயிற்று. இதற்காகக் கொடுந்தவம் புரியக் கருதி மந்தரபர்வதம் சென்று, மகா கோரமான தியானத்திலாழ்ந்தான். அவன் ஆகாயத்தை நோக்

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்து அலகையா வைக்கப் படும்.

கினவனும், கைகளை உயரத் தூக்கிக்கொண்டும், பூமியில் கால் கட்டைவிரலை ஊன்றிக்கொண்டும் நின்று, பிர்ம்மதேவனைக் குறித்து அசஞ்சலமான மனதுடன் தவம் புரியலானான். அச்சமயம் தேவர்கள் தங்கள் ஸ்தானங்களை யடைந்து வசிக்கலாயினர். இவ்வாறு தேவ வருஷங்கள் நூறு கடந்தன. அவனது சிரசிலிருந்து தபோமயமான தேஜஸ் கிளம்பி எங்கும் ஜ்வலிக்க ஆரம்பித்தது. சொர்க்கம் முதலிய சர்வலோகங்களையும் அது தகித்தது. பூகம்பமுண்டாயிற்று. சமுத்திரம், நதிகள் கலங்கின. கிருஹ நக்ஷத்திராதிகள் விழத் தலைப்பட்டன. பிரம்ம சிருஷ்டிமுழுவதும் அல்லோல கல்லோலமாகித் தவித்தது. தபோக்கினியின் பிரபாவம் தாங்கமுடியாமல் தவித்த தேவர்கள், சதுர்முகப் பிரம்மனைச் சரணமடைந்து, "பிரபுவே, ஹிரண்யகசிபுவின் தபோமகிமையால் லோகங்கள் அழியுமுன், தேவரீர் அவனுக்கு வேண்டிய வரங்களையளித்துப் பிரபஞ்சத்தைக் காத்தருள்வீராக! காலம், ஆத்மா நித்தியமாயிருப்பதுபோல், அவனும் சாசுவதமாயிருக்கக் கருதுகிறான். தபோயோக சமாதியால் உம்மைப்போல் வெகு உத்தம ஸ்தானத்திலிருக்க விரும்புகிறான். அஸுரர், தேவர், கல்பங்கள் முதலிய சிருஷ்டிக்கிரமங்களை மாற்றி வேறுவிதம் செய்ய எண்ணுகிறான். சாதுக்களின் சுகம், க்ஷேமம், அபிவிருத்தி முதலியவற்றிற்கு ஆதாரமாயுள்ள தேவரீர் இது விஷயத்தில் எது யுக்தமோ, அதைச் செய்யக்கடவீர்!" என்று பிரார்த்தித்தனர்.

இவ்வாறு வேண்டப்பட்ட கமலாஸனனும், தக்ஷன் முதலான பிரஜாபதிகளுடன் புறப்பட்டு, தயித்தியேசுவரனது ஆசிரமம் போய்ச் சேர்ந்தார். அங்குப் புற்கள், திருணங்கள், மூங்கில்கள் முதலானவற்றால் மூடப்பட்டும், மாம்ஸம், இரத்தம், கொழுப்பு இவைகள் எறும்புகளால் பக்ஷிக்கப்பட்டு, அஸ்தி மாத்திரம் மிகுந்திருக்கும் சரீரத்தோடு கூடியுமுள்ள இரணியனைப் பிரம்மன் நோக்கி, "தைத்தியேசுவரனே, உனது அருந்தவத்திற்கு மெச்சினேன். இதுகாறும் உன்போல் உக்கிர தவம் செய்தவருமில்லை; செய்யப்போவருமில்லை. நான் மிகக் களிப்படைந்தேன். வேண்டிய வரங்களைக் கேட்பாயாக" என்று கூறி, அமோகமான தமது கமண்டலு ஜலத்தால் அவனைப் புரோக்ஷித்தார்.

இதனால் இரணியனும், அம்மூங்கில் புதரிலிருந்து, யௌவனம், உருக்கிவிட்ட தங்கத்தின் காந்தி, வஜ்ரபலம் முதலிய பொருந்திய சுந்தரபுருஷனாய் வெளிக்கிளம்பி, ஹம்ஸாரூடனாய் எழுந்தருளியிருக்கும் ஸர்வலோக பிதா மகனுக்குச் சாஷ்டாங்கமாய்த் தண்டனிட்டு வணங்கி, கைகுவித்து நின்று, "ஸ்வயம் பிரபுவே! ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற குணங்களை ஆச்ரயித்து, உலகத்தைச் சிருஷ்டித்தும், காத்தும், சங்கரித்தும் வரும் பரமாத்மாவே! உமக்கு நமஸ்காரம். உமது மகிமை அளவிடக்கூடாதது. பிரபஞ்சமனைத்தும் உமது ஆதீனமாயுள்ளது. வேதங்கள், ஆகமங்கள், உபதேசங்கள், வித்யைகள் எல்லாம் உம்முடைய சரீரங்களாக இருக்கின்றன. இப்பிரம்மாண்டத்துக்கு நீரே காரண புருஷர்; நீரே பரப்பிரம்மம். எனது தவத்தால் உமக்குத் திருப்தியுண்டாயிருப்பது வாஸ்தவமெனில், நான் கேட்கும் வரத்தை யளிக்கவேண்டும். உம்மால் சிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளினின்றும் எனக்கு மரணம் நேரிடாமலிருக்க வேண்டும்; ஸுரர்களோ, அஸுரர்களோ, யக்ஷர்கள், கின்னரர் முதலானோரோ, மனிதர்களோ, மிருகங்களோ, பிராணனில்லாத வஸ்துக்களோ, எவ்வித ஆயுதங்களோ, இராத்திரியிலோ, பகலிலோ, உள்ளேயோ, வெளியிலோ எக்காலமும், எவற்றாலும், எவ்விதத்திலும் நான் சாகாம லிருக்கவேண்டும். யுத்தத்தில் எனக்கு மரணம் உண்டாகக் கூடாது. சகல பிராணிகளுக்கும்நானே பிரபுவாயிருந்து ஸமஸ்த லோகபாலர்களின் ஐசுவரியங்களைப் பெற்று, உம்மைப்போல அணிமாதி மகா சித்திகளுமடைந்து, உத்தம பதவியிலிருக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். இவ்வாறு பிரார்த்திக்கப்பட்ட பிரம்மதேவன், 'வாராய் குழந்தாய், நீ விரும்பிய வரங்கள் எந்தப் புருஷனும் அடையத் தக்கவையல்ல. என்றாலும், மிகத் துர்லபமான இவ்வரங்களை உனக்களித்தேன்' என்று கூறி மறைந்தார். இரண்யனும் மனமகிழ்ந்து, பொன் மயமான தேகம்பெற்றவனாய், தனது நகரம் வந்தான். தனது சகோதரனைச் சங்கரித்த விஷ்ணுவினிடம் முன்னினுமதிகமாய் அஸூயை பாராட்டலுற்றான்.

ஹிரண்யகசிபு தவஞ்செய்யப் போயிருக்கையில், தேவர்கள் பயந்தெளிந்து யுத்த ஸன்னாகஞ் செய்து, தைத்திய வீரர்களைத் தாக்கியடித்தனர். தானவாதிகள் உயிருக்குப்பயந்து நாலுதிக்குகளிலும் ஓடித் தப்பிப்பிழைக்க நேர்ந்தது. தேவர்கள் இரண்யனது பட்டணத்தைத் தாக்கிக் கொள்ளை

யிட்டனர். அச்சமயம் கர்ப்பவதியாயிருந்த ராஜ மகிஷியான கயாது தேவியை இந்திரன் சிறை பிடித்து அழைத்துக்கொண்டு போனான். அவளும் தன் விதியை நினைத்து, அன்றிற் பக்ஷி போல் கதறிக்கொண்டு போகையில், நாரத மகரிஷி அகஸ்மாத்தாய் அங்கு வந்து சேர்ந்தார்; பரதாரமாயும், பதிவிரதையாயுமுள்ள அவளை அவன் அவ்வாறு அழைத்துச் செல்லுதல் தகாது என்று சொன்னார். அதுகேட்ட இந்திரனும், 'ரிஷி சிரேஷ்டரே, இரணியனது மகா வீரியமுள்ள கர்ப்பத்தை இவள் தரித்திருக்கிறாள். இவளுக்குக் குழந்தை பிறந்தவுடன் அதை எடுத்துச் சங்கரித்து, பிறகு இவளை விட்டுவிடுகிறேன்' என்று பதிலளித்தான்.

உடனே நாரதரும், 'அமரேசனே! நீ கொண்டுள்ள எண்ணம் தவறு. இக்கர்ப்பத்திலுள்ள சிசுவானவன் ராகத்வேஷாதி தீக்குணங்கள் நீங்கினவனாய், பரம பாகவதோத்தமனாய் விளங்கப் போகிறான். மேலும், இவனைக் கொல்ல உன்னால் முடியாது' என்று சொல்லவே, இந்திரனும் களித்து, அவ்வுத்தமியைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, நாரதரிடம் விட்டுவிட்டுச் சென்றான். பிறகு நாரதர் அவளைத் தமது ஆசிரமம் அழைத்துச் சென்று, சமாதானம் பண்ணி, இரண்யன் திரும்பி வரும்வரையில் அங்குத் தங்கியிருக்கும்படி அவளைக் கேட்டுக்கொண்டார். அவளும் அதற்கு இணங்கினாள். மேலும், தனது கர்ப்பம் க்ஷேமமாயிருக்கும் பொருட்டும், தான் நினைத்தபோது பிரசவம் ஏற்படும் பொருட்டும் அவரது அனுக்கிரகம்பெறக் கருதி, அவள் அவருக்குச் சிசுருஷை செய்து வந்தாள். அம்மகானும் அவளது சோகத்தைப்போக்குவதற்காகவும், அவளது கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கு நல்லஞானம் உதிப்பதற்காகவும் பகவத் பக்திமார்க்கம், ஆத்மஞானம் முதலிய விஷயமான உபதேசங்களைச் செய்து வந்தார். பிறகு காலக்கிரமேண கயாது தேவி இதை மறந்தாள் என்றாலும், அவளுக்குப் பிறந்த பிரகலாதன் விஷயத்தில் இது நன்கு பலித்து, இதனால் அவன் நிகரற்ற விஷ்ணுபக்தனானான் என்பது பின்கதையால் வியக்தமாய் ஏற்படும்.

பிரமனது வரப்பிரசாதத்தால் விசேஷ பலமடைந்த ஹிரண்யகசிபு, மூன்று லோகங்களையும் ஜயித்து, லோக பாலகர்களுடைய ஸ்தானங்களை அபகரித்து, சுவர்க்கத்தை ஆக்ரமித்து, ஸர்வ ஐசுவரியங்கள் கூடிய இந்திரனது அரண்மனையில் வாசஞ் செய்துவந்தான். தேவர்கள் முதலான எல்லோராலும் வணங்கப்பட்ட பாதங்களோடு கூடினவனாய், மிக்க மகிழ்வுடன் விளங்கிவந்தான். த்ரிமூர்த்திகள் தவிர, மற்றைய லோகபாலர் முதலானோர் அவனுக்குக் கை குவித்து வணங்கி, ஏவல் செய்துவந்தனர். யாக யஞ்ஞாதி வேதோக்த கர்மங்களில் அவனே ஆராதிக்கப்பட்டு, அவிர்ப்பாகங்களைக் கிரகித்து வந்தான். இவ்வாறு பதினாலு லோகங்களுக்கும் ஏகராஜாவாயிருந்து, ஐசுவரியமத்தனாய், யதேச்சையாய் விஷய ஸுகங்களை அனுபவித்து வந்தான். இவ்வாறு வெகுகாலம் கடந்தது. இவனது அக்கிரமச் செய்கைகளிலிருந்து தேவாதிகளைக் காக்கவல்லவர் ஒருவரும் ஏற்படவில்லை. வேறு திக்கற்றவர்களாய், லோகபாலாதிகள் வைகுந்த நாதனைச் சரணமடைந்து, அவரைப் பலவாறு துதித்துப் புகழ்ந்து, தங்களது தீன நிலைமையைத் தெரிவித்தனர்; இரணியனது கொடுமைகளிலிருந்து தங்களை ரக்ஷித்தருளும்படி வேண்டிக் கொண்டனர்.

அப்போது ஓர் அசரீரி வாக்கு உண்டாகி, "தேவச் சிரேஷ்டர்காள்! பயப்படாதீர்கள். ராக்ஷஸாதமனான ஹிரண்யனது துர்நடத்தையை நானறிவேன். எப்போது அவனுக்குத் தேவர்கள், அந்தணர்கள், ஸத்புருஷர்கள், வேதங்கள், தர்மங்கள் இவற்றிலும், என்னிடத்திலும் துவேஷபுத்தி உண்டாச்சுதோ, அப்போதே அவனுக்கு நாசம் ஏற்படுவது திண்ணம். ஆனால், கொஞ்சகாலம் பொறுத்துக் கொண்டிருங்கள். மகாத்மாவாயும், பரம பாகவதனாயுமுள்ள தன் குமாரனான பிரகலாதனிடத்தில் அவன் துவேஷம் பாராட்டப் போகிறான். பிரமனது வரத்தால் எவ்வளவு பலம் பெற்றிருப்பினும், அப்போது அவனை நான் சங்கரித்து, லோகங்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணி வைக்கிறேன்." என்று அபயப்பிரதானம் செய்தது. இதுகேட்ட தேவர்கள் மனச்சமாதான மடைந்து, தத்தமிருப்பிடம் போய்ச் சேர்ந்தனர்.

பிறகு இரணியனுக்கு நான்கு புத்திரர்களுதித்தனர். அவர்களுள் பிரகலாதன் குணத்தால் சிரேஷ்டனாயிருந்தான். வணக்கம், சீலம், சத்தியம், ஸர்வபூததயை, விப்பிர விசுவாஸம், பித்ரு பக்தி, இந்திரியஜயம் முதலிய பலவித நற்குணங்கள் பொருந்தியவனாயும், விஷ்ணுபக்தி நிறைந்தவனாயுமிருந்தான் காமக்குரோதாதி இழிகுணங்

கள் ஒழிந்தவனுயும், உலக சுகங்களிலிருந்து மனதைத் திருப்பினவனுயும், வைராக்கியம் கைக்கொண்டு, சாந்த மனத்துடன் ஹரிகுணங்களைக் கேட்பதிலும், கீர்த்தனம் பண்ணுவதிலும் அவன் காலத்தைக் கழித்து வந்தான். அவனிடம் அஸுரகுணம் சிறிதும் காணப்படாமல், அவன் தேவகுண பரிபூர்ணனுப் விளங்கிவந்தான் ; பாகவதர்களுடன் ஸத்ஸங்கம்செய்து, கோவிந்தனது குணுனுபவத்தில் ஆழ்ந்து, பேராநந்தமடைந்து வந்தான்.

சுக்கிராசாரியர் அஸுரர்களால் வரிக்கப்பட்டு, அவர்களுக்குப் புரோஹிதரா யிருந்துவந்தார். அவரது புத்திரர்களான **சண்டன், அமர்க்கன்** என்பவர்கள் இரணியனது அரண்மனையில் வசித்து வந்தனர்; பிரகலாதனுக்கும், மற்றைய பாலர்களுக்கும் வித்தியாப்பியாசம் செய்வித்து வந்தனர். அவர்களால் கற்பிக்கப்பட்டு வந்த ராஜநீதிகளும், உபதேசங்களும், பிரகலாதனுக்குப் பிடிக்கவேயில்லை. **தான்,** பிறன் என்கிற துரபிமானத்தை ஆசிரயமாயுடைய ஞானுபதேசத்தில் அவன் மனம் சிறிதும் நாடவில்லை.

இவ்வாறிருக்கையில், ஒரு ஸமயம், இரணியன் தன் புதல்வனை வரவழைத்து, மடியில் ஏற்றிவைத்து, உச்சி மோந்து 'குழந்தாய், நீ இதுவரையில் கற்றுக்கொண்டதில் யாது நல்ல மார்க்கமென்று அறிந்தாய். சொல்லு கேட்போம்' என்று வினவினுன். உடனே பிரகலாதன், 'அஸுரசிரேஷ்டனே, கேளும். **நான், எனது** என்கிற அஹங்கார மமகாரங்கள் பிராணிகளின் மனத்தைக் கலக்கிவருத்தக் கூடியவை. பாழுங்கிணர்போன்ற கிருகஸ்தாசிரமவாஸம் ஆத்மநாசத்தை விளைவிக்கக் கூடியதே. ஆகையால் இதை விட்டு விட்டு, வனத்தை யடைந்து ஹரி பஜனம் செய்வதே உத்தம மார்க்கமாகும்!' என்று பதிலளித்தான். தான் சிறிதும் எதிர்பாராத இவ்வித வார்த்தை இரணியின் காதில் இடிபோல் விழுந்தது. இருந்தாலும், அவன், ஏதோ பாலர்களின் புத்தியானது பிறர் புத்திகளால் பேதிக்கப் படுகிறது என்று நினைத்துச் சிரித்து, குரு வீட்டிற்கு அழைத்துப்போய் அவனுக்கு நற்புத்தி ஊட்டி விஷ்ணு பக்ஷத்தைச் சேர்ந்தவர்களால் அவன் மனம் கலைபட்டுத் தனக்கு விரோதமான வழியிற் செல்லாமலிருக்கும்படி செய்யவேண்டுமென்று கட்டளையிட்டான்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ப்ரதிஞ்ஞா யௌகந்தராயணம்

[வாஸவதத்தா பரிணயம்)

உடனே நம்மரசன் குதிரை விட்டிறங்கி, தெய்வத்துக்கு வணங்கி, வீணையைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அச்சமயமே, பின்புறத்தில் ஒரு பெரிய சிங்கம் தோன்றிற்று. அதுவும் மேற்கூறிய பொய்யானை வைக்கப்பட்டிருந்த உத்தேசத்தைப் பூர்த்தி செய்வதற்கென்றே ஏற்பட்டிருக்க வேண்டும். அச் சிங்கத்தைக் கவனிப்பதற்காக நாங்கள் திரும்பினேம். அதற்குள் யானைச் சண்டைத் தலைவர்களும், மற்றைய வீரர்களுமாக நூறுபேர் அடங்கியுள்ள யந்திர ரூபமான அந்த யானை எங்களுக்கு எதிரில் வந்தது. உடனே அதனுள்ளே ஒளிந்திருந்தவர்கள் வெளிக்கிளம்பி, எங்களைத் தகைந்து துரத்த ஆரம்பித்தனர்.

அச்சூழ்ச்சியை அறிந்த வத்ஸராஜன் எங்களை ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி அழைத்து, 'நீங்கள் பயப்படாதீர்கள் ; இதோ எனது பராக்கிரமத்தால் இவ்வித வஞ்சனை செய்தோரை வருத்தி, நமக்கேற்பட்டுள்ள ஆபத்தை நொடிப்பொழுதில் தீர்த்து வைக்கிறேன்' என்று கூறி, சத்துரு ஸைன்யத்தில் பிரவேசித்தார். அரசனது நோக்கமறிந்து வெகு விசித்திரமாய்ச் சலித்து வந்த தமது அசுவத்தின் மீதிருந்து, அவர் வெகுவாறு போராடி, தமது பராக்கிரமத்தை வெளியிட்டு, சத்துரு ஸைந்யத்தைத் தாக்கி வருத்தினுர். எனினும், அவர் ஒருவராய்ப் பலரை எதிர்த்து வெகு நேரம் இடைவிடாது சண்டை செய்தமையால், களைப்படைந்து, சாயங்கால வேளையில் மூர்ச்சித்து விழலானுர். உடனே சத்துரு வீரர்கள், அவரை ஒரு சாமான்ய மனிதனைப்போல் பாசங்களால் கட்டி இம்சித்தனர்". இவ்வாறு ஹம்ஸகன் சொன்னதைச் செவியுற்ற யௌகந்தராயணன் வத்ஸராஜனுக்கு அவ்விதம் நேர்ந்தது பற்றித் துக்கிக்கலானுன். ஹம்ஸகனை நோக்கி, 'பிறகு அவர் எப்போது மூர்ச்சை தெளிந்து எழுந்தார்' என்று வினவ, ஹம்ஸகனும், 'அத்துஷ்டர்கள் அவரது சரீரத்தைக் கட்டி முடித்ததும், அவருக்குப் பிரஞ்ஞை வந்தது. தக்ஷணம் அவர் ஏற்கெனவே செய்து காட்டியுள்ள பராக்

கிரமச் செயல்களைக் கண்டு நடுங்கிய சைநியர்கள் நாலு பக்கமும் ஓடத்தலைப்பட்டனர். அவர்களுள் துஷ்டன் ஒருவன், கீழே கிடக்கும் வத்ஸராஜனது சரீரத்தைத் தெற்கு முகமாகத் திருப்பி, அவரது ஆபரணங்களைக் கழற்றிக்கொண்டு, பின் கொஞ்சதூரம் சென்று உருவிய கத்தியுடன் வெகு வேகமாய் ஓடிவந்தான்; அச்சமயம் ப்ரத்யோதனது முக்கிய மந்திரியாகிய ஸாலங்காயனன் அவ்விடம் வந்தான்; வத்ஸராஜன் விஷயமாய் ஒருவரும் அவ்வித ஸாகஸ காரியம் செய்யக்கூடாது என்று தடுத்து, அரசனுக்கு வணங்கி, அவரது கட்டுகளை அவிழ்க்கச் செய்தான். பிறகு அவன் அவருக்குச் சாந்த வார்த்தைகள் கூறி, அவரைத் தக்க வாஹனத்தின் மீதேற்றி வைத்து, உஜ்ஜயினீ பட்டணத்திற்கு அழைத்துச் சென்றான்'.

இது கேட்ட யௌகந்தராயணன், வத்ஸராஜனிடம் ஸாலங்காயனன் அவ்வாறு தயையுடனும், கௌரவ புத்தியுடனும் நடந்ததுபற்றி அவனது பெருந்தன்மையை மெச்சி, அரசனுக்கு அத்தியந்த நாசம் ஏற்படாதது பற்றி ஒருவாறு மனத்தேறுதலடைந்தான். வத்ஸராஜன் சிறைபிடிக்கப்பட்டு, ப்ரத்யோதனது முன்னிலையில்கொண்டுபோகப்பட்டபொழுது, அவன் மனம் பலவாறு தபிக்கும் என்பதைப் பற்றிப் பலவிதமாய்ச் சிந்தித்து துக்கித்தான். "கஷ்டம் என்னே! நான் ஏற்கெனவே சங்கித்தபடியே, பெரும் அநர்த்தம் விளைந்துவிட்டதே; ப்ரத்யோதனது மனோரதமோ அவன் எண்ணக் கூடியதற்கு மேலாகப் பலித்துவிட்டதே! இவ்வித ஸங்கடங்களை அனுபவித்தாலும், நமது அரசன் மகாதீர ஸ்வபாவமுள்ளவராகையால், உயிருடனிருக்கிறார். என்னே காலகதி! ஏற்கெனவே தாம் அவமதித்துள்ள ப்ரத்யோதன் முன் எவ்வாறு நிற்பார்? அவன் கூறக்கூடிய பரிகாஸ வார்த்தைகளை எவ்வாறு கேட்டுச் சகிப்பார்? தம்மை இவ்வாறு வஞ்சித்துச் சிறைபிடித்துள்ள ப்ரத்யோதனதுமீது ஏற்படக்கூடிய அடங்காக் கோபத்தை எவ்வாறு உள்ளடக்கி நடப்பார்? சிறைபிடிக்கப்பட்டவன் கௌரவமாய் நடத்தப்பட்டாலும் சரி, இழிவுடன் அவமதிக்கப்பட்டாலும் சரி, தன்னை ஜயித்தவனிடம் மிகப் பணிவுடன் ஒழுக வேண்டுமல்லவா? வத்ஸராஜன் ப்ரத்யோதன் விஷயமாய் இவ்வித கீழ்மையை எவ்வாறு வகிப்பார்?" என்று யௌகந்தராயணன் பரிதபிக்கலானான்.

மந்திரியானவன் இவ்வாறு துக்கித்துக் கொண்டிருக்கையில், விஜயா என்பவள் வந்து, மங்கள ஸூத்திரத்தைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்தாள். அம்மங்கள ஸூத்திரம் பிரயோஜன மற்றதாய்ப் போனதுபற்றி துக்கித்துவிட்டு, யௌகந்தராயணன் அதை மீண்டும் எடுத்துப் போகும்படி கட்டளையிட்டான். அதன் விபரம் அறியாது, விஜயா திகைத்துநின்று, பெரிய ராணியிடம் யாது தகவல் சொல்வதென்று கேட்டாள். அதன்மேல் யௌகந்தராயணன் எவ்விதம் அரசனது விருத்தாந்தத்தைச் சொல்லியனுப்புவதெனத் தோன்றாமல், தனக்குள்ளே ஆலோசித்து, மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, விஜயாவின் காதில் இரகசியமாய்ச் சொன்னான். பின்பு, அவளைநோக்கி, "பெரிய ராணி புத்திரவாத்ஸல்யம் நிறைந்தவள். அரசனது நிலைமையைத் திடீரென்று கேட்டால், மிகவும் தவிப்பாள். ஆகையால் நீ வெகு சாவதானமாய் இந்தத் தகவலைத் தெரிவிக்க வேண்டும். முதலில், யுத்தத்தில் நேரக்கூடிய ஸம்பவங்களைப் பற்றியும், ஜய அபஜயங்கள் நிச்சயித்துக் கூறத்தக்கனவைகளல்ல வென்றும் கூறி, அவள் மனது கலக்கமடைந்து, தனது புத்திரனுக்கு நாசம் ஏற்பட்டிருக்குமோ வென்று சந்தேகிக்கக் கூடிய நிலைமையில் இருக்குமாறு செய்ய வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் அரசன் சிறைபிடிக்கப்பட்டார் என்று கூறினால், மரணத்தைக் காட்டிலும் அந்த அவஸ்தை கொஞ்சம் மேலானது என்று அவள் தேறுதலடையக்கூடும்" என்று கூறி அனுப்பினான்.

அப்பால் யௌகந்தராயணன் ஹம்ஸகனைப் பார்த்து, அவன் ஏன் வத்ஸராஜனுடன் உஜ்ஜயினீ போகவில்லையென்று வினவ, ஸாலங்காயனன் தன்னைக் கௌசாம்பிக்குப் போய், வத்ஸனது தகவல் தெரிவிக்கும்படி கட்டளையிட்டதால், தான் திரும்பிவந்து விட்டதாய் அவன் பதில் கூறினான். இவ்வாறு ஸாலங்காயனன் செய்யக் காரணம் யாதிருக்கக் கூடுமென்று யௌகந்தராயணன் பலவாறு தர்க்கித்தான். "ஒருக்கால் தான் செய்துள்ள காரியத்தின் பெருமையை எங்களிடம் காட்டுவதற்காகவா, அல்லது வத்ஸனிடமுள்ள அன்பினாலா, அல்லது அவனது ஆப்த ஸேவகனான ஹம்ஸகனையும் அவனை விட்டுப் பிரித்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலா அவன் இவ்வாறு செய்தான்?" என்று பலவாறு யோசனை செய்துவிட்டு, ஹம்

ஸகனை நோக்கி, 'நல்லது, அரசன் என்னை உத்தேசித்து ஏதாவது சொன்னாரா?'' என்று வினவினான். அரசன் மற்றைய மந்திரிகளைப் பற்றி ஒன்றும் கூறாமல், யௌகந்தாரயணனிடம் போய்த் தகவலைத் தெரிவிக்கும்படி ஹம்ஸகனிடம் சொன்னதைக் கேட்டு, யௌகந்தராயணன், அரசனுக்குத் தன்னிடமுள்ள கௌரவ புத்தியை மெச்சி, தானே அவர் விஷயத்தில் தக்க பரிஹாரம் தேட வேண்டியிருக்க, அவரும் அவ்விதமே அபிப்பிராயப் படுகிறார் என்று தெரிந்துகொண்டான்; உடனே தான் மாறுவேடம் பூண்டு, உஜ்ஜயினீ சென்று, அவரைக் கண்டு ஆலோசிக்கத் தீர்மானித்தான். 'சத்துரு நகரத்தில் காராகிருகத்திலோ அல்லது வனத்திலோ அவர் எங்கிருந்தாலும், அவருடன் கூட இருந்து, தன் காரியம் ஸித்தித்து விட்டது என்று மகிழ்வடைந்துள்ள ப்ரத்யோதனனைப் பலவித உபாயங்களால் வஞ்சித்து, மீண்டும் எனது அரசனை மறுபடியும் கௌசாம்பிக்கு அழைத்து வருவேன். ஒருக்கால் துஷ்
தியால் அவர் பிராணத்தியாகம் செய்தாலும்,
னும் அங்குச் சென்று, அவரது பக்கத்தி
ந்து உதவி புரிவேனாக!' என்று மனதைத்
'படுத்திக்கொண்டான்.

அப்போது பெரிய ராணி தன் புத்திரனது விருத்தாந்தத்தைக் கேட்டுத் துக்கித்துவிட்டு, விஜயாவை அனுப்பி, 'இவ்வித ஆபத்து காலத்தில் சத்துரு செய்துள்ள வஞ்சனைக்குத் தக்க சிக்ஷை செய்து காரியசித்தி பெறுவது அவசியம். இது விஷயத்தில், வத்ஸராஜனது பிராண ஸ்நேகிதனும், முக்கிய மந்திரியுமாகிய யௌகந்தராயணன் தக்க ஏற்பாடுசெய்து வத்ஸனை மீட்டுவருவானாக! எவ்வித சங்கடங்களிலும் தைரியத்தைக் கைவிடாது, தனது புத்திக் கூர்மையாலும், லோக தந்திர ஞானத்தாலும் அந்தந்தக் காலோசித உபாயங்களால் அபீஷ்டமான காரியத்தைச் சாதிக்கவல்லவன் அந்தத் தீரனே!'' என்று செய்தி சொல்லியனுப்பினாள்.

இராணியார் இவ்வாறு தன்னிடம் வைத்துள்ள வாத்ஸல்யத்தையும், கௌரவ புத்தியையும் யௌகந்தராயணன் மெச்சினான்; வத்ஸராஜனும் தன்னைப் பார்க்கும்படி ஹம்ஸகனிடம் சொல்லியனுப்பினதையும் நினைந்தான்; தனக்குள்ளே சற்று ஆலோசித்து, மனதில் ஸங்கற்பம் செய்துகொண்டான். உடனே அவன் சுத்த நீரால் ஆசமனம் செய்து, விஜயாவை நோக்கி, 'நமது அரசன், இராகுவால் சந்திரன் பிடிக்கப்படுவதுபோல், சத்துருவால் சிறைபிடிக்கப்பட்டிருந்த போதிலும், நான் அவரை விடுவித்து மீட்காவிடில், என் பெயர் யௌகந்தராயணனில்லை' என்று சபதங் கூறினான். இதுகேட்டு, விஜயாவும் யௌகந்தராயணனது இவ்வித பிரதிஞ்ஞையை மஹாராணியிடம் தெரிவிக்கச்சென்றாள்.

பின்னர், அரண்மனை வேலைக்காரன் ஒருவன் அவசரமாய் ஓடிவந்து, "மந்திரி சிரேஷ்டனே! ஒரு பெரிய ஆச்சரியம் நிகழ்ந்துள்ளது. அரசனது க்ஷேமத்தைக் குறித்து பிராம்மண போஜனம் நடந்துவருகையில், பைத்தியக்கார வேடங்கொண்ட ஒரு அந்தணன் அங்குவந்து, "உங்களிஷ்டப்படி சாப்பிடுங்கள். இதெல்லாம் அரசகுலத்தின் க்ஷேமத்தின் பொருட்டே ஆகும் என்று கூறிக்கொண்டே மறைந்து விட்டான்'' என்று தெரிவித்தான். யௌகந்தராயணனும் இதைக்கேட்டுக் களித்திருக்கையில், ஒரு விப்பிரன் அவனிடம் வந்து, 'பிரபுவே, இதோ நான் அபூர்வமான ஆடைகள் கொண்டு வந்திருக்கிறேன். வியாஸபகவான் இவற்றைக் கொண்டு, உன்மத்தன் வேஷந்தரித்து வந்து, பின்னர் கழட்டிப் போட்டுவிட்டுப் போனார். எவரும் அறியக்கூடாத வண்ணம் மாறுவேடம் பூண்டு சஞ்சரிப்பதற்கு இவை மிகப் பயன்படும்' என்று கூறினான். யௌகந்தராயணன் அவற்றை வாங்கி வேடம் பூண்டான். அதனால் தனது பூர்வரூபம் சிறிதும் வெளிப்படாவண்ணம், மாறித் தோன்றினது பற்றி ஆச்சரியமுற்றான்; வியாஸபகவான் தமது வம்சத்தவனான வத்ஸராஜனை இரட்சிக்கக் கருதியே அவ்வித ரூபம் கொண்டுவந்து, தான் வத்ஸராஜன் விஷயத்தில் அனுஷ்டிக்க வேண்டிய விஷயத்தில் ஒரு வழிகாட்டியிருப்பதாகக் க[illegible]ருதினான்; அந்த ஆடைகளின் ஸகாயத்தால் [illegible] தான் கருதிய காரியம் பலித்துவிட்டதென்[illegible]றே நினைத்தான். அப்போது ஒரு வே[illegible]லைக்காரி வந்து, பெரிய ராணி அவனைப் பா[illegible]ர்க்க விரும்புவதாய்த் தெரிவித்தாள். உடனே [illegible] யௌகந்தராயணன் அடியிற்கண்டவாறு [illegible] சிந்தித்துக்கொண்டு இராணியைப் [illegible]க்கச்சென்றான்.

"[illegible] கட்டையைக் கடைந்து தீ உண்டாக்கலாம்; பூ[illegible]யை வெட்டி எவ்வளவு ஆழத்திலிருந்தும் ஜ[illegible]லம் எடுக்கலாம்; உத்ஸாகமுள்ளோர் சாதிக்கக்கூடாத காரியம் ஒன்றுமில்லை; சரியாகச் செய்யப்பட்டால் எவ்வித பிரயத்தினங்களும் பலிக்கும்.''

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே மிகலூக்குந் தன்மை யவர்.

கௌசாம்பியில் இவ்வாறிருக்க, உஜ்ஜயநீயில், வாஸவதத்தையின் விவாக விஷயமாய்த் தினந்தோறும் பல மன்னர்களிடமிருந்து தூதர்கள் வரத்துப்போக்கா யிருந்தனர். ஒருவித நிச்சயமும் ஏற்படாமலிருந்தது. இராஜதூதர்களை உபசரிக்கும்படி ஏவப்பெற்ற பரிஜனங்கள் வெறுப்படைந்து, 'எத்தனையோ மன்னர்கள் நமது அரசகுமாரியை மணம்புரிவதாய்ச் சொல்லி யனுப்பினார்களே. அவர்களிடத்தில் வரனுக்குரிய குணங்களில்லையா? இருந்துதான் நமது அரசன் அவற்றை அறியவில்லையா? இப்போது வந்துள்ள ஜைவந்தி என்பவனை விசேஷ மரியதையுடன் உபசரிக்கும்படி நம் வேந்தன் ஆஞ்ஞாபித்திருக்கிறார். இவன் வந்த காரியமாவது கைகூடினால் தேவலை. தெய்வானுகூலம் இல்லாததால்தான் வாஸவதத்தையின் விவாகம் இவ்வளவு தடைபட்டு வருகிறதுபோலும்'' என்று கூறலுற்றனர்.

இவ்வாறிருக்கையில் ப்ரத்யோதன், மற்றைய மன்னர்கள் தலைகுனிந்து தன் பாதங்களில் வணங்கி வந்தாலும், வத்ஸராஜன் மட்டில் யானைகளை வசியம் செய்யும் சாமர்த்தியத்தால் அகங்கொண்டு தன்னை வணங்காம லிருப்பதுபற்றி துக்கித்தான். அப்போது அவனது ஆப்த ஸேவகன் (கஞ்சுகி) அவனிடம் வந்து, ஜைவந்தி என்னும் தூதனைத் தக்கவாறு வரவேற்று உபசரித்ததாய்க் கூறி, விவாக விஷயமாய் ஏதோ சொல்ல விரும்புவதாய் முகஜாடையால் தெரிவித்தான். அவன் மனத்திலுள்ளதைப் பயப்படாது தெரிவிக்கும்படி அரசன் கேட்க, கஞ்சுகியும் 'வேந்தே, பிரதிதினமும் உயர்குல மன்னர்கள் பல[illegible]மிருந்து கல்யாணத்தைப் பற்றி தூதர்கள் வந்[illegible]கொண்டே இருக்கிறார்கள். தாங்கள் ஒருவரையும் [illegible]ராகரிக்கவும் இல்லை; அல்லது ஏற்றுக்கொள்ள[illegible]ல்லை. இது ஆச்சரியமா யிருக்கிறது'' என்று [illegible]வித்தான். இதுகேட்ட ப்ரத்யோதன், 'நீ கூறி[illegible]து உண்மையே. வாஸவதத்தையினிடம் என[illegible]ள்ள அளவற்ற வாத்ஸல்யத்தால், மருமகன் வி[illegible]த்தில் மிக்க உயர்வுற்ற குணங்கள் இருக்கவேண்டு[illegible]ன்ற [illegible]ான் பேராசைகொண்டு, மனதில் நிச்சயம் ஏற்படாமல் தயங்குகிறேன். முதலில் உத்தம குலமிருக்க வேண்டும் பிறகு கிருபையும், ஸ்திரீகள் விரும்பத் தக்க சௌந்தரியமும் விசேஷ பராக்கிரமமும் [illegible] இருக்கவேண்டும்'' என்று கூறினான்.

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

சென்னை இராஜதானியில் கல்வியின் ஸ்திதியும் முன்னேற்றமும்:—1925 மார்ச்சு 31-தேதியில் 43341 ஆரம்பப் பாடசாலைகளும் 1,838,436 பிள்ளைகளும் இருந்தனர். இதற்காக செலவு ரூ. 141·14 லட்சம் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடத்தால் நேர்ந்த செலவு ரூ. 325-3 2, ஒவ்வொரு பையனுக்கும் செலவு ரூ. 7-9-7. நடைமுதல் வருஷத்தில் கல்வியில் மொத்தச் செலவு ரூ. 390·39 லட்சம்.

நடுத்தரக் கல்வி

நடுத்தரக் கல்விபோதிக்கும் ஆண் பாடசாலைகள் 494 லிருந்து 506-க்குப் பெருகின 17 புதுப் பள்ளிக்கூடங்கள் திறந்துவைக்கப்பட்டன. 5 பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டோ, தனிநபர் பள்ளிக்கூடங்களாகவோ கருதப்பட்டோ போயின. புதிதாய்த் திறக்கப்பட்டவைகள் 4 லோகல் போர்டின் கீழும், 3 முனிசிபாலிட்[illegible]கள் கீழும், பாக்கி 10 தனிப்பட்ட நபர்கள் ப[illegible]வையிலும் இருக்கின்றன. 330 பள்ளிக்கூடங்[illegible] எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குப் பிள்ளை[illegible] அனுப்பின. 314 இடங்களில் பரீட்சை நடந்தது. 14,149 பிள்ளைகள் பரீட்சிக்கப்பட்டார்கள். இவர்களில் 9434, முதல் வருஷ மாணவர்கள். பரீட்சைக் கட்டணம் இல்லாமல் 73 தாழ்ந்த வகுப்புப்பிள்ளைகள் பரீட்சைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். இவர்களுள் 17 பேர் தேறினதாகக் கருதப்பட்டார்கள். நடுத்தரக் கல்விச்சாலைகளின் மொத்தச் செலவு 63·08 லட்சம் ரூபாய். அதில் 100-க்கு 27 வீதம் சர்க்கார் பணமும், 58-வீதம் சம்பள வசூலி லிருந்தும், 15-வீதம் வேறு வகைகளிலிருந்தும் செலவாயிற்று.

ஆரம்பக் கல்வி

சென்னை ஆரம்பக் கல்வி சட்டத்தின் திட்டப்படி முன்னமேயே கட்டாயக்கல்வி 13-முனிஸிபாலிட்டிகளில் ஏற்பட்டிருந்ததற்குமேல் இன்னும் இரண்டு முனிஸிபாலிட்டிகள் ஏற்படுத்தின. சென்னை நகரில் கட்டாயக் கல்விமுறை அனுஷ்டானம் யோசனையில் இருந்துவந்தது. கிராமாந்தரங்களில் ஆரம்பக் கல்வியை வேகமாகப் பரவச் செய்வதற்காக கல்வி வரி போட்ட 50-தாலுகா போர்டுகளுக்கு அங்குரார்ப்பணமாக [illegible]தவிப்பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

218376.